கல்கி

KALKI
24.7.94
ரூ. 3.00



ஆஸிட் அரசியல்!

- சந்திரலேகா பேட்டி


பிளேடு விழுங்கிய பின்னால்...



தேவ ராஜுலு

மணலியில், ஐ.டி.ஐ. படிக்கும் மாணவன் தேவராஜுலு, வாயில் விளையாட்டாய்(?) வைத்திருந்த பிளேடை, அசந்தர்ப்பமாய் விழுங்கி விட்டான். இரு பக்கமும் முனை மழுங்காத முழு பிளேடு!

வீட்டுக்குப் பக்கத்திலுள்ள தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு போக, அவர்கள் செய்வதறியாமல் திகைக்க, சென்னை பொது மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தான் அந்தப் பையன்.



அப்புறம் என்ன நடந்தது? சொல்கிறார் அங்கு காது, மூக்கு, தொண்டை பிரிவின் தலைவரான டாக்டர் பி.எஸ். சங்கரபாண்டியன் :

"மூக்கில், காதில், தொண்டையில் எத்தனையோ விதமான பொருட்கள் உள்ளே போய், அவற்றை வெளியே எடுத்திருந்தாலும், தேவராஜுலு கேஸ் எனக்குச் சற்று சிரமமாகத்தான் இருந்தது. காரணம், உள்ளே போயிருந்தது கூர்மையான முழு பிளேடு!

"எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததில், கழுத்தின் இடது புறத்தில் பிளேடு இருப்பது தெரிந்தது. வாய்க்குள்ளிருந்து கீழே போன பிளேடு, தொண்டை முடிந்து, உணவுக் குழல் தொடங்கும் இடத்தில் மிக அபாயகரமாக உட்கார்ந்திருந்தது. லேசான அழுத்தம் கொடுத்தால் கூட, பிளேடு தொண்டைக்குள் இருக்கும் ரத்தக் குழாய்களில் எதை யாவது வெட்டி விட, உயிருக்கே ஆபத்து ஏற்படும் வாய்ப்பு இருந்தது.

"மயக்க மருந்து கொடுத்து, ஆபரேஷனுக்கு தேவராஜுலுவைத் தயார் செய்தேன். பிளேடு, தொண்டையிலிருந்து, உணவுக் குழலுக்குப் போய் விட்டால், நான் ஆபரேஷன் செய்ய முடியாது. அதற்கென வயிறு, குடல் சிகிச்சை நிபுணரான டாக்டர் ரத்தினசாமியும் என்னுடன் இருந்தார்.

"கழுத்தின் இடதுபுறம், மேற்பகுதியில் நாலு இஞ்ச் அளவுக்கு ஆபரேஷன். முதலில் தோல், அடுத்து திசுக்கள், அடுத்து தசைப்பகுதி இப்படி படிப்படியாய், வெகு ஜாக்கிரதையாய் வெட்டிப் பார்த்துக் கொண்டே சென்றேன். பிளேடைத் தப்பித் தவறிக் கூட அசைத்து விடக் கூடாது என்பதால் மிக மிக எச்சரிக்கையாகச் செயல்பட்டேன். உணவுக் குழாய்ப் பகுதிக்கு வந்ததும், சிறிதாய் ஒரு கறுப் புக் கோடு போலத் தென்பட்டது. அதுதான் பிளேடு என்று தெரிந்து விட்டது.

"மென்மையாய் அப்பகுதியைக் கத்தரித்து, சர்ஜிகல் உபகரணம் கொண்டு, மிக மெதுவாய் பிளேடைப் பிடித்து வெளிப்பக்கமாய் நகர்த்தினேன்.

"ஒன்னரை மணி நேரம் நடந்த ஆபரேஷன் வெற்றி. நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒரு பேராபாயத்திலிருந்து பிழைத்து விட்டான் தேவராஜுலு."

தேவராஜுலு ஏன் பிளேடை வாயில் போட்டுக் கொண்டு சுவைத்தார்...? மில்லியன் டாலர் கேள்வி!

பேட்டி : **மௌலி**



• மக்ஸைஸாய் விருதுபெறும் கிரண்பேடி
(படம் - நன்றி : எகனாமிக்டைம்ஸ்)

மூளைச் சலவையை முறியடித்தார்!

போலீஸ் அகாடமியில் எங்களுக்குப் பயிற்சி நடந்து வந்த சமயம்... அங்கிருந்த ஆசிரியர்கள் எல்லோருமே கிரண்பேடி பயிற்சிக் காலத்தில் எப்படிப் பிரகாசித்தார் என்று கூறுவார்கள். சக ஆண்களை எல்லாம் விட திறம் படைத்தவராய் அவர் இருந்ததைக் குறிப்பிடுவார்கள்.

சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றி பெற்ற பெண்களையெல்லாம் இன்கம்டாக்ஸ், கஸ்டம்ஸ் போன்ற பிரிவுகளுக்குப் போகச் சொல்லி 'அட்வைஸ்' செய்து கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் அதனை எதிர்த்துக் குரல் எழுப்பிய முதல் பெண் கிரண்பேடி. 'அரசியல் சட்டப்படி எந்தப் பணிக்கும் ஆண், பெண் என்று வித்தியாசம் பாராட்டக் கூடாது' என்பதைச் சுட்டிக்காட்டி, உறுதியாய்க் காக்கிச் சட்டை மாட்டிக் கொண்டவர். இதையெல்லாம் கேள்விப்பட்டிருந்த எங்கள் பயிற்சிக் குழு உறுப்பினர்கள் இருபது பேருக்கும் கிரண்பேடியை எப்படியாவது சந்திக்க வேண்டும் என்று ஆசை வந்து விட்டது.

பயிற்சி முடிந்து 'பாரத தரிசனம்' சென்ற போது டெல்லியில் அவரைச் சந்தித்தோம். அப்போது பார்லிமென்ட் வீதி காவல் நிலையக் கமிஷனராக இருந்தார் அவர். சுமார் பதினைந்து நிமிடங்கள்தான் எங்களுடன் பேசியிருப்பார்... ஆனால் அதற்குள் அவர் சொன்னவை, எங்களுக்குப் பெரிதும் உற்சாகம் ஊட்டும் வகையில் அமைந்திருந்தன.

நாங்கள் கேட்ட கேள்விகளுக்கு பட்டு கத்தரித்தாற்போல் பதில்கள் சொன்னார். எங்கள் உடன் 'கைடா'க வந்திருந்த டி.ஐ.ஜி. ராங்க் உயர் அதிகாரி, 'பெண் ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்குப் புடைவையையே சீருடையாக வைப்பது நல்லது. அது பெண்மைக்குரிய நளினத்தைக் காப்பாற்றுவதுடன் பொது மக்களின் நம்பிக்கையையும் பெற்றுத் தரும்..' என்ற ரீதியில் பேசினார். "நீங்களே புடைவையைச் சீருடையாக்க ஏன் சிபாரிசு செய்யக் கூடாது...?" என்று கிரண்பேடியிடம் கேட்கவும் செய்தார்.

இதற்குத் திருமதி பேடி மிகத் துணிச்சலாகப் பதில் சொன்னதைக் கண்டு நாங்கள் அசந்து போனோம் :

"எங்கள் புறத்தோற்றத்தை முன் நிறுத்தி மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டிய அவசியமில்லை. கடமைகளைச் சரிவர செய்வதன் மூலம்தான் அதைச் சாதிப்போம்" என்றார்.

உயரதிகாரி என்றும் பாராமல் துணிந்த, நேர்மையான பதிலை எத்தனை பேரால் சொல்ல முடியும்!

சில வருடங்களுக்கு முன் அகில இந்திய அளவிலான பெண் ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு ஒரு பயிற்சித் திட்டம் ஏற்பாடு செய்திருந்தார்கள். அச் சமயம் கிரண்பேடியைச் சந்திக்கலாம் என்று ஆவலுடன் இருந்தோம். ஆனால் அந்த நிகழ்ச்சிக்கு அவர் அழைக்கப்படவேயில்லை! 'கிரண்பேடியை ஓர் உதாரணமாக நீங்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதால்தான் அவரை அழைக்கவில்லை..' என்று காரணம் வேறு சொல்லப்பட்டது!

ஆனால் பயிற்சியின் இறுதி நாளன்று எங்களுக்கு இனிய அதிர்ச்சி. அழைப்பு அனுப்பப்படாவிட்டாலும் தாமே வந்து விட்டார் கிரண்பேடி. வேறு வழியின்றி அவரைப் பேச அனுமதித்தார்கள். அன்று அவர் ஆற்றிய முக்கால் மணி நேர உரை, 'பெண் ஐ.பி.எஸ். அதிகாரிகள் எப்படி தாங்கள் பெண்கள் என்பதை மறவாது நடந்து கொள்ள வேண்டும்' என்ற முந்தைய தினங்களின் மூளைச் சலவையை அப்படியே முறியடித்தது!

— திலகவதி ஐ.பி.எஸ்.

கம்ப்யூட்டர் கல்வி: ஜெயிப்பதற்கு ஒரு திட்டம்!



'வின்னர் - 2000' பயிலும் மாணவர்கள்

'கம்ப்யூட்டரா? கிலோ என்ன விலை?' என்று கேட்கும் சின்னஞ்சிறு ஊரில் நீங்கள் இருக்கிறீர்களா?

பெரிய டவுனுக்குப் போய், பல வருஷ சேமிப்பைச் செல வழித்துத்தான் கம்ப்யூட்டர் குறித்த அடிப்படை அறிவு பெற முடியும் என்ற பரிதாப நிலையா உங்களுடையது..?

"கவலை வேண்டாம்!" என்கிறார் கிரிஸ்டல் கம்ப்யூடெக் நிறுவனத்தைச் சேர்ந்த ராஜ்.

'வின்னர் - 2000' என்ற ஒரு திட்டத்தை வகுத்துள்ளது கிரிஸ்டல் கம்ப்யூடெக். இது ஒரு கம்ப்யூட்டர் பாடத் திட்ட Module. Module என்றால் ஒரு குறிப்பிட்ட நோக்குடன் தயாரிக்கப்பட்ட கம்ப்யூட்டர் திட்டம்.


"ரூ.35,000 செலவில் ஒரே ஒரு கம்ப்யூட்டரை உங்கள் ஊரில் யாரேனும் ஒருவர் வாங்கி, ஒரு கம்ப்யூட்டர் மையத்தை ஆரம்பிக்க வேண்டும். 'வின்னர் - 2000' உதவியுடன் ஊரார் அனைவரும் கம்ப்யூட்டர் அறிவு அடைந்து விடலாம்! பாடம் சொல்லிக் கொடுக்க பயிற்சி பெற்ற ஆசிரியர் கூட அவசியமில்லை" என்கிறார் ராஜ்.

ஒரு 'வின்னர் - 2000' மாட்யூல் விலை 1200 ரூபாய். சிக்கனம் கருதி இதனை இருவர் பகிர்ந்து கொள்ளலாம்.

"ஆசிரியர் இல்லாமலே பயிற்சி எப்படி சாத்தியம்?"

"அதுதான் 'வின்னர் - 2000'ன் வெற்றி சூட்சுமம். மிக மிக எளிய முறையில், சாதாரண ஐக்யூ உள்ள எந்த மாணவனும் சுலபமாகப் புரிந்து கொள்ளுகிறாற் போலத் தான் எங்கள் பயிற்சி பாடங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. உதாரணமாக, 'மெயின் மெமரி', 'கேஷ் மெமரி' என்று இரு விஷயங்கள். இதை எப்படி விளக்கிச் சொல்லியிருக்கிறோம் தெரியுமா? வீட்டில் அம்மா வருஷாந்திரத்துக்கு அரிசி, பருப்பு, புளி இத்யாதிகளை வாங்கி, ஸ்டோர் ரூமில் வைத்திருக்கிறாரில்லையா? அது போன்றதுதான் மெயின் மெமரி. ஸ்டோர் ரூமிலிருந்து, மாதா மாதம் தேவைக்கேற்ப பொருட்களைக் கொண்டு வந்து, சமையலறையில் வைத்துக் கொள்ளுகிறாரில்லையா? அதைப் போன்றது கேஷ் மெமரி. இத்தனை எளிமையாய் கம்ப்யூட்டர் பாடங்களை உருவாக்கியவர்கள், கம்ப்யூட்டர் துறையில் வல்லுனர்களான மூன்று இளைஞர்கள்" என்கிறார் ராஜ்.

"ஒரு புது விஷயத்தை, நாமாகப் படிக்கும் போது, சந்தேகம் வருமில்லையா? அப்போது என்ன செய்வது?"





"கம்ப்யூட்டர் பற்றின அரிச்சுவடி கூடத் தெரியாத ஒருவர், கம்ப்யூட்டர் பயிற்சி பெற வரும் போது, என்னென்ன சந்தேகங்கள் எல்லாம் அவருக்குத் தோன்றுமோ, அவை அனைத்துக்கும் விளக்கம் அளிக்கும் படியாகத்தான் 'வின்னர் - 2000' உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கட்டத்திலும் படித்து முடித்தவுடன் 'கேள்வி நேரம்' இருக்கிறது. அதில் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். ஒவ்வொரு கேள்வி நேரத்தின் போதும் சரியான பதில் சொன்னால்தான் அடுத்த கட்டப்பாடமே திரையில் வரும். பதில் தெரியாதபோது, மீண்டும் ஒருமுறை பாடம் திரையில் ஓடும். இதனால் முழுமையான அறிவு பெறுவது கட்டாயமாகிறது. இது 'வின்னர் - 2000'ன் பிரத்தியேக அம்சம். தவிர, ஆங்கிலத்திலுள்ள பாடம் எந்த ஒரு இடத்திலும் புரியவில்லை என்றால், ஒரு பட்டனை அழுத்தினால் போதும், தமிழில் விளக்கம் பெற முடியும்!"

"இவ்வளவையும் மீறி ஏதாவது சந்தேகம், பிரச்னை என்றால்?"

"பல ஊர்களிலும் இருக்கிற எங்கள் நிறுவனத்தின் திறமை மிகுந்த பிரதிநிதிகள், அட்டவணை போட்டுக் கொண்டு, அனைத்து மையங்களுக்கும் விசிட் செய்வார்கள். அப்போது அவர்களிடம் நேரில் பேசி சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள முடியும்!"

"கம்ப்யூட்டர் மையத்தைத் துவக்குபவருக்கு கம்ப்யூட்டர் அறிவு தேவையில்லையா?"

"மையத்தைத் துவக்குபவர் கம்ப்யூட்டர் பயிற்சி பெற்றவர் எனில் உத்தமம். இல்லையென்றாலும் பாதகமில்லை. மாணவராக அவரும் கம்ப்யூட்டர் பயிற்சி பெறலாம்!"

"யார் யார் எல்லாம் இத்தகைய மினி கம்ப்யூட்டர் மையங்களைத் துவக்கலாம்?"

"எவர் வேண்டுமானாலும். அதாவது சுய தொழில் துவக்க விரும்புகிறவர்கள், வீட்டிலிருந்தபடியே சம்பாதிக்க விரும்புகிற குடும்பத்தலைவிகள், உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றவர்கள், பட்டதாரிகள், கம்ப்யூட்டர் கல்வி பயின்றவர்கள், என யாவரும்!"

"அதிக பட்சம் எத்தனை பேர் தேவை?"

ஒவ்வொரு மாணவரும் தனித்தனியே 'வின்னர் - 2000' பயிற்சி மாட்யூலை வாங்கிப் பயன்படுத்தினால் ஒரு மினி மையத்தில் அதிக பட்சமாக 20 பேர் பயிற்சி பெறலாம். அது மட்டுமில்லை, ஒரு மாணவர் படித்து முடித்ததும், தான் பயன்படுத்திய மாட்யூலை எங்களிடமே பாதிவிலைக்கு விற்கவும் வசதி உண்டு."

கம்ப்யூட்டரில் தேர்ச்சி பெறுவது என்பது எல்லாத் துறைகளுக்கும் அத்தியாவசியமான அம்சமாகி வரும் இந்தக் காலகட்டத்தில் 'வின்னர் - 2000' வாழ்க்கையில் வெற்றி பெற அற்புதமான ஒரு சாதனமாக அமையக் கூடும்.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**
படங்கள் : **'தேர்ட் ஐ'**



காதலி: இன்னிக்கு ராத்திரி நாம ரெண்டு பேரும் வீட்டை விட்டு ஓடணும்னீங்களே. ஏன் வரல?

காதலன்: யார் கிட்டே சொன்னேன்னு எனக்கே கன்ப்யூஸ் ஆகிப் போச்சு!

- அம்பை தேவா



ஆஸிட் அரசியல்!

த.நா. ஜனதா கட்சியின் தலைவராகப் பதவி நீடிப்பு செய்யப்பட்டுள்ள சந்திரலேகாவைச் சந்தித்தோம். ஒரு காலகட்டத்தில் மிகப் பரபரப்பாக, ஒரு ஜோன் ஆஃப் ஆர்க் பிம்பத்துடன் உலா வந்தவர், சற்று சுருதி குறைந்தாற்போலத் தெரிகிறதே, என்னவென்று விசாரிக்கப் போன போது - முன்னிலும் உற்சாகத்தோடு, சுறுசுறுப்போடு, துடிப்போடு பேசினார் :

"ஆளும் கட்சியை எதிர்த்து அரசியல் நடத்த தீர்மானித்த தாங்கள், பலமான எதிர்க்கட்சிகள் பல இருக்க, தமிழ்நாட்டில் செல்வாக்கில்லாத ஜனதா கட்சியில் சேர்ந்ததன் மூலம் இதுவரை என்ன சாதித்திருக்கிறீர்கள்?"

"நிறைய பேர் என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். அக்கிரம அ.தி.மு.க. ஆட்சியை விரட்டுவதுதான் என் லட்சியம். பதவியிலிருக்கும் அல்லது பதவிக்கு வர வாய்ப்பிருக்கும் எந்தக் கட்சியிலும் சேர எனக்கு விருப்பமில்லை. காரணம், 'பதவி சுகத்தை அனுபவிக்க சேர்ந்திருக்கிறார்' என்று சுலபமாகச் சொல்லி விடுவார்கள்.

சந்திரலேகா பேசுகிறார்

இரண்டாவது, திராவிடக் கட்சிகள் என்றாலே எனக்கு ஒரு அலர்ஜி உண்டு. சினிமா, டிராமா, என்ற அடிப்படையில் கட்சியை வளர்த்து, ஆட்சியைப் பிடித்த இவர்களால் தமிழகத்துக்கு நிறையவே பாதிப்பு ஏற்பட்டு விட்டது. ஒரு மோசமான கலாசாரம் தமிழகத்தில் உருவாக்கப்பட்டு விட்டது. இந்த கலாசாரத்தை ஒழித்து, புதிய ஒரு எண்ண ஓட்டத்தை மக்களிடையே உருவாக்குவதுதான் எங்கள் லட்சியம். அந்த அடிப்படையில்தான் சிறிய கட்சியாக இருந்தாலும் தேசியக் கட்சியான ஜனதா கட்சியில் சேர்ந்தேன். நிச்சயம் வளர்ச்சி இருக்கிறது. சாதனைகளுக்கு இன்னும் கொஞ்ச நாள் பிடிக்கும்."

"உங்கள் அரசியல் பிரவேசத்துக்கு முக்கியக் காரணமான 'ஆஸிட் வீச்சு'க்கு ஜெ.தான் காரணம் என்பீர்களா?"

"ஆமாம்! என் மீது ஆஸிட் வீசப்பட்ட சம்பவத்துக்குப் பின்னால் இருப்பவர் ஜெயலலிதாதான். இதன் காரணமாகத்தான் விசாரணை ஆமை வேகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. கையோடு பிடித்துக் கொடுத்த மூன்று குற்றவாளிகளை ஜாமீனில் விட்டு விட, அவர்கள் காணாமல் போய்விட்டார்கள். சுவாமியின் செல்வாக்கால் பம்பாய் போலீஸ் மூலம் பிடிபட்ட சுர்லா என்பவனின் வாயை அடைக்கும் முயற்சியும் நடந்தது. இந்த ஆட்சியில் எனக்கு நீதி கிடைக்காது. அதனால்தான் சி.பி.ஐ. விசாரணை கேட்கிறேன். ஏழுமலை கொலை விவகாரத்தில் ஜெயலலிதா, சட்டமன்றத்தில் என்ன சொன்னார்? "இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்படாததாலும், கொலையுண்டவரின் வாரிசுகள், மாநில போலீஸின் விசாரணையே போதும் என்று சொல்லி விட்டதாலும், சி.பி.ஐ. விசாரணை கிடையாது." என்று தி.மு.க.வுக்குப் பதில் சொல்லி விட்டார். ஆனால் என் விஷயத்தில் குற்றவாளிகள் இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்பட்டவர்கள். போதாததற்கு, பாதிக்கப்பட்ட நானே, மாநில போலீஸின் மேல் நம்பிக்கையில்லாமல் சி.பி.ஐ. விசாரணை கேட்கிறேன். ஜெ.யின் வாதப்படி பார்த்தால் என் விஷயத்துக்கு சி.பி.ஐ. விசாரணை வைக்க வேண்டுமே! ஏன் தயங்குகிறார்? தன் சதி அம்பலமாகி விடும் என்றுதானே?"

"உங்களைத் தனிப்பட்ட முறையில் பிடிக்காதவர்கள் செய்த சதி என்று சொல்லப்படுவது பற்றி..."

"எனக்குத் தனிப்பட்ட முறையில் விரோதிகள் யாரும் கிடையாது. சரி ஸார், உங்க சந்தேகம் அப்படியே இருந்தாலும், நடுநிலையான ஒரு விசாரணையில் விஷயம் வெளிப்படட்டுமே! அதற்கும் நான் தயார்தான். சி.பி.ஐ. விசாரணை வைக்க ஜெயலலிதா தயாரா?"

"உங்கள் மீது ஆஸிட் வீச ஜெ. ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியம் என்ன?"

"ஸ்பிக் நிறுவனத்தில், உள்ள தமிழக அரசின் பங்குகளை அடிமாட்டு விலைக்கு விற்க ஜெயலலிதா முயன்றதை டிட்கோ தலைவராக இருந்த நான் தடுத்தேன். "எனக்கு முட்டுக்கட்டை போட இவன் யார்?" என்று அவருக்குக்

> **"என் போன்று, நேர்மையாகச் செயல்படும் அதிகாரிகளுக்கு எச்சரிக்கையாக இருக்கட்டும் என்றுதான் ஆஸிட் வீச்சுக்கு ஏற்பாடு செய்தார் ஜெயலலிதா."**



கோபம். என்போன்று நேர்மையாகச் செயல்படும் அதிகாரிகளுக்கு எச்சரிக்கையாக இருக்கட்டும் என்றுதான் ஆஸிட் வீச்சுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். இப்போது அதிகார வர்க்கம் இரண்டாகப் பிரிந்து நிற்கிறது. மனசாட்சிப்படி செயல்படும் நல்லவர்கள் மௌன சாமிகளாகிவிட, அ.தி.மு.க. ஆட்களோடு சேர்ந்து கூட்டுக் கொள்ளையடிக்க ஒரு கூட்டம் உருவாகி விட்டது. இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்தான் இன்பசாகரன். பாண்டா வீட்டில் நடந்த சம்பவம், கொள்ளையில் பங்குக்காக நடந்த மோதலின் விளைவே!"

"ஒரு காலகட்டத்தில், நீங்கள் ஜெ.யுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பை பெற்றிருந்தீர்கள்..."

"1982 ல் ஜெயலலிதா, எம்.ஜி.ஆர். மூலம் அரசியலுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். அப்போது கடலூரில் நான் மாவட்ட ஆட்சியாளராக இருந்தேன். எம்.ஜி.ஆர்.தான் எனக்கு அவரை அறிமுகம் செய்து வைத்தார். எதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தோடு மிக நல்ல முறையில் பழகினார் அவர். தலைக்கனம் ஏதும் அப்போது கிடையாது. அரசாங்க செயல்முறைகள் பற்றி அவருக்கு விளக்கியிருக்கிறேன். பதவிக்கு வந்த பிறகு எல்லாமே மாறிவிட்டது."

"எதிர்க்கட்சிகள் என்னதான் சொன்னாலும், இடைத் தேர்தல்களில் வென்று வருவதன் மூலம், மக்களிடையே செல்வாக்கு மிக்கவராக ஜெ. இருக்கிறாரே!"

"இடைத் தேர்தல்களில் வென்று வருவதால், அவரது செல்வாக்கு சரியில்லை என்பதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். 1989ல் சேவல் சின்னத்தில் வாங்கினாரே வோட்டு, அதுதான் உண்மையான செல்வாக்கு. 1991ல் ராஜீவ் அனுதாப அலைதான் முழுக்க, முழுக்கக் காரணம். ஒவ்வொரு இடைத்தேர்தலிலும் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்து, ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி வெற்றி பெறுகிறார். அடுத்த பொதுத் தேர்தலில் இது நடக்காது!

ஒரு பக்கம், ஊழல், லஞ்சம், தலைவிரித்தாடுகிறது. மற்றொரு பக்கம் நிர்வாகத்தில் மெத்தனம், முடக்கம். அகில இந்திய அளவில் தொழில் வளர்ச்சி, ஐந்து சதவீதம் உயர்ந்திருக்கிறது. தமிழகத்தில், வளர்ச்சி, வீழ்ச்சியாகிக் கொண்டு வருகிறது. (மைனஸ் நான்கு சதவீதம்) எந்த தொழிலதிபரும் தமிழகத்தில் தொழில் துவங்கவே பயப்படுகிறார்கள். காரணம், கமிஷன் கலாசாரம் தான். சென்னைக்கு வர இருந்த 'சிங்கப்பூர் தாழ்வாரம்' வராமல் இருந்ததற்குக் காரணம், கேட்கப்பட்ட கமிஷன் தொகைதான். சிங்கப்பூர் பிரதமர் லீவான்க்யூ, ஒரு பத்திரிகை பேட்டியில், "இந்தியாவில் தமிழ்நாட்டைத் தவிர வேறு மாநிலங்களில் முதலீடு செய்யத் தயாராக இருக்கிறோம்" என்று கூறி இருக்கிறார். கடலூரில் வர வேண்டிய 'ப்ரக்டோஸ்' என்ற மருந்துத் தொழிற்சாலையும் நழுவி வேறு மாநிலத்துக்குப் போய் விட்டது. தொழில் துறை தேக்கத்துக்கு இப்படி எத்தனையோ உதாரணங்கள் கூறலாம். இந்த ஆட்சியின் அவலங்கள் மக்களுக்குப் புரிந்துதான் இருக்கிறது. விரைவில் சாயம் வெளுத்துவிடும்!"

"ஜெ. அரசுக்கு சுவாமி பல கெடுக்களை வைத்தும் ஒன்றும்

KKR Finance & Investments

KKR டெப்பாஸிட் திரட்டும் காலம்

ஆகஸ்ட் 15 வரை மட்டுமே!

- டெப்பாசிட்டுகளுக்கு **24% + 1% P.A.** வட்டி வழங்கப்படும்.
- டெப்பாசிட்டர்கள் ஆகஸ்ட் 15 அன்று கௌரவிக்கப்படுவார்கள்.
- வட்டிக்கான காசோலைகள் முன்னதாகவே வழங்கப்படும்.
- குறைந்தபட்ச டெப்பாசிட் ரூ. 5,000/- மற்றும் அதன் மடங்குகளில்.



ஆண்டுகளில் பணம் இரண்டு மடங்காகிறது.

KKR Finance & Investments
No. 121, M.T.H. Road (North),
Perambur, Madras-600 011.
Phone : 5375456, 5376796, 5377777

EFFICIENT/KKR/101/94



"தலைவருக்கு உலகக் கால்பந்தாட்டப் போட்டியிலே ரொம்ப ஈடுபாடுன்னு எப்படி சொல்றீங்க? நடு ராத்திரிலே கூட டீவி பார்க்கிறாரா?"

"ஊஹூம், தேர்தல்ல ஈஸியா ஜெயிக்கறதுக்கு ஊக்க மருந்து எதுவும் இருக்கான்னு கேட்கிறாரே...!"

– உ.ர.சங்கர்

நடக்கவில்லையே! மக்கள் சுவாமியை 'கோமாளி' என்று கூறுகிறார்கள்...."

"இந்த அரசுக்கு சுவாமி வைத்தது ஒரே கெடுதான். ஜனவரி 31, 1993. 'தான் கவர்னரிடம் கொடுத்திருந்த பதவி பறிப்பு மனு (disqualification petition), தேர்தல் கமிஷனுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும்; அப்படி செய்யப்பட்டால் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி, அரசு காண்ட்ராக்டை ஜெயா பப்ளிகேஷன்ஸ் பெற்ற காரணத்திற்காக அதன் பங்குதாரரான ஜெயலலிதாவின் எம்.எல்.ஏ. பதவி, தேர்தல் கமிஷனால் பறிக்கப்படும். ஜெ. பதவி பறிக்கப்பட்டால், அ.தி.மு.க. அரசே கவிழ்ந்து விடும்' என்றுதான் சுவாமி நினைத்தார். ஆனால் நடந்தது என்ன? அப்போதைய கவர்னர் பீஷ்மநாராயண சிங், மனுவைத் தேர்தல் கமிஷனுக்கு அனுப்பாமல் தலையணை அடியில் வைத்து விட்டார். அதை அவரிடமிருந்து அனுப்பவே கேஸ் போட வேண்டியதாகி விட்டது. ஒரு வழியாக அனுப்பி வைத்தார்! சேஷன் சுவாமிக்கு வேண்டியவர், அவர் விசாரிக்கக் கூடாது என்று ஜெ. வழக்குப் போட்டார். இந்த வழக்கில், சம்பந்தப்படாத சில விஷயங்களுக்கு நீதிபதி பக்தவத்சலம் தீர்ப்பு வழங்கினார். பின், சுவாமி சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றார். ஒட்டு மொத்தமாக இந்த விஷயத்தைப் பார்த்தால், சட்டத்தின் சந்து பொந்துகளில் புகுந்து கொண்டு தேர்தல் கமிஷன் விசாரணையை ஜெயலலிதா தாமதப்படுத்திக் கொண்டு வருவது புரிய வரும். கடைசியாக, தமக்கு ஆதரவு கேட்டு சேஷனே ஜெயலலிதாவிடம் மண்டியிட்டு விட்டார். இனி என்ன ஆகுமோ? ஆக, சுவாமி நினைத்தது ஒன்று, நடந்தது வேறு. நீங்கள் சொல்வது போல், பல கெடுக்களை அவர் வைக்கவில்லை!"

"தமிழகத்தின் தற்போதைய தலையாய பிரச்னையான இட ஒதுக்கீட்டில் ஜெ.யின் நடவடிக்கைகள் சரிதானா?"


"இட ஒதுக்கீடு விஷயத்தில் ஜெயலலிதா போடுவது இரட்டை வேடம். '69 சதவீதம் கொடுத்தே தீருவோம்' என்று சொல்லும் ஜெயலலிதா, போன வருடம் சுப்ரீம் கோர்ட்டில் 50 சதவீத இட ஒதுக்கீடு செய்கிறோம் என்று எழுதிக் கொடுத்தது ஏன்? தவிர இந்த விஷயத்தை அனைத்துக் கட்சித் தலைவர்களிடம் மறைத்தது ஏன்? ஜனதா கட்சியைப் பொறுத்த மட்டில் 69 சதவீதம் சலுகை தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்பதே எம் கொள்கை. பிற்படுத்தப்பட்ட, மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் செய்யும் ஒதுக்கீட்டில் 70 சதவீதம் பத்து, பன்னிரெண்டு ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் அனுபவிக்கிறார்கள். முன்னேறிய அவர்கள், தங்களுக்கு இனி இட ஒதுக்கீடு தேவையில்லை என்று பெருந்தன்மையாக அறிவித்து விட்டால், உண்மையிலேயே, இன்னமும் பிற்படுத்தப்பட்டு இருப்பவர்களுக்கு அதிக வாய்ப்பு கிடைக்கும். இதற்காக ஜனதா கட்சி பாடுபடும். ஆனால் தேசியக் கட்சியான ஜனதா கட்சியை அனைத்துக் கட்சி ஆலோசனை கூட்டத்துக்கு அழைக்கவேயில்லை."

"தமிழகத்தில் உங்கள் கட்சியின் வளர்ச்சி எப்படியிருக்கிறது?"

"ஒவ்வொரு அடியாக எடுத்து வைக்கிறோம். மாவட்டங்களில் நிர்வாகிகள் போடப்பட்டுள்ளனர். எங்கள் பொதுக் கூட்டங்களுக்கு எவ்வளவு தொந்தரவுகள் கொடுக்க முடியுமோ அவ்வளவையும் கொடுக்கிறார் ஜெயலலிதா. ஆனால் நாங்கள் இதற்கெல்லாம் அஞ்ச மாட்டோம். காலப் போக்கில் ஜனதா கட்சி, தமிழகத்தில் மட்டுமல்ல, தேசிய அளவிலும், ஒரு நல்ல பாதிப்பை உண்டாக்கி நாட்டைப் பலப்படுத்தும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு."

பேட்டி : **ப்ரியன்**

விஜயப் பிரதாபன்



இருபதாம் நூற்றாண்டின் விளிம்பு நாட்களில் இப்படி ஒரு படமா என்று பார்ப்பவரெல்லாம் விழி உயர்த்துவார்கள், நிச்சயம்.

மந்திரஜாலம். மாயா ஜாலம். அரசகுமாரியைத் தூக்கிப் போகும் மந்திரவாதி. காப்பாற்றும் இளவரசன். உதவி செய்யும் ஜாடி பூதம். பறக்கும் குதிரை. சிரிக்கும் சிலை. கடல் தாண்டி, மலைதாண்டி, ராட்சஸர்களின் பாதுகாப்பில் உயிர்காக்கும் நெக்லஸ். தண்ணீர் கொட்டும் மந்திர மரம்...

அம்புலிமாமா கதையை, அம்புலிமாமாக்காரர்களே படமாக்கியிருக்கிறார்கள்.

செட்டுக்கு மட்டுமே அள்ளி விட்டிருக்கிறார்கள். இதிலூட் ...ும் மந்திரவாதி மாளிகை, பாலைவனத்தில் ஆலயம், காட்டுவாசி குடியிருப்பு இன்னபிற.

ஜுராஸிக் பார்க் டைனஸார் மாதிரி ஒரு ஜந்து, நடுக்கடலில் பறந்து வந்து தாக்கும் பயங்கரத்தை எப்படிப் படமாக்கினார்கள்?


அலுப்பூட்டாத திரைக்கதைக்கே ஆயிரம் மார்க் போடலாம். விரசமில்லாத காதலுக்கும் வெறித்தனமில்லாத வீரத்துக்கும் பிறிதொரு ஆயிரம்.

சென்டிமென்ட், மசாலா, சொதப்பல் என்பதாக இன்று புற்றீசல் போல் வரும் படங்களோடு ஒப்பிட்டால் இந்த காமிக்ஸ் கதை எவ்வளவோ தேவலாம். ஒருவேளை இந்தப் படம் ஓடினால் இப்படியான 'ட்ரெண்ட்' மறுபடி வந்தால் ஆச்சர்யமில்லை.

தவறாமல் உங்கள் குழந்தைகளைக் கூட்டிப் போங்கள். உற்சாகக் குதி போடுவார்கள்.

-ஆர்.பி.ஆர்.

Kalki Shopping Page


ஐயையோ...! இருக்கிறதே ரெண்டுதான்... அதையும் தூக்கிட்டு போறாங்களே... எப்படி கதை பண்றது..?
ஆபாசம்
வன்முறை
இயக்குநர்
தயாரிப்பாளர்
சுலோசனா சம்பத்
ஒரே அமுக்கா அமுக்கிட்டேன்...
மாயாவதி
கன்ஷி ராம்
உ.பி. செல்வர் முலாயம்சிங் யாதவ்



கல்கி



1994
ஜூலை 24
பவ
ஆடி 8
மலர் : 52
இதழ் : 52

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

ஆதிக்க மனப்பான்மையும் அடிமை புத்தியும்!

பெண்மைக்குச் சக்தி என்ற உருவம் தந்து தெய்வமாகவே வழிபடுகிற நம் நாட்டில்தான் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. அவற்றுள் சிலதாம் பத்திரிகைகளில் இடம்பெறுகின்றன என்றாலும் அந்தச் சிலவே அளவிட முடியாதபடிக்கு அவமான உணர்வை உண்டுபண்ணுகின்றன.

சில காலம் முன்பு வரை கூட வரதட்சிணைக் கொடுமையும் ஸ்டவ் வெடிப்புச் செய்திகளும்தாம் இதயத்தைத் தாக்கின. ஆபாச போஸ்டர் அல்லது அட்டைப்படத்துக்கு எதிராகப் பெண்கள் கோஷமிட்டு ஊர்வலம் சென்றதையும் பார்த்தோம். ஆனால் சமீபகாலமாக வருகின்ற செய்திகள் இனி இந்தியன் தலைநிமிரவே முடியாது என்னுமளவுக்கு வெட்கப்படச் செய்கின்றன.

தமிழக போலீஸ் ஸ்டேஷனில் நடந்த கற்பழிப்பு விவகாரம் பத்திரிகைகளால் கடித்துக் குதறப்பட்டு விட்டது ஒருபுறமிருக்க, 'பாரத புண்ணிய பூமியிலா, தெய்வத் தமிழ் நாட்டிலா இத்தகைய கொடுமை!' என்ற அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது.

அதிலிருந்து நாம் இன்னும் மீளாதபோதே குஜராத்தில் ஒரு போலிச் சாமியார் பல பெண்களை மானபங்கப்படுத்திய கதைகள் பக்கம் பக்கமாக பரபரப்பாக எழுதப்பட்டு வேதனையை அதிகரிக்கச் செய்துள்ளது.

வடக்கே பல கிராமங்களில் பெண்களுக்குத் தண்டனை தருவதாகக் கூறிக் கொண்டு நிர்வாணப்படுத்தி நிறுத்தும் அவலம் இன்றைக்கும் தொடர்கிறது.

'படிப்பறிவற்ற பாமர மக்கள்தாம் என்றில்லை; எங்களைப் போல உயர் பதவிகளில் இருப்பவர்களுக்கும் அசிங்கமாக நடந்து கொள்ளத் தெரியும்' என்று நிரூபிப்பது போல, சில காலம் முன்பு ஹரியானா அமைச்சர் ஒருவரும், தற்போது மத்திய அமைச்சரின் மகன் ஒருவரும் விமானப் பணிப் பெண்களிடம் அநாகரிகமாக நடந்து கொண்டு கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

'பெண்களின் உரிமைகளை மதிக்க வேண்டும்' என்று மகாராஷ்டிர முதல்வர் மாநாடு கூட்டி முழங்கி, முழுசாக மூன்று வாரங்கள் கூட ஆகவில்லை; அதற்குள் அம் மாநிலத்தில் வேட்டவ்டாக ஒரு பரபரப்பு : ஜல்கோன் நகராட்சியைச் சேர்ந்த இரண்டு காங்கிரஸ்காரர்கள் தங்களிடம் உதவி கோரி வந்த பெண்களை ஏமாற்றி, பிளாக்மெய்ல் செய்து நிர்வாணப் புகைப்படங்களுக்கு போஸ் கொடுக்க நிர்பந்தித்து...

கொட்டும் மழையை பொருட்படுத்தாமல் எல்லா கட்சிகளையும் சேர்ந்த மாதர் அமைப்புக்கள் இந்தக் கொடுமைக்கு எதிர்ப்புக் காட்டி ஆர்ப்பாட்டம் செய்துள்ளன. ஆனால் இதற்கெல்லாம் முடிவு எப்போது? ஏன், இப்படியெல்லாம் நடக்கிறது?

முதல் முக்கிய காரணம், நமது கலாசாரத்தில் இடையிலே புகுந்து விட்ட ஆண் ஆதிக்க மனப்பான்மை. அது இன்னும் மாறாத காரணத்தால்தான் பெண்கள் உத்யோகத்துக்குப் போனால் ஆண் மகன் குமுறுகிறான்; ஆனால் லட்சோபலட்சம் பெண்கள் இந் நாட்டில் கல் உடைப்பதையும் கட்டட வேலை செய்வதையும் சேற்றில் இறங்கி விவசாயம் பண்ணுவதையும் இயல்பாக ஏற்றுக் கொள்கிறான்!

இரண்டாவது, பெண்களிடம் உருவாகி விட்ட அடிமை புத்தி இன்னும் முழுதும் மறையவில்லை. எத்தனையோ மாதர் சங்கங்கள் நற்பணியாற்றியும் விழிப்புணர்ச்சி போதிய அளவு உண்டாகவில்லை.

மூன்றாவது சினிமா, பத்திரிகை, விளம்பரம், வீடியோ, மேடைப் பேச்சு முதலிய எல்லாவற்றிலுமே பெண்களை இழிவுபடுத்தும் போக்கும் போகப் பொருளாகச் சித்திரிக்கும் வழக்கமும் மாறவில்லை.

நாலாவது, இவற்றிலெல்லாம் ஆரோக்கியமான திருப்பம் ஏற்படத் தேவையான சிறந்த பாடத் திட்டத்துடன் கூடிய நல்ல கல்வி சரியான முறையில் இளைய சமுதாயத்துக்குப் போதிக்கப்படவில்லை.

இத்தகைய அவல சூழ்நிலையில்தான் முதுகெலும்புள்ள பெண் போலீஸ் அதிகாரியான கிரன்பேடிக்கு மக்ஸேஸேவாய் என்ற உயரிய விருது கிடைத்துள்ள செய்தி வந்து நமது குன்றிய உடல்களைச் சற்றே நிமிரச் செய்திருக்கிறது.

பெண்மை வாழ்கவென்று நாம் கூத்திட வேண்டுமெனில், பெண்மை வென்று வையம் புதுமையுறச் செய்ய வேண்டும். கிரன் பேடிக்குக் கிடைத்துள்ள பரிசு அதற்கு ஆரம்பமாக விளங்கட்டும்.

ஆலை அரசர்; கலைத் தந்தை!



● பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் தங்கள் நாட்டுக்குக் கப்பல் கப்பலாகப் பஞ்சுக் கட்டுகளைத் தூத்துக்குடியிலிருந்து ஏற்றியனுப்பினர்.

வண்டியிலே பஞ்சுப் பொதி
வலதுகையில் சாட்டைக் கம்பு
வாங்குறதும் வெள்ளைக்காரன்
கண்டுறதும் வெள்ளி ரூபா
முடியிறதுப்
பிட்டைத் துண்டு...

என்ற நாட்டுப் பாடலைப் பாடிக் கொண்டு வண்டிகளைப் பஞ்சு ஏற்றிக் கொண்டு தூத்துக்குடித் துறைமுகத்துக்கு உழவர் சென்றனர். அதனால் தூத்துக்குடி நகரத்துச் சாலைகளும் 'கிரேட் காட்டன் ரோடு', வெஸ்ட் காட்டன் ரோடு' என்று தம் பெயர்களில் பஞ்சினை இணைத்துக் கொண்டன. கலைத் தந்தை (கருமுத்து தியாகராச செட்டியார்) ஆலைத் தொழிலை விரித்த பிறகே பஞ்சு ஏற்றுமதி தவிர்க்கப்பட்டது.

● 1927 மே 4-ஆம் நாளில் மீனாட்சி ஆலை முதன் முறையாக உற்பத்தியைத் தொடங்கிற்று. தரமான நூல் என்று அனைவரும் புகழ்ந்தனர். இந்தியாவில் எந்த ஆலையில் உற்பத்தி செய்த நூலையும் விட இது தரம் மிக்கதாயிருந்தது. வாங்க விழைந்தோர் எல்லோர்க்கும் வழங்க இயலாத அளவிற்குக் 'கேட்பு' (கிராக்கி) இருந்தது. எனவே 1930-இல் இரவிலும் ஆலை இயங்க ஏற்பாடு செய்யப் பெற்றது. நூற்பு ஆலைகளில் இரவு நேரப் பணிமுறையைத் தொடங்கியவர் கலைத் தந்தை அவர்களே.

● (இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள்) கூலியாகத் தொழில் தொடங்கும் போதே தம் வாழ்க்கைச் செலவுக்காகக் கங்காணியிடம் கடன் பெற்று, அந்தக் கடனை எந்தக் காலத்திலும் தீர்க்க முடியாத நிலையில் இருந்தார்கள். ஆகையால் கங்காணி, தான் அழைத்து வந்த தொழிலாளரை ஒரு போதும் விடுவிக்க முடியாத நிலை இருந்தது. இலங்கைக்குச் செல்லும் தமிழ் நாட்டுத் தொழிலாளர்க்கு ஆடு மாடுகளுக்குச் சூடு போடுவது போல், சூடு போட்டு அடையாளம் இட்டு அனுப்பும் கொடிய வழக்கமும் இருந்தது.

இந்த இழிநிலைகளை எல்லாம் போக்க இளைஞரான தியாகராசச் செட்டியார் துடித்தெழுந்தார். இலங்கைவாழ் தமிழ்த் தொழிலாளர் உரிமைகளுக்காக ஓர் இயக்கத்தையே தொடங்கினார். செய்தித்தாள்களில் எழுதினார். கிளர்ச்சிகள் நடத்தினார்.

● மதுரை மாநகரிலே கல்லூரி கண்டார் ஆலை அரசர். கலைத் தந்தை என்று போற்றப் பெற்றார். எடுத்ததற்கெல்லாம் அவரைக் கேட்க வேண்டும் என்ற பழக்கம் மீனாட்சி ஆலையில் நிலவியதில்லை. முதிர்ந்த அலுவலர்கள் தங்கள் அறிவாற்றலைப் பயன்படுத்தி, கலைத் தந்தை அவர்களுக்காகக் காத்திராமல் உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து வந்தனர். தவறான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும் அதை ரத்து செய்யும் மனநிலை கலைத் தந்தை அவர்கட்குக் கிடையாது. "இனிமேல் இப்படிச் செய்" என்றுதான் சொல்லுவார்.

'ஆலை அரசர் கருமுத்துதியாகராசர்'
- டாக்டர் ராதா தியாகராசன்
விலை ரூ. 100. வெளியீடு :
வானதி பதிப்பகம், சென்னை-17.
தொகுப்பு : 'பாலன்'

நம்பிக்கை, சாதனை, வெற்றி ஆகியவை வாழ்வில் இடம் பெற... வழிகாட்டுகிறது எல்டிசி.



ஃபிக்சட் டெபாசிட் & குமுலேடிவ் டெபாசிட் சேமிப்புக்குப் பாதுகாப்பான வாய்ப்புகள்

வாழ்க்கையில் எத்தனையோ சவால்கள் உங்களை எதிர்நோக்குகின்றன. அவற்றை நீங்கள் சந்திக்கும் அதே நேரத்தில் உங்கள் பணத்தை நிர்வகிக்கும் பொறுப்பை எல்டிசி யிடம் விட்டு விடுங்கள். உங்கள் பணத்தின் வளர்ச்சிக்கும், உங்கள் முன்னேற்றத்துக்கும் உறுதுணையாக விளங்கும் இரண்டு டெபாசிட் திட்டங்களை எல்டிசி உங்களுக்கு அளிக்கிறது.

நீங்கள் வாழ்வில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் எல்டிசி தரும் பாதுகாப்பு உங்களை ஊக்குவிக்கிறது. எனவே, நீங்கள் நம்பிக்கையோடு முன்னேற முடியும்.

எல்டிசி. உங்கள் வெற்றிக்கு உறுதுணை.

உங்கள் வளமைக்கு வழிகாட்டும் ஐந்து வெவ்வேறு டெபாசிட் திட்டங்களை லக்ஷ்மி டிரேட் கிரெடிட்ஸ் லிமிடெட் உங்களுக்கு அளிக்கிறது: ஃபிக்சட் டெபாசிட், குமுலேடிவ் டெபாசிட், ரொக்க சர்ட்டிஃபிகேட், ரெக்கரிங் டெபாசிட், பென்ஷனர் பெனிஃபிட் திட்டம். இவற்றின் மூலம் ஒவ்வொரு டெபாசிட்தாரரும் அடைபவை; சிறப்பான பலன்கள், தனிப்பட்ட சேவைகள்.

1993-94ல் எல்டிசியின் டெபாசிட்டுகள் ஒரே ஆண்டில் 100% **வளர்ச்சியைப்** பெற்றுள்ளதற்கு இவைதான் காரணம். இந்த வெற்றியினால் ஊக்குவிக்கப்பட்டு எல்டிசி மற்றுமொரு லட்சியத்தை நோக்கி முன்னேறுகிறது: 31 மார்ச் 1995 அன்று அடையத் திட்டமிட்டுள்ள டெபாசிட் இலக்கு ரூ.25 கோடி.

பி.ஜி. சரண்யன்
சேர்மன்

டெபாசிட்டுகள் ஏற்கப்படுகின்றன!

லக்ஷ்மி டிரேட் கிரெடிட்ஸ் லிமிடெட்

கார்ப்பொரேட் அலுவலகம்:
37/1, கதீட்ரல் சாலை,
ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி எதிரில்
சென்னை 600 086.
தொ.பே: 8281826/8281930

கிளைகள்: சென்னை • அம்பத்தூர், போன்: 681860 • அண்ணா நகர், போன்: 6212047 • குரோம்பேட்டை, போன்: 401267 • கே.கே. நகர், போன்: 4833917 • மயிலாப்பூர், போன்: 2346586 • நங்கநல்லூர், போன்: 2348593 & 2346066 • விருகம்பாக்கம், போன்: 4830846 • மேற்கு மாம்பலம், போன்: 4830150 • திருச்சி, போன்: 25323 • மதுரை, போன்: 30626 • கோயம்புத்தூர், போன்: 43576 • திருநெல்வேலி, போன்: 322073 • காரைக்குடி, போன்: 2023 • வேலூர், போன்: 21902 • பாண்டிச்சேரி, போன்: 31839 • பெங்களூர், போன்: 365433.

எல்டிசி: உங்கள் வாழ்வின் வளமைக்கு பொன்னான பாதை.

10.3.94 தேதியிட்ட ஹிந்து நாளிதழில் வெளியான 25.10.93 தேதியிட்ட சட்டபூர்வமான விளம்பரத்தின் தொடர்ச்சி.

ADWAVE/LTC/4728 TAM A

மணிக்கொடி

"இதென்ன ஒருத்தர் மாத்தி ஒருத்தரா இன்னிக்கு வந்துண்டே இருக்கா?" என்றவாறு திரும்பிய குஞ்சம்மா புன்னகையுடன் அடுக்களைக்குள் நுழைந்து கொண்டிருந்த அஞ்சனாதேவியைப் பார்த்துத் திகைப் படைந்தாள்.

"ஒரு நிமிஷம் கொஞ்சம் அடுப்பை விட்டு நகர்றேளா?" என்ற அஞ்சனாதேவி குஞ்சம்மாவைப் பிடித்துத் தள்ளாத குறையாக அப்பால் நகர்த்தி விட்டுத் தன் கையில் இருந்த காகிதக் கற்றையை நீளவாட்டத்தில் சுருட்டிச் சுருட்டி, எரிந்து கொண்டிருந்த அடுப்புக்குள் செருகினாள். அது எரியத் தொடங்கியதும் அடுக்களைக் கதவையும் நன்றாகச் சாத்தினாள்.

"காகிதம் எரியற வாசனை உள்ளே வரப் போற போலீஸ்காரனுக்கு மூக்குல பட்டுடப் படாது. அதுக்குத்தான். இது கொஞ்சம் ரகசியமான காகிதம். ஒரு துளி சின்னத் துணுக்கு கூட விட்டுப் போகாதபடி முழுக்க முழுக்க எரிச்சுடணும்..." என்று அவள் மெல்லிய குரலில் கூறியதைக் குஞ்சம்மா வாய்பிளந்து கேட்டபடி அடுப்பருகே நின்றாள். விசாலமும்தான்.

காகிதக் கற்றை முழுவதும் நன்றாக எரிந்த பிறகு அடுக்களைக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள் அஞ்சனா.

தாம் விட்டுச் சென்ற காகிதக் கற்றை ஊஞ்சற்பலகையில் இல்லை என்பதையும், அஞ்சனாதேவி அங்கு இல்லை என்பதையும், மணவாளனின் சாடையான புன்சிரிப்பையும் பார்த்த பிறகுதான் ராமசாமிக்கு அப்பாடா என்றிருந்தது.

தெம்புடன் ஊஞ்சலில் திரும்பவும் உட்கார்ந்து கொண்டு, "உம்ம்... நன்னாத் தேடிக்குங்க..." என்றார் புன்னகையுடன்.

அந்த வீடே தலைகீழாய்ப் புரட்டப் பட்டது. போலீஸார் தேடிய துப்பு எதுவும் கிடைக்கவில்லை.

சோர்வுடன் கிளம்ப முற்பட்ட இருவரும், "உங்களுக்குத் தொல்லை குடுத்துட்டோம், சார். எங்க டியூட்டி. என்ன செய்யறது?" என்று சொல்லி வருந்தினார்கள்.

இருவரும் சென்ற பிறகு ராமசாமி வாசற்கதவைத் தாளிட்டு விட்டு வந்து மறுபடியும் ஊஞ்சலில் உட்கார்ந்தார். அஞ்சனாதேவியும் தனது நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

"நல்ல வேலை செஞ்சேள். அந்தப் போலீஸ்காரங்க ரெண்டு பேர் கையிலயும் நான் ஊஞ்சல்ல போட்டுட்டுப் போன காகிதக் கத்தை கிடைச்சிருந்தா என்ன கதி ஆகியிருக்கும்?" என்று பெருமூச்சு விட்டார் ராமசாமி. அஞ்சனாதேவி மீது பதிந்திருந்த அவரது பார்வையில் அளவிடற்கரிய நன்றி இருந்தது.

"எனக்குக் கூட அதை அப்புறப்படுத்தணும்னு தோணல்லே, அய்யர்வாள். இந்தம்மா தான் வாசற்பக்கம் எட்டிப் பார்த்துட்டுப் போலீஸ்காரனோட செகப்புத் தொப்பியைப் பார்த்ததும் சரேல்னு எழுந்து வந்து, அந்தக் காகிதக் கத்தையைக் கையில எடுத்துக்கிட்டு உங்க வீட்டு சமையக்கட்டுக்குள்ளே விடுவிடுன்னு நொழைஞ்சுட்டாங்க. அதைப் பார்த்ததும்தான் எனக்குப் புரிஞ்சிச்சு... ஏம்மா? அந்தக் காகிதங்களை எரிச்சுட்டீங்க தானே?" என்றார் மணவாளன்.

"ஆமா. கம்ப்ளீட்டா ஒரு துணுக்குக்கூட இல்லாதபடி எரிச்சு சாம்பலாக்கியாச்சு."

"இப்ப என்ன செய்யறது? அச்சுக்குக் கொடுக்கிறதா இருந்தோமே? எல்லாம் பாழாயிடுத்தே?"

"ஒண்ணும் பாழாகல்லே, சார்! எங்கிட்ட எங்கண்ணா அனுப்பின இங்கிலீஷ் வெர்ஷன் இருக்கே? மறுபடியும் தமிழ்ல மொழி மாத்திட்டாப் போறது. இப்பக் கூட என்னால அந்த ஒரிஜினலைப் பார்க்காமயே இப்ப

ஜோதிர்லதா கிரிஜா



நான் உங்ககிட்ட கொடுத்த தமிழ் வாசகத்தை எழுதித் தர முடியும். ஏன்னா எனக்கு அது அப்படியே மனப்பாடமாயிடுத்து. அத்தனை தரம் படிச்சேனாக்கும்."

"அப்ப இங்கேயே உக்காந்து எழுதிக் குடுத்துடுங்கோ. இப்ப தானே சோதனை போட்டுட்டுப் போயிருக்காங்க போலீஸ்காரங்க? அதுக்குள்ள மறுபடியும் வர மாட்டா."

"ஒரு பேனாவோ பென்சிலோ தாங்கோ. அப்படியே கொஞ்சம் பேப்பரும்..."

ராமசாமி எழுந்து தமது அலமாரியை நோக்கி நடந்தார். அப்போது வாசற்பக்கத்திலிருந்து, "அப்பா, அப்பா" என்று ஒரு குழந்தை அழைக்கிற குரல் கேட்டது. மணவாளன் எழுந்து நின்று வாசற்கதவைத் திறந்ததும் மறுபடியும், "அப்பா!" என்ற கூவலுடன் உள்ளே ஓடி வந்த சிறுவன் கூடத்தில் ஒரு நாற்காலியில் சிரித்த முகத்துடன் தன்னைக் கண்கொட்டாமல் பார்த்தபடி உட்கார்ந்திருந்த புதிய பெண்மணியைக் கண்டதும் முகம் முழுவதும் சிவப்பாகிப் போனான்.

"இங்க வாப்பா, கண்ணா, உம் பேரென்ன?"

வாயில் அடக்கி இருந்த பெரிய மிட்டாய் சரியான உச்சரிப்பைத் தடுக்க, "கங்காடழன்" என்று சொல்லி விட்டுத் தன்னைப் பிடிக்கக் கைநீட்டிய அஞ்சனா தேவியிடம் சிக்காமல் அவன் சமையற்கட்டுக்கு ஓடிப் போனான்.

நாற்காலியிலிருந்து எழுந்து வெள்ளைத் தாள்களை ராமசாமியிடமிருந்து வாங்கிக் கொண்ட அஞ்சனாதேவி, "பள்ளிக்கூடத்துல சேர்த்தாச்சா?" என்று கேட்டாள்.

"சேர்த்தாச்சு. ஒண்ணாங்கிளாஸ்ல படிச்சுண்டிருக்கான்."

அஞ்சனாதேவி தனது ஞாபகத்திலிருந்து மதன்லால் திங்ராவின் வாக்குமூலத்தை விடுவிடுவென்று எழுதிச் சில நிமிடங்களுக்குள் ராமசாமியிடம் கொடுத்து விட்டாள்.

"ரெண்டொரு வார்த்தைகள் அங்க இங்க மாறி இருக்கு, சார். நான் முதல்ல கொடுத்ததே வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்ப்புன்னு சொல்ல முடியாதுதான்."

"அதைப் பத்தி என்னம்மா? நமக்கு வேண்டியது மதன்லால் திங்ராவோட ஆவேசமான

4

அருள்வாக்கு

ஸோமபானம் என்பது போதைப் பொருள் அல்லவே அல்ல. (அது Intoxicating அல்ல) "அர்த்த வாதம்" என்கிற முறையில், மிகைப்படப் பேசும்போது, வேதத்தில் ஓரிடத்தில், இந்திரன் ஸோமரஸத்தால் மதமடைந்து சத்ருவதம் பண்ணினான் என்று வருவதை வைத்துக் கொண்டு இப்படிக் குயுக்தி பண்ணுகிறார்கள். தேவ சரீர தத்வமே மநுஷ்ய தர்மங்களுக்கு மேலானது. அதுமட்டுமின்றி ருத்விக்குகள் ஏதோ பாட்டில் பாட்டிலாகவோ மொந்தை மொந்தையாகவோ குடித்த மாதிரிப் பேசுவது அடியோடு விஷயம் தெரியாத பேச்சு. ஒரு யாகத்தில், உரல் மாதிரியான ரூபத்தில் ரொம்பச் சின்னதாக உள்ள க்ரஹம் என்ற ஒரு பாத்திரத்தில், இத்தனை ஸோமரஸம் வடித்து ஹோமம் செய்ய வேண்டும். அதில் மீறுவதை 'ஹுத சேஷம்' என்று சாப்பிட வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. இம்மாதிரி ஒரு யாகத்தில் துளித் துளியாகச் செய்கிற ஸோம பானத்தையெல்லாம் சேர்த்தால் கூட ஒரு அவுன்ஸுக்கு மேல் வராது. இப்படிச் சாப்பிட்டு எவரும் மயக்கமடைந்ததும் கிடையாது. ஸோம ரஸம் என்பது அப்படியொன்றும் ருசியாகவும் இருக்கவில்லை என்கிறார்கள்.

ஸோம பானத்தை அந்தக் காலத்து காபி என்று சிலர் வியாக்கியானம் பண்ணி விட்டார்கள்! ஸோமரஸம் உண்டாக்குகிற ஸந்தோஷத்தைப் பற்றி வேத மந்திரங்கள் இருப்பதால் இப்படித் தப்பர்த்தம் பண்ணி விட்டார்கள். காபி சித்த விருத்தியைக் கெடுக்கிற வஸ்து. ஸோம ரஸம் சித்த சுத்தியை உண்டாக்குகிற வஸ்து. இரண்டையும் ஒன்று என்பது கொஞ்சம் கூடப் பொருந்தாது. அந்தக் காலத்தில் ஸம்ருத்தியாகக் கிடைத்துவந்த ஸோமலதை இப்போது கிடைப்பதே ரொம்பவும் அபூர்வமாகிக் கொண்டு வருகிறது. வேத தர்மங்கள்,

வாக்குமூலம்தான். அதாவது அவனோட கருத்து. வார்த்தைக்கு வார்த்தை அப்படியே இருந்தாகணும்னுட்டு ஒண்ணுமில்லே. அவனோட ஆவேசமான சாடலைக் கேட்டதுக்கு அப்புறமாவது நம்ம ஜனங்களுக்கு ரோசம் வருதான்னு பார்க்கலாம். இப்ப கூட நிறைய பேரு ஒரு அவநம்பிக்கையோடதான் காங்கிரஸ் கட்சியைப் பார்க்கறா. ஆயுத பலமும் படைபலமும் இருக்கிற ஒரு பெரிய சாம்ராஜ்ஜியத்தோட நாமாவது, மோதி ஜெயிக்கிறதாவது அப்படிங்கறாப்ல. ஆனா அடி மேலடி வெச்சா அம்மியும் நகரும்கிறது அசட்டுப் பழமொழி இல்லியே?"

"நம்ம இயக்கம் சிறுகச் சிறுக வளர்ந்தா நிச்சயம் ஒருநாள் வெள்ளைக்காரன் ஓடித்தான் போவான், அய்யர்வாள்."

"ஆனா வெறுமனே வருஷா வருஷம் ஒரு நகரத்துல கூட்டம் போட்டுப் பேசறதும் தீர்மானங்கள் போடறதும் வெள்ளைக்காரனை இந்த நாட்டை விட்டு விரட்டாது, சார். அதுக்கு இந்த மதன்லால் திங்ரா மாதிரி ஆட்கள் நிறைய பேரு உருவாகணும்" என்றாள் அஞ்சனாதேவி ஆவேசமாக.

5

அஞ்சனாவின் ஆவேசமான பேச்சைக் கேட்டு மகிழ்ந்து, "தீவிரவாதியா இருக்கிறதிலே தப்பில்லே; அதிலே நான் திலகர் கட்சி" என்றார் ராமசாமி.

"ஆனா திலகரோட மரியாதைக்குரிய கோபாலகிருஷ்ணகோகலேயோ ஒரு மிதவாதியா இருந்துண்டு மயிலே மயிலே இறகு போடுன்னு வெள்ளைக்காரங்கிட்ட கெஞ்சிண்டிருக்காரே? பல்லைக் காட்டிக் கெஞ்சிக் கேட்டு வாங்கற வஸ்துவா சுதந்திரம்? அவங்கிட்ட நாம எதுக்கு கெஞ்சறது? நம்ம வஸ்துவை ஒருத்தன் பிடுங்கி வெச்சுண்டா, அதை நாமும் அடிச்சுப் பிடிச்சுத் திரும்பி வாங்கிக்க வேண்டியதுதானே?"

"திலகர் தீவிரவாதியே ஒழிய, மதன்லால் திங்ரா மாதிரி பயங்கரவாதி கிடையாதும்மா."

"முள்ளை முள்ளால எடுக்கறதுல எந்தத் தப்பும் இல்லே, சார்!"

"ஆனா, கோபாலகிருஷ்ண கோகலே சொல்றதுலயும் ஒரு பாயிண்ட் இருக்கும்மா."

"என்ன சார் பாயிண்ட்?"

"அவர் என்ன சொல்றார்னா, இந்தியர்கள் வெள்ளைக்காரன் கீழே பல பதவிகளையும் வேலைகளைச் செஞ்சு நிர்வாகத் திறமையை வளர்த்துக்கணும் முதல்லேங்கறார். நிர்வாகத்திறன் திடீர்னு வந்துடாதுதானே? அதனாலதான் அவர் சொல்றார். கொஞ்ச நாளுக்கு நாம வெள்ளைக்காரனைச் சகிச்சுண்டு பல முக்கியமான பதவிகளைக் கைப்பற்றணும் முதல்லேங்கறார். அதுக்கு அப்புறம் ஒரு வன்மையான போராட்டத்துல ஈடுபட்டு வெள்ளைக்காரன்கிட்டேருந்து ஆட்சியைப் பிடுங்கிடணும்கறார். அது சரியான வழி இல்லைன்னும் நாம ஓரேயடியா தள்ளிடறதுக்கில்லே. மிதவாதக்காரர்களையெல்லாம்



ஆசாரங்கள் எல்லாம் நசித்து வருவதற்கு ஏற்றாற்போல், ஹோம யாகங்களுக்கு ஜீவாதாரமாக இருக்கப்பட்ட கொடியும் க்ஷீணித்துக் கொண்டே வந்திருக்கிறது. சமீபத்தில், கொல்லங்கோடு ராஜா, ஹோம யாகம் எங்கே நடந்தாலும் அதற்கு ஸோமலதை கொடுப்பதென்று வைத்துக் கொண்டிருந்தார். காபிக்கும் இந்த ஸோமலதைக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

வெள்ளைக்காரனுக்கு வால்பிடிக்கிறவான்னு சொல்றதும் தப்பு. அவாளுக்கும் தேசபக்தி இருக்கு. வழிதான் வேறயா இருக்கு."

"என்ன அய்யர்வாள் ரெண்டு விதமாவும் பேசறீர்?" என்றார் மணவாளன்.

"ரெண்டும் பேசலைங்காணும். எத்தனை கோகலேக்கள் வந்தாலும் என்னை மாத்திக்க மாட்டேன். நான் திலகர் கட்சிதான். ஆனா கோகலேயை அப்படியே முழுக்க முழுக்கத் தள்ளிட முடியாதுங்கிறதுக்காகச் சொல்ல வந்தேன்."

சில நொடிகளுக்கு எல்லோரும் மவுனமாக இருந்தார்கள். பிறகு அஞ்சனாதேவி எழுந்து கொண்டாள்.

"அப்ப நான் வரட்டுமா, சார்?"

"செய்யுங்கோ."

அஞ்சனா மறந்து போன ஒன்றை ஞாபகப்படுத்திக் கொண்ட அவசரத்துடன், விரைந்து சென்று சமையற்கட்டின் வாயிலில் நின்று, "நான் போயிட்டு வரேன், மாமி" என்று பொதுவாய்ச் சொன்னாள்.

விசாலமும் குஞ்சம்மாவும் தலையசைக்க, அவள் கூடத்தில் புத்தகம் படித்துக் கொண்டிருந்த கங்காதரனின் கன்னத்தில் தட்டி விட்டு ஓட்டமும் நடையுமாய் வாசலுக்குப் போனாள்.

அவள் பின்புறத்தையே பார்த்தபடி நின்ற குஞ்சம்மா, "மாமியாமே மாமி. என்னைப் பார்த்தா மாமியாட்டமா இருக்கு?" என்று தனக்குள் எரிச்சலுடன் சொல்லிக் கொண்டாள்.

வீட்டையடைந்த அஞ்சனா, அவசரமாய்க் காலணிகளை உதறி விட்டு, "அப்பா, அப்பா!" என்று கூப்பிட்டுக் கொண்டே அவரது அறையினுள் விரைவாக நுழைந்தாள்.

நாளிதழிலிருந்து ஒரு முக்கியமான பகுதியைக் கத்திரிக்கோலால் வெட்டிக் கொண்டிருந்த ராஜாராமன் தலையை உயர்த்திப் பார்த்தார்.

"என்னம்மா? ஒரே பரபரப்பாத் தெரியறே?"

"ஆமாம்ப்பா. அந்த காங்கிரஸ்காரர் ராமசாமி வீட்டுக்குப் போயிருந்தேம்ப்பா."

"அட, எங்கிட்ட சொல்லவே இல்லியே நீ? சொல்லி இருந்தா நானும் வந்திருப்பேனே?"


"முதல் தடவையா போனதாலே சொல்லலேப்பா. போய், என்ன ஏதுன்னு ஓரளவுக்காவது தெரிஞ்சுண்டு வந்த பிற்பாடு உங்ககிட்ட சொல்லலாம்னு இருந்தேம்ப்பா. மனுஷாளை எடை போடற சாமர்த்தியம் உங்களுக்குப் போறாது; எல்லாரையும் நம்பிடறேள். அண்ணாவைப் பத்தியும் அவனோட லண்டன் நடவடிக்கைகளைப் பத்தியும் எடுத்த எடுப்பில அவர்கிட்ட சொல்லிடப் போறேளேன்னு எனக்குப் பயம். அதான் அவர் எப்படிப்பட்ட ஆளு, என்ன, ஏதுன்னு தெரிஞ்சுண்டு வரலாம்னு போனேன். ஆனா அவரைப் பார்த்ததுமே புரிஞ்சுடுத்து அவர் எப்படின்னு!"

ராஜாராமன் புன்னகை செய்தார். மனிதர்களை எடை போடும் கெட்டிக்காரத்தனம் தமக்குப் போதாது என்பதில் மனைவியும் மகளும் ஒரே மாதிரியான கருத்துக் கொண்டிருப்பதை நினைத்துத்தான். நிறைய பேரிடம் அவர் ஏமாந்து போயிருந்தது உண்மைதான். எனவே அவர்கள் மீது கோபிப்பதில் பொருள் இல்லை. அதனால், "ஓஹோ, அப்படியா? என்ன தெரிஞ்சுண்டே மிஸ்டர் ராமசாமியைப் பத்தி? மிதவாதியா, தீவிரவாதியா?" என்றார்.

"தீவிரவாதிதான். ஆனா கோபாலகிருஷ்ண கோகலேயை ஒரேயடியா மட்டந்தட்டக் கூடாதுங்கறாப்ல பேசறார்."

"இந்த நாடு ஒரு ஏமாளி நாடும்மா, அஞ்சனா. நமக்குள்ள ஒத்துமை இல்லாம போனதுனாலயும், நமக்குள்ளேயே ஒருத்தரை ஒருத்தர் காட்டிக் கொடுக்கிற புத்தி இருக்கிறவங்க நிறைய பேர் இருந்ததாலேயுந்தான் இன்னிக்கு ஒரு அயல்நாட்டுக்காரன் நம்மை ஆண்டுண்டு இருக்கான்."

"ஆரம்பிச்சுட்டேளா அப்பாவும்



"எங்க தலைவர் மத்தவங்க சொத்துக்கு ஆசைப்படவே மாட்டார்!"

"அதனாலதான்... வெறும் பொறம்போக்காவே வளைச்சிப் போட றாரா...?"

- புதுவண்டி ரவீந்திரன்

பொண்ணும்!" என்ற நக்கலான குரல் கேட்டு இருவரும் திரும்பினார்கள். அஞ்சனாவின் அம்மா பாமா அறைவாசலில் நின்றிருந்தாள்.

"காலங்கார்த்தால எங்கே போனே? போறப்ப கேக்க வேண்டாம்னு இருந்தேன்."

"என்னோட ஃப்ரண்டு வீட்டுக்கும்மா.. அப்பா, காரை எடுத்துண்டு அவா வீட்டுக்கு மறுபடியும் போயிட்டு வறேம்ப்பா. ஒரு முக்கியமான விஷயம் சொல்ல விட்டுப் போயிடுத்து..."

"சரிம்மா. டிரைவரை வேணாக் கூட்டிண்டு போயேன்."

"இல்லேப்பா. நானே காரை ஓட்டிண்டு போறேன்."

"இத பாருடி, அஞ்சனா. இன்னிக்கு ஒருநாள் போயிட்டுப் போறது. இனிமே காரை எடுத்துண்டு போற வேலையெல்லாம் வெச்சுக்காதே. ஆமா. போனேன் வந்தேன்னு போயிட்டுச் சாப்பாட்டு நேரத்துக்கு வந்துடு. உனக்குப் பிடிச்ச சமையல்."

"சரிம்மா. வந்துடறேன்" என்ற அஞ்சனா ஒரு துள்ளலுடன் கார்ஷெட் நோக்கி ஓடிப் போனாள்.

"இதென்ன ஓட்டம், கல்யாண வயசைத் தாண்டி எத்தனை வருஷமாச்சு! கல்யாணம் வேண்டாங்கறாங்கறதுக்காக ஒரு பொண்ணுக்கு இப்படியா இடங்கொடுப்பா? ஊர்ல என்னவெல்லாமோ பேசறா நம்மைப் பத்தி. கொஞ்சமாவது அடக்க ஒடுக்கம் இருக்கா பாருங்கோ. என்னமோ போங்கோ. ஒண்ணும் சரி இல்லே."

"ஊர்ல யாரும் எதுவும் பேசி இருக்க மாட்டாடி. உங்கிட்ட அவா பேசிக்கறதாச் சொன்னாளே, அவளோட அபிப்பிராயம்டி அது. நேரடியா நம்மகிட்ட அப்படிப் பேச முடியுமா? அதான் ஊர்ல நாலு பேர் பேசிக்கிறதா உங்கிட்ட வந்து சொல்றா. யாரு அவ? அவ காதைப் பிய்ச்சுடறேன்."

"காதையோ மூக்கையோ பிய்க்கிறதுக்கு அவ சூர்ப்பனகையும் இல்லே, நீங்க ராமன் தம்பி லட்சுமணனும் இல்லே. சொன்னது நம்மாத்து வேலைக்காரி தங்கம்."

"அவளைக் கூப்பிடு இங்கே. நான் கேக்கறேன்."

"பார்த்தேளா, பார்த்தேளா? இதுக்குத்தான் சொல்ல மாட்டேன்னேன். அவ என்ன பண்ணுவா, பாவம். அவ நம்மாத்துல வேலை செய்யறதால அவ காதுபடப் பேசி இருப்பா. நம்ம காதுல அது அவ மூலமா விழறதுக்காக."

"நான் அதுக்குச் சொல்ற பதிலும் அவ மூலமா அவா காதுல விழட்டுமேடி?"

"அய்யோ வேண்டான்னா. என்னது இது? வீண் அக்கப்போர் பண்ணிண்டு. விடுங்கோ."

"சரி, சரி. விடு. நான் கேக்கல்லே. ஒண்ணு மட்டும் சொல்றேன், கேட்டுக்கோ. நம்ம பொண்ணுக்கு எப்ப கல்யாணம் பண்ணணும், என்ன, ஏதுங்கிறதெல்லாம் நாம தீர்மானிக்க வேண்டிய விஷயம். ஊர்க்காரா இல்லே. என்ன, புரிஞ்சுதா?"

"புரிஞ்சுது, புரிஞ்சுது" என்று அலுப்புடன் கூறியபடி நகர்ந்து விட்டாள் பாமா.

சுமார் அரைமணி நேரம் கழிந்து வேலைக்காரி தங்கம் அவரது அறை வாசலில் வந்து நின்று, "சாமி! உங்களை அவசரமாப் பார்க்கணும்னு ஒரு ஆளு வந்திருக்காரு. வாசப் பக்கத்து ஹால்ல உக்கார வெச்சிருக்கேன்" என்று அறிவித்தாள்.

அவர் எழுந்து போனார். வந்திருந்த ஆள் இளைஞன். அவன் முகத்தில் ஒரு கலவரமும் கவலையும் - ஏன், கோபமும் கூடத்தான் - தெரிந்தன. மிகவும் சிந்தனை வசப்பட்டிருந்தான்.

(தொடரும்)


"ஆறாம் நம்பர் பேஷண்டுக்குத் திடீர்னு 'பல்ஸ் டௌன்' ஆயிடிச்சு டாக்டர்!"

"எப்போ ஆச்சு அப்படி...?"

"'கண்ணைத் திறந்து பாருங்க, உங்க மனைவி வந்திருக்காங்க'ன்னு சொன்னதும் டாக்டர்!"

- சீர்காழி வி. ரேவதி





கோகுலம் ஆகஸ்ட் இதழில்...
●● ரௌடிராஜா, அவன் நண்பன் மணி, கொள்ளைக்காரன் மாயாண்டி ஆகியோரின் தாக்குதல்களுக்கு சிறுவன் சந்தீப் ஈடுகொடுக்கும்
௨வது சாவி
– த.ஜானகியின்
விறுவிறுப்பான புதிய தொடர்கதை
●● குழந்தைக் கவிஞர்
அழ.வள்ளியப்பா
நினைவுச் சிறுகதைப் போட்டி
3 ரூபாய்க்கு 96 பக்கங்கள்!
கோகுலம் ஈக்காடுதாங்கல், சென்னை–97

புறப்பட வேண்டும். நாளை மறுநாள் பம்பாயில் என்னை எதிர்பார்ப்பதாக வேலை உத்தரவு சொல்கிறது.

இந்த இடம் இன்றோடு எனக்கு அந்நியமாகிவிடும். மரமும் செடியுமாகத் தழைத்து நிழல் விரிக்கும் இந்தப் பரப்பில்தான் என் தொழில் நுட்ப அறிவு இலக்கு உணர்ந்தது. கூர்மை கொண்டது. பெயருக்குப் பின்னால் பட்டம் இணைந்தது. படிப்பு முடிந்த கையோடு பம்பாயில், செல்லுலர் தொலைபேசி தயாரிக்கும் நிறுவனத்தில் வேலையானது.

நாடாஷா என்ற முப்பத்தைந்துக்காரி மட்டும் இருந்திருக்காவிட்டால் தெற்கே ஒரு சின்ன ஊரிலிருந்து வெறும் இளைஞனாக வந்தவன் முழுமனிதனான ரசவாதம் இங்கே நிகழ்ந்திருக்காது.


மூன்று ஜீன்ஸ், சட்டைகள், குர்த்தா, பைஜாமா.... ஒரு பெட்டியில் எல்லாம் அடங்கிவிட்டது. ஒரே ஒரு வேலை மிச்சம் இருக்கிறது. நூல் நிலையம் திறந்திருக்கும். ஒரு புத்தகம் திருப்பித்தர வேண்டும். அறையைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தேன்.

இரண்டு பக்கமும் வேப்ப மரங்கள் அடர்ந்து, தரையெல்லாம் சின்னப் பூக்கள் சிதறி, வளைந்து போகிற பாதை. திட்டமிட்டு அமைக்கப்பட்ட தெருக்கள், இடைவழிகள். வகுப்பறைகள், விடுதிகள், மருத்துவமனை. ஒவ்வொன்றாகக் கடந்து கடைகள் அமைந்த பகுதிக்கு வருகிறேன். நடாஷா ஸ்பாஸ்க்கியின் நினைவு கூடவே கவிந்து மிதக்கிறது.

கவுன் போட்ட ஜாக்சன் துரை. நடாஷாவை இதுபோல ஒரு பிற்பகல் பொழுதில் முதலில் பார்த்ததும் மனத்தில் எழுந்த பிம்பம் இது.

நடாஷா இருந்த வீடு





அது நான் கண்டனூரிலிருந்து டில்லி வந்து சேர்ந்திருந்த சமயம். தொலைத் தொடர்பு பற்றிய மேற்படிப்புக்காக அப்போதுதான் இங்கே இடம் கிடைத்திருந்தது. காரைக்குடி கல்லூரியில் 'லோக்கல் ஏரியா நெட் ஒர்க்' பற்றிக் கசடறக் கற்று வந்த பெருமிதத்தோடு வகுப்பில் நுழைய, ஏதோ விட்ட இடத்திலிருந்து தொடங்குகிறதுபோல, 'சேனல் எபிஷியன்ஸி ஆப் ஸ்லாட்டட் அலோஹா' என்று திடுதிப் பென ஆரம்பித்துக் கலக்க அடிக்கிற குறுந் தாடிப் பேராசிரியர்கள். அட்சரம் புரியாத இந்தி. ஜனவரி ராத்திரியில் சுவரைத் தொட்டாலும் அவ்வளவாகக் கொதிக்கிற வேளியில் சூடு ரொட்டி... மேலும் ரொட்டி... உச்சகட்ட வயிற்று நோக்காடு...

ஒரு எலுமிச்சம்பழம் வாங்கிப் பிழிந்து குடித்து விட்டு வரலாம் என்று கடைப்பக்கம் போக, பழம் எல்லாம் விற்றுப் போயிருக்க, மீதி இருந்த இரண்டும் வெள்ளைக்காரி கையில். சொந்த வாழ்க்கையின் சோகத்தை எல்லாம் முகத்தில் தாங்கி அவளைப் பார்த்தேன்.

'நீர்தான் கட்டபொம்மன் என்பவரோ' என்பதுபோல என்னைக் கவனித்த அவள், சட்டென்று கையிலிருந்ததை என்னிடம் நீட்டி, "எடுத்துக் கொள்ளுங்கள் தம்பி..." என்று நல்ல தமிழில் சொன்னாளே பார்க்கலாம்.

ஜாக்ஸன் துரை பிம்பம் பளுவன் போல வெடிக்க, இவளுக்கு எப்படி என் பாண்டிவள நாட்டுப் பின்னணி புலப்பட்டது என்று ஆச் சரியப்பட்டேன்.

"என்ன படிக்கிறீங்க?" திரும்பவும் யாழ்ப் பாணத் தமிழ் எட்டிப் பார்த்தது. சொன்னேன்.

"ஆர் யூ ஸ்டடியிங் ஆர் டீச்சிங்?" எனக்கு ஆங்கிலம் தெரியும். பரிதாபப்பட்டு என்னிடம் தமிழில் பேச வேண்டாம்.

"இரண்டும் தான்..." அவள் சிரித்தபடி பழங்களை என் கையில் திணித்து விட்டுப் பெரிய காய்கறிக் கூடையைத் தூக்கிக் கொண்டாள்.

"ஆர் யூ ஃப்ரம் யுனைட்டட் ஸ்டேட்ஸ் ஆப் அமெழிக்கா?" 'ர'கரத்தை ஞாபகமாக 'ழ'கரமாக நாக்கில் சுழற்றினேன்.

"இல்லை. நான் சோவியத் யூனியனிலிருந்து வருகிறேன்..." நடந்தபடியே சொன்னாள். கையில் வைத்திருந்த காய்கறிக்கூடை நிறைந் திருந்ததால் அதையும், இடது கையில் பால் போத்தலையும் சேர்த்து எடுத்துப் போகச் சிரமப்பட்டாள். நான் ஒரு அடி முன்னால் நகர்ந்து அவள் கையிலிருந்த கூடையை வாங்கிக் கொண்டேன்.

பேராசிரியர்கள் குடியிருப்புக்களை நோக்கி அவள் நடக்க, கூடவே நடந்தேன். வெள்ளைக் காரர்களையோ, சோவியத்காரர்களையோ இத் தனை நெருக்கத்தில் பார்த்ததில்லை. பேசிய தில்லை என்பதாலோ என்னவோ நட்பு சுவாரசியமாக இருந்தது.

அவள் வீட்டுக்குப் போய்ச் சேர்வதற்குள் என் கண்டனூர் பூர்வோத்திரம் முழுவதும் சொல்லி முடித்திருந்தேன். வயிற்று நோக்காடு பற்றியும்.

வெதுவெதுப்பான நீரில் பிழிந்து உப்பும் சர்க்கரையும் சேர்த்து அவள் கொடுத்த எலுமிச்சம் சாறோடு எங்கள் நட்பு தொடங் கியது.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை பிற்பகலிலும் அவள் வீட்டுக்குப் போவேன். நான் நினைத்த படியே அவளுக்கு என்னை விடச் சரியாக ஐந்து வயது அதிகம். சென்னையிலும், அப்புறம் யாழ்ப்பாணத்திலும் அவள் தகப்பனார் தூதரகத் தகவல் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றியபோது, பள்ளிக்கூட நாட்களில் தமிழும், இட்லி தோசையும் சுபாவமாகப் பழகி இருக்கிறது. அப்பா ஓய்வு பெற்று லெனின் கிராடில். ஹாம்பா பல்கலைக் கழகத்தில் படித்துவிட்டு, இங்கே வந்திருக்கிறாள்.

" நடாஷா, நீ கம்ப்யூட்டர் மேல்படிப்பும் ஆராய்ச்சியும் செய்யணும்னா யு.எஸ். போயிருக் கலாமே. என்ன இருக்குன்னு இந்தியா வந்தே?"

"இந்த தேசத்தின் அறிவுக்கு என்ன குறைச் சல்? நீங்கள் தானே எங்களின் பெருமைக்குரிய நண்பர்கள்?"

முதன் முதலாக எனக்கு இந்தியன் என்ற உணர்ச்சி பொங்கிய நேரம் அது...

தொடர்ந்து மூன்று ஞாயிற்றுக்கிழமை அவள் வீட்டுப்பக்கம் போக முடியவில்லை. இடமும், படிப்பும் பிடிபட ஆரம்பித்து, தேர்வுக் காக வெறித்தனமாகப் படித்துக் கொண்டிருந்த நேரம் அது. செமஸ்டரில் நன்றாக மதிப்பெண் வாங்கித் தெம்பாக அடுத்த ஞாயிறன்று பிற்பகல் அவள் வீட்டு அழைப்பு மணியை அழுத்தி னேன்.

"மூன்று வாரமாக நான் வராமல் ஞாயிற்றுக் கிழமை போரடித்ததா?" அவளை விலக்கிவிட்டு, அடுப்பில் வார்க்க ஆரம்பித்திருந்த தோசை யைத் திருப்பியபடி கேட்டேன்.

இரா. முருகன்



"இரண்டு குழந்தைகளுக்கு மேல இருந்தால் அரசியல்ல போட்டியிடக் கூடாதுன்னு சட்டம் வரப் போகுதாம் தலைவரே!"

"நல்ல வேளை இரண்டு மனைவின்னு சொல்லாமல் இருக்காங்களே!"

- சீர்காழி வி. ரேவதி

"இல்லை... இல்லை.. இப்போதெல்லாம் ஞாயிற்றுக்கிழமை என்றில்லை. எப்போதுமே பொழுது சுவாரஸ்யமாகப் போய்விடுகிறது."

"ஏன்... நிக்கொலாய் வந்திருக்கிறானா?"

நிக்கொலாய் அவளுடைய வருங்காலக் கணவன்.

"நிக்கொலாய் மாஸ்கோவில் சவுக்கியமாக பிரஷ்னேவ் மேதினஅணிவகுப்பைப் பார்வையிட்டதைப் பற்றி வானொலியில் செய்தி வாசித்துக் கொண்டிருக்கிறான். இங்கே தினமும் என்னைப் பார்க்க வருகிற தோழன் அவனையும், உன்னையும் விட சுவாரசியமானவன்."

நடாஷாவின் கண் சிமிட்டலின் அர்த்தம் பிடிபடவில்லை.

தோசை வார்த்து முடித்து தட்டுகளில் எடுத்துக் கொண்டு முன்னறைக்கு வந்தோம். புதிதாக அங்கே ஒரு கணிப்பொறி முளைத்திருந்தது. லெனின் புகைப்படத்தோடு, தபாலில் வந்த ஏதோ ரஷ்யப் பத்திரிகை நாலு மடிப்பாக டீப்பாவில் கிடந்தது.

"நிக்கொலாய் எழுதின கட்டுரை வந்திருக்கிறது... லெனினையும் காந்தியையும் ஒப்பிட்டு இருக்கிறான்." அவள் காட்டிய பக்கத்தில் ஏறக்குறைய ஆங்கில எழுத்துக்கள் பத்தி பத்தியாக முறைத்தன.

"காந்தியைச் சொல்லு... சுயமாக சிந்தித்தார். ஆனால் காரல் மார்க்ஸ் சொன்னதைத் தானே லெனின் திருப்பிச் சொன்னார்?"

எனக்கு லெனின் மேல் விரோதம் எதுவும் இல்லை. என்றாலும் அவள் வாயை என்னவோ கிண்ட வேண்டும் போல உற்சாகமான பொழுது.

"காந்தி என்ன சொன்னார்?" அவள் தோசையை விண்டபடி கேட்டாள்.

"வெள்ளையனே வெளியேறு..."

"அப்புறம்?"

எனக்குச் சொல்லத் தெரியவில்லை. என்றாலும் என்ன? அவர் நிச்சயம் நிறையச் சொல்லி இருப்பார்...

"நீ காந்தியைப் பற்றி முதலில் நன்றாகத் தெரிந்துகொள். அப்புறம் லெனினைப் பற்றி நான் சொல்கிறேன். மனிதனின் மேம்பாட்டுக்காகப் பாடுபட்ட உத்தமர்கள் இரண்டு பேரும்..."

"ஆனாலும் லெனின்..." நான் ஏப்பம் விட்டபடி கேட்டேன்.

"லெனினுமாயிற்று... வெங்காயமுமாயிற்று. என் தோழன் வந்துவிட்டான்..."

அவசரமாகப் பின்கதவை நோக்கிப் போனாள்.

"பாரதியார் கதையில் சொன்ன மாதிரி..." என்னைப் பார்த்துக் குறும்புத்தனமாகச் சிரித்தாள். நுழைகிற தடியன் யாராக இருக்கும்? நானும் எழுந்து போனேன்.

ஒரு பெரிய மயில். குரோட்டன்ஸ் செடிகளுக்குப் பக்கத்தில் நிழல் விரித்திருந்த மண் தரையில் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது.

நடாஷா ஒரு பிளாஸ்டிக் தட்டில் கோதுமை மணிகளும், பீங்கான் பாத்திரம் நிறையப் பாலுமாக அதன் முன்னால் வைத்தாள்.

பக்கத்து மரக்கிளையைக் கவனித்தேன். தோகை இல்லாத இன்னொரு மயிலும் அங்கே இருந்தது.

"அது இவனுடைய காதலி..."

நடாஷா சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஜில்லென்று பறந்து பெண் மயிலும் கீழே வந்தது. மௌனமாகத் தானியம் கொறிக்கும் இணை.

இவ்வளவு பக்கத்தில் மயிலைப் பார்த்தது இல்லை. ஆண்மயிலின் தோகையின் நீளமும், பெண்ணின் கூரிய அலகும், சுழல்கிற கண்களும் ஏனோ பயத்தை ஏற்படுத்தின. நான் நடாஷா பின்னால் நின்றபடியே இருந்தேன்.

அதற்கப்புறம் ஒரு மாதம் போல நடாஷாவை சந்திக்க நேரமே கிடைக்கவில்லை. 'புராஜக்ட் ஒர்க்' என்று முறுக்கிய வயர்ச் சுருளும், ரீபீடர்களும், சிக்னல் பூஸ்டர்களுமாகத் தினங்கள் வேகமாகக் கடந்து சென்றன.

முதல் புராஜக்டில் எங்கள் குழுவுக்கு ஏகப்பட்ட பாராட்டு. பல்பீரும் முகர்ஜியும் கொண்டாடித்தான் ஆகவேண்டும் என்றார்கள். சப்தர் ஜங் என்கிளேவ் போனோம்.

சாப்பாடு. அப்புறம் அரையிருட்டில் காபரே. வேண்டாம் என்று குறுகுறுப்போடு மறுக்க, விஸ்கி...

டாக்சியில் திரும்பி இன்ஸ்ட்டிட்யூட் பின் வாசலில் இறங்கிக் கொண்டோம்.

நடந்து, பழகிய பாதையில், பேராசிரியர்கள் குடியிருப்பை நோக்கித் திரும்பினேன். எல்லா வீட்டிலும் இருட்டு. நடாஷா வீட்டு முன் அறையில் வெளிச்சம். அழைப்பு மணியை அழுத்தினேன்.

நைட்கவுனோடு கதவைத் திறந்த நடாஷாவை ஒரு பெண்ணாக மட்டும் பார்த்தேன்.

''என்ன இந்த நேரத்தில்? உடம்பு சரியில்லையா?''

நெற்றியில் படிந்த கரத்தின் மென்மையான உஷ்ணம்.... ஜில்லென்று விரியும் மயில் தோகையாய் மனம் பரபரத்தது.

நான் நடாஷாவின் முகத்துக்கு வெகு அருகே குனிந்தேன்.

அவள் புறங்கை என்னைத் தள்ளிய வேகத்தில் தரையில் சரிந்தேன். திகைத்துக் கிடந்த என்னை நோக்கி வேகமாக வந்தாள். நீளமான அலகோடும் பயம் உண்டாக்கும் விழிகளோடும் என்னைக் கொத்திக் கிழிக்க வரும் பெண்மயில்... நான் மெல்ல எழ முயற்சி செய்தேன்.

இரண்டு கையாலும் என்னைத் தூக்கி னாள். விடுவித்துக் கொள்ள நான் செய்த முயற்சிகள் வீணாக, தொப்பென்று வாசலில் வந்து விழுந்தேன். கதவு உடனே அடைக்கப் படுகிற சத்தம். நாலு பக்கமும் சூழ்ந்த இருள்...

விடுதி அறைக்கு வந்ததும் படுக்கையில் விழுந்ததும் எப்படி என்று இன்றுவரை எனக்குத் தெரியவில்லை. சுற்றிலும் மயில்கள் பறந்து இறங்கி ஆக்ரோஷமாகக் கூவியபடி இரையைக் கண்ட வெறியோடு துரத்தி வர, நான் முடிவே இல்லாமல் ஓடிக் கொண்டே இருக்கிற பிரமை...

''சே! கன்னாப்பின்னான்னு குடிச்சு காய்ச்சலை வரவழைச்சிட்டிருக்கே...''

முகர்ஜியும் மற்றவர்களும் 'சிக்பே' என்ற வனாக மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் தூக்கிப் போட்டுக் கொண்டு ஓடியபோது சுவர் முழுக்க மயில்கள் 'செத்துப்போ' என்று பழிப்புக் காட்டியதாகத் தோன்ற மயங்கிச் சரிந்தேன்.

கிட்டத்தட்ட ஒரு வாரம் ஆஸ்பத்திரி வாசம். கண் விழித்த பொழுது என்னைப் புழு போல உணர்ந்தேன். வயது வித்யாசமும், தகுதியும் பாராமல் பழகிய ஒரு தோழிக்கு நான் செய்த பிரதிபலன்... என் படிப்பும், அறிவும் நாசமாகப் போகட்டும்... இப்படியே உயிர் போனால் கூடப் பாதகமில்லை.

ஒரு பகல் நேரத்தில் கண் விழித்த போது பக்கத்தில் பூங்கொத்து. 'சீக்கிரம் நலமடைய வாழ்த்துக்கள்' என்று அட்டை...

''கம்ப்யூட்டர் துறையிலிருந்து மிஸ் நடாஷா வந்திருந்தார். நீங்கள் கண் விழிப்பீர்கள் என்று ஒரு மணி நேரம் பக்கத்திலேயே உட்கார்ந்திருந் தார். எழுப்ப வேண்டாம் என்று சொல்லிவிட்டு இப்போதுதான் கிளம்பினார்.''

சட்டென்று நடாஷாவும், மயில்களும் நினைவில் வரக் கண் நிறைந்தது.

''**ஏ**தாவது சொன்னீர்களா?''

எனக்கு முன்னால் நிற்கிற லைப்ரரியன் கேட்கிறார். அவர் குரல் என்னை இந்த வினாடிக்கு இழுத்து வந்தது. நடந்தபடியே ஐந்து வருடம் பின்னால் போய் விட்டிருக்கிறேன்... இது நூல் நிலையம். புத்தகம் திருப்பித்தர வந்திருக்கிறேன்...

நான் சும்மா சிரித்து வைத்தேன். நாலைந்து இடத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டு என்னை அனுப்பினார்.

திரும்பும்போது பேராசிரியர்கள் குடியிருப்புப் பக்கமாக நடந்தேன். நடாஷா இருந்த வீட்டை ஒருமுறை பார்க்க வேண்டும்... கடைசியாக ஒருமுறை.

அவளைத்தான் அப்புறம் பார்க்க முடியாமலே போய் விட்டது. நான் ஆஸ்பத்திரியிலிருந்து வருவதற்குள் அவள் மாஸ்கோ போயிருந்தாள். ஏதோ அவசர அழைப்பு என்று போனதாகச் சொன்னார்கள். அப்புறம் ஏனோ அவள் திரும்பி வரவே இல்லை.

நடாஷா என்ன ஆனாள்? 'லெனினும் காந்தியும்' எழுதிய நிக்கலொய் என்ன செய்கிறான்? எங்கே இருக்கிறார்கள்?

நடாஷா இருந்த வீடு. வாசலில் 'நாராயண பிஷாரடி, பேராசிரியர்' என்று பலகை.

''ஹேய்... டெய்லி இதொரு சல்யம்... விரட்டினாலும் போகாமல்... சாயந்திரம் லானில் உட்கார்ந்து படிக்க முடியவில்லை... மாலி எங்கே தொலைந்தான்?''

ஜன்னல் பக்கம் பேராசிரியர் பிஷாரடி இரைந்து கொண்டிருந்தார்.

பின்னால் தோட்டத்தில் ஒரு மயில் ஆடிக் கொண்டிருந்தது.

வள்ளலார் வணங்கிய வேலவன்

ஓம் என்று சொல்லுவோம்

கொஞ்சம் கண்களை மூடிக் கொண்டு, முன்னூற்றைம்பது ஆண்டுகள் பின்னோக்கிச் செல்லுங்கள்.

முத்தியாலு நாயக்கரின் பூந்தோட்டம். அதில் ஒரு அழகான குளம். பக்கத்தில் சர்வ சித்தி விநாயகருக்கு ஒரு சிறு கோவில் எழுப்புகிறார் கந்தப்ப ஆசாரி என்பவர். ஊரார் இவரைக் கந்தப் பண்டாரம் என்று அழைக்கிறார்கள். இவருடைய நண்பர் மாரிச் செட்டியார்.

கந்தப் பண்டாரமும் மாரிச்செட்டியாரும் சென்னையிலிருந்து மாமல்லபுரம் போகிற பாதையில் 28 கல் (45 கிமீ) நடந்து திருப்போரூர் முருகனை வழிபடச் செல்வது வழக்கம். அப்படி ஒரு சமயம் செல்கையில், ஒரு வேப்பமரத்தடியில், கறையான் புற்றில் ஒரு முருக விக்கிரகத்தைக் கண்டெடுத்தார்கள்.

இரண்டடி உயரத்தில் விளங்கிய அந்த மூலவரைச் சுமந்து கொண்டு முத்தியாலு நாயக்கரின் பூந்தோட்டத்துக்கு வந்தார்கள். வழியில் பக்கிங்ஹாம் கால்வாய் குறுக்கிட்டது. சாக்கடை போல் விளங்கும் இன்றைய பக்கிங்ஹாம் கால்வாயை எண்ணாதீர்கள். நுங்கும் நுரையுமாக சுழித்துக் கொண்டு ஓடிய அன்றையக் கால்வாய் வெள்ளத்தில் போராடி முருகனைக் கரை சேர்த்தது பக்தியும் வீரமும் இணைந்த ஒரு வரலாறு!


பூந்தோட்டத்து விநாயகர் குளக்கரையிலேயே நின்று கொண்டார். தம்பிக்கு அற்புதமான கோவில் ஏற்பட்டதோடு. குளமும் சரவணப் பொய்கை என்கிற திருநாமத்தோடு முப்பத்தோரு படிகளுடன் 'இன்றும்' வற்றாத வாறு அமைந்து சென்னைக்குப் பெருமை சேர்க்கிறது.

கந்தசாமி கோவில் என்று பாமர வழக்கில் உள்ள ஸ்ரீமுத்துக்குமாரசுவாமியின் ஆலயமான கந்தகோட்டம்தான் இத்தனை பெருமைகளுக்கும் உரியதாய்த் திகழ்கிறது. நெருக்கடி மிகுந்த பூங்கா நகர்ப் பகுதியில் இப்படி ஒரு கோவில் இருப்பதில் கூட வியப்பில்லை. படுசுத்தமான பராமரிப்பில், வற்றாத நீர் நிலையாக விளங்குகிற சரவணப் பொய்கை ஒரு நம்ப முடியாத அற்புதம்!

வாத்துகளும் மீன்களும் ஆனந்தமாக வளையவருகிற இந்தக் கந்தனின் ஆலயக் குளத்தில் வெல்லம் கரைப்பது என்று ஒரு நம்பிக்கை. நோய் தீர்க்கும் அற்புதம் என்கிறார்கள்.

தம்பிக்கு விசாலமான இடமளித்த குளக்கரை விநாயகர், சித்தி, புத்தி என்று இரு துணைவியரோடும் அருள்பாலிக்கிறார். அருகிலேயே காசி விசுவநாதரும் விசாலாட்சி

• ஆலய முகப்பு





அம்மையும் கோயில் கொண்டிருக்கிறார்கள். பெரிய கண்ணாடியில்தான் முதலில் விசாலாட்சி அம்மை காட்சி தருவார். அப்புறம் கொஞ்சம் சிரமத்தோடு கருவறைக்குள் தலையை நுழைத்துத்தான் நிஜரூபத்தைத் தரிசிக்க வேண்டும்.

கந்தகோட்டத்துக்கு உள்ளே நுழையும்போதே இடப்புற மூலைப் பிராகாரத்தில் நண்பர்கள் மாரிச் செட்டியும், கந்தப் பண்டாரமும் காட்சி தருகிறார்கள்... இல்லை, கவனித்து மேற்பார்வையிடுகிறார்கள் என்பதே பொருத்தமாயிருக்கும்!


• விளக்கு ஏந்திய அடியார்...

மாரிச் செட்டியார் இந்த முருகனுக்குச் செங்கல்லால் ஆலயம் எழுப்பித்த போது அந்தத் திருப் பணிக்கு உறுதுணையாய் உதவி னார் அவர் மனைவி ஆதிலக்ஷ்மி அம்மாள். தாம் அணிந்திருந்த திரு மாங்கல்யம் ஒன்றை மட்டும் வைத் துக் கொண்டு எல்லா அணிகலன் களையும் கொடுத்து விட்டார்! இதனை உணர்த்துவது போல் ஏராள மான அணிகலன்களோடு செல்வச் செழிப்பில் திளைத்து அடியார் களையும் வளப்படுத்துகிறார் இந்த முருகன்.

இங்கே மூலஸ்தானத்தை விட உற்சவமூர்த்திக்கே முதலிடம் என் கிறார்கள். இவர்தான் தனிப்பட்ட கருவறையில் வள்ளி தெய்வானை யோடு விளங்குகிற முத்துக்குமார சுவாமி.



• ஸ்ரீ முத்துகுமாரஸ்வாமி: நெரிசல் மிகு சென்னையில்...



• திருக்குளம் : நம்பிக்கை ஊற்று

கந்த கோட்டத்தில் வித்தியாசமான கலைப் பொக்கிஷங்களும் உண்டு. ஆதிசேடன் படத்தில் முருகப் பெருமான் காட்சி தருகிற இரண்டு திருவுருவங்கள் அற்புதமானவை. இங்குள்ள பழனியாண் டவர் சந்நிதியில் பாவை விளக்கைப் போல் விளக்கு ஏற்றி, ருத்திராட்ச மாலையைத் தலையில் அணிந்து நிற்கும் அடியார் உருவச் சிலையும் காட்சிக்கு அரியது. பழனியாண் டவர் சந்நிதிக்கு அருகே பள்ளியறைக் கதவுகள் மிக சமீபத்திய கலைத் திறனுக்கு எடுத்துக்காட்டு. 108 நடனப் பெண்மணிகளின் கரணங்களை அழகுற வடித்திருக்கிறார்கள்.

கமலமனராஜன்

மூலவர் முருகனுக்கு எதிரே வழக்கமாய்க் காட்சி தருகிற மயில் இல்லை. இங்கே யானையின் வடிவம்!

கந்தகோட்டம் என்றால் உடனே நினைவுக்கு வர வேண்டியவர் திருஅருட் பிரகாச வள்ளலார் சுவாமிகள்தாம். 'தப்பற்ற சென்னை, தழைவுற்ற சென்னை, தானமிகு சென்னை, தரையில் உயர் சென்னை, திருவோங்கு சென்னை என்று முப்பத்தோரு பாடல்களின் சென்னையையும் சேர்த் தல்லவா புகழ்ந்திருக்கிறார்?

தருமமிகு சென்னையில்
கந்தகோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி
உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே...

என்று அமுதமழையாய்ப் பொழியும் 'தெய்வமணி மாலை'யை விட வேறென்ன சிறப்பு வேண்டும் இந்த முருகனுக்கு?

படங்கள் : யோகா



• ஆனந்தனின் சோகம்

சன் டீவி மூலம் பிரபலமாகி விட்ட முகங்கள் இவை. இவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு கேள்வி எழுப்பினோம்!

"கோட்டுப் போட்ட நாரதர்" என்று ரசிகர்கள் சூட்டியுள்ள பட்டப் பெயருடன் ஜோடிப் பொருத்தம் நிகழ்ச்சியை நேற்று வரை நடத்திய எம். ஜே. ரெகோ:

"நீங்களும் உங்கள் மனைவி புஷ்பியும் ஜோடிப் பொருத்தம் நிகழ்ச்சியில் கலந்துகொண்டால் பரிசு பெறுவீர்களா?"

பதில் : "எனக்கும். அந்த நம்பிக்கை எனக்கு இல்லை!"

"விவாத மேடை", "நேருக்கு நேர்" நிகழ்ச்சிகள் நடத்தி வரும் ரபி பெர்னார்ட்:

"அரசியல்வாதிகளிடம் இடக்குமடக்காகக் கேள்வி கேட்கிறீர்களே? பிரச்னை ஏதும் வந்ததுண்டா?"

"சுப்பிரமணியசுவாமி தம் பேட்டியில் இன்றைய அரசாங்கத்தை "பிசாசு அரசு" என்று குறிப்பிட்டு விட, அதை எதிர்த்து சன் டீவி உள்ள அண்ணா அறிவாலயம் எதிரே தர்ணா நடத்தப் போவதாக அதிமுகவினர் வந்து விட்டனர். "அது சுசுவாமியின் கருத்துத்தானே தவிர சன் டீவியின் கருத்து அல்ல" என்று விளக்கி, சமாதானப்படுத்தி அனுப்பினோம்."

பெயரிலேயே ஆனந்தத்தைக் கொண்டுள்ள ஆனந்த கீதன் :

"வார்த்தை விளையாட்டு நிகழ்ச்சி நடத்துகிறீர்களே; சோகமாக முடிந்த அனுபவம் ஏதும் உண்டா ஆனந்த கீதன்?"

"சென்னையில் வார்த்தை விளையாட்டு




• 30 புத்தகம்;
3 தகவல்



• ரொம்ப
சாது!

பிரபலங்களிடம் ஒரு கேள்வி!



• இடக்கு மடக்கு கேள்வி

நிகழ்ச்சியினிடையில், "காதலர்களுக்கு ஒரு வாய்ப்பு; இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க ஜோடியாக மேடைக்கு வரலாம்" என்று நான் அறிவிக்க, ஒரு ஜோடி மேடைக்கு வந்தனர். அறிமுகக் கேள்விகளை நான் கேட்கப் போக அவர்களோ, கண்கலங்கி முதல் நாள்தான் வீட்டை விட்டு ஓடி வந்து, காலையில்தான் ஒரு கோயிலில் திருமணம் செய்து கொண்டதைக் கூறினர். எனக்கு நெஞ்சம் கனத்துவிட்டது. "போட்டியில் மட்டுமில்லை; வாழ்க்கையிலும் தோற்கக் கூடாது" என்று கூறிப் பரிசுகள் அளித்து அனுப்பினேன். அவர் கள் இப்போது எங்கே இருக்கிறார்களோ!"

மாமியார் - மருமகன் ஜோடிப் பொருத்தம் நிகழ்ச்சி நடத்தும் மாலா :

"ஆளை மடக்கும் விதமாக அதிர்ந்து பேசி நீங்கள் கேள்விகள் கேட்பதில்லையே, ஏன்?"

"அதையேன் கேட்கிறீங்க, நான் ரொம்ப சாது. 'என்ன இப்படி இருக்கிறேனே' என்று என்னை நானே நொந்து கொண்டது கூட உண்டு. ஆனா பாருங்க, ராஜீவ்காந்தி முதலாண்டு நினைவு நாளையொட்டி ஒரு ஸ்கிரிப்ட் எழுதி அதை சோக வயலின் இசை பின்னணியில் வாசிச்சேனா, அதைக் கேட்டு நிகழ்ச்சியை ஓ.கே. செய்யும் பொறுப்பிலிருந்த பெண் அதிகாரி, துக்கம் தாங்காமல் அழுதே விட்டார்! 'சரிதான், நம்மை விட சாதுக்கள் இருக்காங்க' என்பது புரிந்ததும் எனக்கே புதுத்தெம்பு வந்து விட்டது. நிகழ்ச்சி - முன்னை விடவும் சரள சகஜமாக நடத்துகிறேன்!"

சினிமா குவிஸ் நிகழ்ச்சிகளை நடத்தும் டி. கே. வி. ராஜன் :

"இந்த குவிஸ் நிகழ்ச்சிகளுக்காக நீங்கள் சுவாரஸ்யத் தகவல்களைப் பெற ரொம்ப உழைக்க வேண்டியிருக்குமே?"

"சந்தேகமென்ன? பெரிய பெரிய நூலகங்கள் முதல் நடைபாதைக் கடைகள் வரை அலசி முப்பது புத்தகங்கள் படித்தால், மூன்று தகவல்கள் தேறலாம். அவற்றைக் கேள்விகளாக அமைக்கலாம். சில உதாரணங்கள் சொல்லட்டா?

- வீணை பாலசந்தர் நடித்த ஒரு படத்துக்கு அவருக்கு 'டப்பிங்' குரல் கொடுத்தவர் சந்திரபாபு!
- சிவாஜிக்கு 'நடிகர் திலகம்' பட்டம் கொடுத்தது 'பேசும் படம்' பத்திரிகை!
- 'சினிமா ரிப்போரர்' என்று யாருக்குப் பெயர் வழங்கியது தெரியுமா? என். எஸ். கிருஷ்ணனுக்கு! படம் எடுத்த பிறகு 'ஓடுமா?' என்ற சந்தேகம் வந்தால், கலைவாணரை அணுகுவார்கள். அவர் ஒரு 'காமெடி டிராக்' அமைத்து மதுரத்துடன் சேர்ந்து நடித்துத் தருவார். படம் 'ஹிட்' ஆகி விடும்!"

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

படங்கள் : **யோகா**



"கோட்டுப் போட்ட நாரதர்"



மாருதி ஜிப்ஸியெல்லாம் சும்மா கிடக்குதுன்னு யார் சொன்னது? சமர்த்தா 'ரவுண்ட்ஸ்' கிளம்பிட்டேன் பார்த்தீங்களா?



பையன்
காக,

சினிமா ஸ்டில்ஸ்!



ஒத்தக்
பிடிக்கா
நமக்செ
கிடையா

அட, அந்தரத்துல கட் - அவுட் தொங்குது! 'அம்மா' பிளேன்ல போறாங்களா என்ன?



ல.கே.ஜி. அட்மிஷனுக்
ளக்கு வெச்ச எக்ஸாம்ல
லாயிட்டேம்மா!




நெஜத்தைச் சொன்னா...சில
காட்சிங்க எனக்கே கூச்சம்...
அதுக்குத் தான் கூலிங்கிளாஸ்.

மயிலாப்பூர் தேர்தல்ல மூக்குத்தி
குடுத்தாங்களே, வாங்கிப்
போட்டிருக்கக் கூடாதா?



ல்ல நின்னு பிடிவாதம்
சொன்னா கேளு;
லாம் இட ஒதுக்கீடு



இண்டர்வியூ

“இந்த 'இண்டர்வ்யூ'ல்லாம் சும்மா கண்துடைப்புக்குத்தான். நான் 'மேனேஜர்' ரூம்ல இருக்கச்சே, யாரோ ஒரு ஆளு அவருக்கு 'போன்' பண்ணினாரு. இவரும் “சரி, சரி, அந்தப் பையனையே செலக்ட் பண்ணிடறேன்னாரு.”

ப்யூன் மெல்ல காதைக் கடித்து விஷயம் சொன்னதும் ஜிவ்வென்று பிரகாஷின் ரத்தம் ஒரு கொதிநிலைக்குப் போனது.

“ராஸ்கல்ஸ். இருக்கிறவனெல்லாம் 'இளிச்சவாயன்னு' நினைச்சிட்டீங்களா. இப்படிப்பட்டவங்களையெல்லாம் சும்மா விடக் கூடாது!”

படியேறி விறுவிறுவென்று மேனேஜரின் அறைக்குள் தடாலடியாய் நுழைந்தான்.

“சார், சார் நில்லுங்க” என்று வாசலில் நின்றவன் தடுத்ததைப் பொருட்படுத்தவில்லை.

“யாருப்பா நீ. அனுமதியில்லாம உள்ளே நுழையறே. நாகரீகம் தெரியாதா உனக்கு?”

“என்னய்யா பொல்லாத நாகரீகம். நீங்க செய்யறது மட்டும் ரொம்ப யோக்யமோ? 'இண்டர்வ்யூ'ங்கிற பேரில எங்களையெல்லாம் இழுத்தடிக்கவா செய்யறீங்க?”

அவர் சட்டையைப் பிடித்து 'பளார்' என்று அறைந்தபின்தான் அவன் ஆத்திரம் வடிந்தது.

அவன் வீடு திரும்பியதும் அப்பா கேட்டார் : “என்னடா இண்டர்வ்யூவில் 'செலக்ட்' ஆயிட்டியா?”

“இல்லைப்பா. நடந்தது என்னன்னா...”

அவன் சொல்லி முடிக்கவும்,

“அடப்பாவி, நீ போனதுக்கப்புறம் உங்க பெரியப்பா வந்திருந்தாரு. உன் 'இண்டர்வ்யூ' விஷயம் சொன்னதும், “அடடே அந்தக் கம்பெனி மேனேஜர் என் பிரெண்டாச்சேன்னு சொல்லி, அவருக்கே 'போன்' பண்ணி உன்னை 'செலக்ட்' பண்ணச் சொன்னாரு. நீ என்னடான்னா எல்லாத்தையும் கெடுத்துப்புட்டியே.”

அப்பா சொல்லச் சொல்ல பிரகாஷிற்குத் தலை சுற்றியது.

- கி. சிவசுப்பிரமணியன்

வேதபுரத்து வியாபாரிகள்

4

இந்திரா பார்த்தசாரதி

'சரணாகதித் தத்துவமென்பது வைணவ தர்மத்தில் ஓர் முக்கிய இடம் வகிக்கிறது...' (வேதபுரத்து தர்ம சாத்திரங்கள் ஆய்வு – பக்.' 633-34...)

மாடிப் படிகளில் ஏறிச் செல்ல முற்பட்ட அபூர்வா, கலியமூர்த்தி அவளை அழைப்பது கேட்டுக் கீழே இறங்கினாள்.

"என்ன அக்கிரமம் பாருங்க..! எனக்கு ஒன்னும் புரியலே.." என்றார் கலியன்.

"அவங்க எங்கே?"

"தெரியலியே..."

"அந்த ஆளை எழுப்பப் பாருங்க.."

கலியன் கண்ணப்பனருகில் சென்று அவன் பெரிய சரீரத்தை உலுக்கினார்.

"எழுந்திர்றா.. குடிச்சிட்டுக் கிடக்கிறான் பரதைப் பய.."

கண்ணப்பன் கண்கள் லேசாகத் திறந்தன. அவன் பார்வை கலியன் மீது சிறிது நேரம் குத்திட்டு நின்றது. கலியன் யாரென்று அவனுடைய மூளைக்கு இன்னும் செய்தி அனுப்பவில்லையென்று தெரிந்தது. அவன் தொடர்ந்து கலியனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"எழுந்திர்றா!"

கண்ணப்பன் மூளையில் மின்னலடித்தது. எழுந்திருக்க வேண்டுமென்ற உணர்வு உந்துதல் பெற்றது; ஆனால் சரீரச் சோர்வு இடம்கொடுக்கவில்லை.

"ஐயா... ஐயா..." என்று முனு முனுத்தான்.

"என்னடா ஆச்சு?"

அவன் பார்வை அபூர்வா மீது விழுந்து சிறிது நேரம் தட்டுத் தடுமாறியது. மூளைக்குச் செய்தியை அறிவிக்கும் நரம்பு, 'ஓவர்-டைம்' வேலை செய்யத் தொடங்கியது என்று முகத்திலிருந்தும் தெரிந்தது. 'யார் இவங்க..? பாத்த மாதிரியிருக்குது... ஓ..'

மறுபடியும் பார்வையில் மின்னல்.

"ஐயா... இவங்க..."

"சொல்லுடா... என்ன?"

"மாடியிலே... இருக்காங்கல்லே..? ஆமாம்... அவங்க தான்..."

"என்னடா சொல்றே?"

திடீரென்று வேறொரு நினைவு தாக்க எழுந்து உட்கார முயற்சி செய்தான். கலியமூர்த்தி அவன் உட்கார உதவி செய்தார்.

"என்னடா ஆச்சு உனக்கு? ஏன் இப்படி குடிச்சே? நீ குடிக்க மாட்டியே, என்ன தைரியமிருந்தா, என் வீட்டிலேயே குடிச்சிட்டுப் புரளுவே, சொல்லுடா, சொல்லு."

கண்ணப்பன் கண்களை மூடிக் கொண்டான்.

"என்னடா, மறுபடியும் தூங்க ஆரம்பிச்சுட்டே?"

"அவன் என்ன நடந்ததுன்னு, யோசிச்சுப் பாக்கறான்னு நினைக்கிறேன், கொஞ்சம் 'டைம்' கொடுங்க..." என்றாள் அபூர்வா.

"அம்மா எங்கேடா?"

கண்ணப்பன் கண்களைத் திறந்து புன்னகை செய்தான்.

"என்னடா சிரிக்கறே?"

"அம்மாதான் குடிக்கச் சொன்னாங்க. நான் மாட்டேன்னேன். ஊத்தி ஊத்தி கொடுத்தாங்க... ஒரு நல்ல அனுபவம்..." அவன் மறுபடியும் கண்களை மூடிக் கொண்டான்.

"என்னடா சொல்றே நாயே..."

"நீ இட்டிட்டுப் போய்யா. நடந்தது நடந்தாச்சு.. நான் பொறுப்பில்லே... என்னை அடி, உதை... நடந்தது, நடந்தாச்சு. என்னைக் காயாதே, அதான் சொல்லுவேன்..." - அவன் கண்களைத் திறக்கவில்லை. முகத்தில் புன்னகை.

"இவன் என்ன சொல்றான்?"

"அவங்க இல்லேன்னு நிச்சயமா தெரியுமா?"

"போயிட்டா... இந்தப் பயலுக்குத் தண்ணி ஊத்திக் கொடுத்துட்டுப் போயிட்டா..."

"எப்படித் தெரியும்?"

கலியமூர்த்தி ஒரு சிறிய துண்டு காகிதத்தை அபூர்வாவிடம் நீட்டினார்.

"நீ நல்லா இரு... நான் போறேன்.. வனிதா."

"உங்களை வாழ்த்தியிருக்காங்களே..." என்றாள் அபூர்வா புன்னகையுடன்.

"கிண்டலா செய்றீங்க..? இன்னைக்கு யார் முகத்திலே முழிச்சேனோ, நாலு லட்சம் நஷ்டம், இவ போயிட்டா! என் வீட்டிலேயே என் வேலைக்கார நாய் என்னைப் பாத்து சிரிக்கிறான்."

"அப்படியெல்லாம் சொல்லாதீங்க தலைவரே, நான் உங்களைப் பாத்தவுடனே முதல்லே பயப்பட்டேன், இப்பொ சந்தோசமாருக்கேன். இன்னைக்கு நான் யார் முகத்திலே முழிச்சேனோ..."

"சும்மா இருடா, நாயே..." என்று சீறினார் கலியமூர்த்தி.

"வீடெல்லாம் ஏன் இறைஞ்சு கிடக்குது? சாமானெல்லாம் பத்திரமா இருக்குதா?" என்று கேட்டாள் அபூர்வா.

"இனிமேதான் பாக்கணும். அவ தன் சாமான் ஒண்ணையும் எடுத்துகிட்டுப் போனதா தெரியலே..."

"சரி... இப்பொ தூங்குங்க... காலையிலே பாத்துக்கலாம்..."

"இந்தப் பயலை என்ன செய்யறது, மறுபடியும் படுத்துகிட்டானே, பாவி மவன்..."

"விடுங்க... காலையிலே பாத்துக்கலாம்..."

அவள் வெளியே சென்று, மாடிப்படிகளில் ஏறினாள்.

வீட்டைத் திறந்து உள்ளே சென்று விளக்கைப் போட்டாள்.

எங்கே போயிருப்பாள் அவள்? ஏன்? அவளை வீட்டை விட்டுப் போகச் சொன்னவள், இப்பொழுது தானே போய் விட்டாள்.

கலியமூர்த்தி பாவம், அவர் சொன்னது போல், அவருக்கு அன்று நாள், சரியில்லை. குளியல் தரிசனம் போய், நாலு லட்சம் நஷ்டம் வேறு கொடுத்து, உடரி மனைவியும் போய் விட்டாள்!

கலியமூர்த்தி என்ன செய்யப் போகிறார்? இந்த வீட்டைக் காலி செய்து விட்டு, பட்ட மகிஷியிடம் போய் வருவாரா, இல்லாவிட்டால், வேறு யாரையாவது இந்த வீட்டில்...?

ஒரே நாளில் அவளுக்கு எத்தனை அநுபவங்கள்! எழுதுவதற்கு விஷயமில்லை என்று குறைப்பட்டுக் கொள்ள வேண்டாம்.

அவள் 'நைட்டி' போட்டுக் கொண்டு, வெராந்தா கதவைத் திறந்தாள்.

விளக்கைப் போட்டாள்.

வெராந்தாவில் யாரோ படுத்துக் கொண்டிருப்பது போல் அவளுக்குத் தெரிந்தது.

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.


அருகில் சென்று பார்த்ததும், இன்னோர் அதிர்ச்சி!

அவர் 'மனைவி'... அவள் பெயர் என்ன? வனிதா!

அவள் நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்.

அவள் எப்படி இங்கு வந்தாள்?

அவள் வெராந்தா அருகே சென்று, கீழே எட்டிப் பார்த்தாள். வெராந்தா கைப்பிடிச் சுவர் வழியாக வந்திருக்க வேண்டும். கீழே



"நம்ம கட்சியை உடைக்க எதிர்க் கட்சிக்காரங்க சதி பண்றாங்க தலைவரே!"

"ஆச்சரியமா இருக்கே! சதி பண்ணி உடைக்கிற அளவுக்கா நம்ம கட்சி பலமா இருக்கு?"

- கீழை. அ. கதிர்வேல்



கொல்லைப்புறச் சுவர் வழியாக ஏறி... சர்க்கஸ் வித்தைதான். மைகாட்! இங்கு எதற்காக வந்து அவளிடம் சரண் புகுந்திருக்கிறாள்!

அபூர்வா அவளிடம் சென்று லேசாகத் தட்டி அவளை எழுப்பினாள்.

வனிதா கண்களைத் திறந்தாள்.

"என்னை அனுப்பிச்சுடாதீங்க..." என்றாள் மிகச் சன்னமான குரலில்.

"உள்ளே வாங்க."

இருவரும் உள்ளே சென்றனர்.

"உட்காருங்க" என்றாள் அபூர்வா.

வனிதா மிகவும் களைப்படைந்திருந்தது போல் அபூர்வாவுக்குப் பட்டது.

"நாளைக் காலையிலே போயிடறேன்" என்றாள் வனிதா.

"எங்கே...?"

வனிதா பதில் சொல்லவில்லை. அவள் இன்னும் தீர்மானிக்கவில்லையென்று தோன்றிற்று.

"எதுக்காக இப்படிப் பண்ணினீங்க?" என்றாள் அபூர்வா.

"எப்படி?"

"எல்லாம் எனக்குத் தெரியும். அவரு கீழே இருக்காரு..."

"நான்தான் தம்புசாமிக்குக் காலையிலே என்ன நடந்ததுன்னு ஃபோன் பண்ணிச் சொன்னேன். இவருக்குத் தெரிஞ்சுடுத்துன்னா என்னைக் கொலை செய்திடுவாரு..."

"எதுக்காகச் சொன்னீங்க?"

"இவன் என்னைப் படுத்தி வைக்கிற பாட்டைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்? சொன்னா நம்பக் கூட மாட்டீங்க..."

"நாளைக் காலையிலே எங்கே போகப் போறீங்க?"

"போயிடுவேன், அதான் என்னாலே சொல்ல முடியும், அட்ரெஸ்லாம் கேக்காதீங்க..."

"நீங்க விரும்பினா என்னோடயே தங்கலாம், எனக்கு ஆட்சேபணை இல்லே..."

வனிதா முகமே வியப்பாக மலர, அவளை நோக்கினாள்.

"என்ன சொல்றீங்க?"

"உங்க பாஷையிலேதானே சொன்னேன், புரியலியா?"

"இந்த ஆளைப் பத்தி உங்களுக்குத் தெரியாது... கொலைக்கு அஞ்ச மாட்டான்..."


"அதைப் பத்தி நீங்க கவலைப்பட வேணாம். நீங்க இருக்கீங்களா?"

"எனக்கு உங்களைப் பத்தித்தான் கவலையா இருக்கு... நான் போற இடத்துக்கு வந்து அவனாலே ஒண்ணும் செய்ய முடியாது. அந்த ஆளு இவனை விட 'பவர்ஃபுல்' ஆளு... வரேன்னு அவர்கிட்டே சொல்லிட்டேன். போகலேன்னா இப்போ அவராலே உங்களுக்குத் தொந்தரவு... எனக்கு இப்படி ஆள் ஆளா போய்க்கிட்டிருக்கிறது பிடிக்கலே... ஆனா என்ன செய்யறது? தப்பான ஆரம்பம், முடிவும் தப்பாத்தானே இருக்கும்?"

வனிதாவைப் பார்க்க அபூர்வாவுக்குப் பரிதாபமாக இருந்தது. அவள் பேசும்போதே குரல் உடைந்து கமறியது.

"என்னை என்னாலே பாத்துக்க முடியும்... அதைப் பத்தி நீங்க கவலைப்படவே வேணாம். நான் வெளிநாட்டுக்காரிங்கிறது, எனக்கு ஒரு அநுகூலமான விஷயம்... நீங்க என்னோட இருக்கீங்களா, சொல்லுங்க..."

வனிதா சில விநாடிகள் தீவிர யோசனையில் ஆழ்ந்தாள்.



''உங்க படத்துல எதுக்கு திமர்னு போலீஸ் ஸ்டேஷனைக் காட்டறீங்க?''

''வில்லன் கற்பழிக்கப் போறதை சிம்பாலிக்கா காட்டியிருக்கோம்...''

- ராதா வாசுதேவன்

வனிதா சிறு வயதில் மிக அழகாக இருந்திருக்க வேண்டும். இப்பொழுதும் அழகாகத் தான் இருக்கிறாள். முப்பத்தைந்து வயது என்று கலியமூர்த்தியே ஒரு சமயம் சொன்ன தகவல்தான். பார்த்தால் முப்பதுக்கு மேல் சொல்ல முடியாது.

"சரிங்க, உங்களுக்கு பயமில்லேன்னா இருக்கேன். என்னாலே உங்களுக்கு ஒண்ணும் ஏற்படாமெ இருந்தா சரி..."

"சரி... தூங்குங்க..."

அபூர்வா தன்னறைக்குள் சென்று, ஓர் இளமஞ்சள் 'நைட்டி'யைக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தாள்.

"இதெல்லாம் எதுக்குங்க?"

அபூர்வா துணியை அவள் மடியில் போட்டாள்.

"போட்டுக்கங்க..." என்றாள் ஒரு கண்டிப்பான குரலில்.

வனிதா எழுந்தாள்.

"இன்னொரு விஷயம்... நான் சொல்றபடி நீங்க கேக்கணும். அது எதுக்கு, இது எதுக்குன்னு கேட்டா எனக்குப் பிடிக்காது. மறுபடி மறுபடி உங்க மனசு சலனம் அடையாமெ நீங்க பாத்துக்கணும்... உங்களைப் பரிபூரணமா நம்பலாங்கிறது எனக்கு உத்தேசம். இந்த நம்பிக்கைக்கு நீங்க பாத்திரமா இருக்கணும்."

வனிதாவின் கண்கள் பனித்தன.

"சரிங்க..." என்றாள் அவள்.

அடுத்த நாள், அபூர்வா காலையில் கீழே இறங்கிச் சென்றாள்.

கலியமூர்த்தி வெளியே புறப்படுவதற்கு ஆயத்தமாக இருந்தார்.

"வாங்க..." என்றார் கலியமூர்த்தி.

"வெளியே போகப் போறீங்களா?"

"ஆமாம்... அந்தக் கழுதையைப் பத்தி ஒண்ணும் தெரியலே. போலீஸ்லயும் சொல்ல முடியாது. வீட்டிலே ஒண்ணும் காணாமெ போகலே. நானே தீர்மானம் செய்துட்டேன்."

"என்ன?"

"இந்த வீட்டை வாடகைக்கு விட்டுட்டு நான் போயிடலாம்னுருக்கேன். உங்க பகுதி யை இல்லே. நீங்க இப்பொ இருக்கிறபடி மாடியிலே இருக்கலாம்."

"நீங்க எங்கே போகப் போறீங்க?"

"நம்ம வீட்டோடத்தான். ஆடின ஆட்டம் போதும்னு படுறது. பொண்டாட்டி, குழந்தைகளும் சந்தோஷமாருக்கும், வீட்டுக்குப் போயிட்டா... என்ன சொல்றீங்க?"

"நல்லதுதான். அவங்க எங்கே போயிருப்பாங்கன்னு நினைக்கறீங்க?"

"கழுதை எங்கே போனா என்ன? இன்னொரு ஆளு ஒத்தரு இருக்காரு, கொஞ்சம் செல்வாக்கானவரு, அவருக்கு இந்தக் கழுதை மேலே ஒரு கண்ணு. போயிருக்கலாம் விடுங்க, அதெ பத்தி என்ன பேச்சு?"

"அப்படிப் போனா, உங்க நாட்டு தர்மப்படி இதெல்லாம் குத்தமாகாதா?"

"எப்படி என்கிட்டே வந்தா? இதெல்லாம் ரொம்ப சின்ன விசயங்க. சரி... அண்ணாமலையை எப்பொ நீங்க பாக்கப் போறீங்க? தம்புசாமி..."

"சொல்லுங்க..."

"எவ்வளவு கேட்டாரு...?"

"பதில் சொல்லித்தான் ஆகணுமா?"

"நான் வற்புறுத்தலே..."

"வற்புறுத்தாதீங்க... கண்ணப்பனை என்ன செய்தீங்க...?"

"அவன் வீட்டுக்கு வந்து வேலை செய்வான்..."

அவளுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

"வேலையை விட்டு அனுப்பலே?" என்று கேட்டாள்.

"முடியாதுங்க... அவன் பெரிய இடத்து சிபாரிசோட வந்திருக்கான். ஒரு வகையிலே பாக்கப் போனா, உளவுக்காரன்னும் சொல்லலாம். அவனை வேலையை விட்டு அனுப்பிச்சுட்டா, என் 'பிஸினஸ்', அவ்வளவுதான்; 'க்ளோஸ்'. எங்க நாட்டைப் புரிஞ்சுக்கிறது அவ்வளவு சுலபமில்லீங்க..."

"அப்படியா? இன்னொரு விஷயம்... உங்க மனைவி, அதான் வனிதா, என் கூட இருக்காங்க..."

அவர் திடுக்கிட்டார்.

"என்ன சொல்றீங்க?"

"என்னோடத்தான் இருக்கப் போறாங்க..."

"நிரந்தரமாவா?"

"எதுங்க நிரந்தரம்? நான் இங்கே இருக்கிற வரைக்கும் இருப்பாங்க... நான் எங்க நாட்டுக்கும் பின்னாலே கூட்டிக்கிட்டும் போகலாம்."

கலியமூர்த்தி உடம்பு கோபத்தில் லேசாக ஆடியது.

(தொடரும்)

வாடகைக்கு ஒரு சொந்தக் கார்!





• சிவப்பிரகாசம்

பல்லவன் முதலான பஸ் பயண நகக்கல்களில் சிக்கிச் சிதைந்து, நெஞ்சைப் பிழியும் சோககீதம் இசைக்க எப்போதும் தயாராகக் காத்திருக்கும் அன்பர்கள் கவனத்திற்கு :

சென்னையில், சிவப்பிரகாசம் என்பவர் ஒரு வினோதமான பிஸினஸ் ஆரம்பித்திருக்கிறார். உங்கள் பயணம் உல்லாசமாய் அமைய உதவும் வாடகைக் கார் பிஸினஸ்.

இது அட்டைக்கரி, கோவிந்தா மஞ்சளில் அலறி வரும் மீட்டர் போட்ட வாடகை டாக்ஸி சமாசாரமல்ல. மாருதி - 800, மாருதி ஆம்னி, பியட், அம்பாஸிடர், மாருதி ஜிப்ஸி இன்னும் சில இம்போர்ட்டட் வகையறாக்கள் வாடகைக்குக் கிடைக்கின்றன.

விஷயம் வெளிநாடுகளில் ஏற்கெனவே நடைமுறையில் இருப்பது. லெண்டிங் லைப்ரரி மாதிரி, இந் நிறுவனத்தில் (மெட்ரோ-நாக்ஸ்) முதலில் ஒரு சமார் தொகையை (Say 10,000) டெபாஸிட் செய்து விட்டால் உங்களுக்குப் பிடித்த காரை ஓட்டிப் போய் விடலாம். ஒரு நாளோ, ஒரு வாரமோ, ஒரு வருடமோ, உயிருள்ள வரைக்குமோ (காருக்குத்தான்!) உங்கள் உசிதப்படி ஓட்டி மகிழலாம். நாள் வாடகை ரூ. 300.

ரூ. 25,000, 50,000, 1,00,000, 2,00,000, 5,00,000 என்று நீங்கள் டெபாஸிட் செய்யும் தொகைக்கேற்ப 'ஒஸ்தி' கார் கிடைக்கும். டெபாஸிட்டை எப்போது வேண்டுமோ திரும்பப் பெறலாம்.

மெட்ரோ-நாக்ஸ் நிறுவனம் தொடங்கி ஒரு மாதம்தான் ஆகிறது. "அதற்குள் 120 உறுப்பினர்கள் சேர்ந்து விட்டார்கள்" என்கிறார் சி. பிரகாசம். காதைக் கொடுங்கள், உறுப்பினர் பட்டியலில் ஒரு அமைச்சரும் அடக்கம்!

உறுப்பினர்களுக்கு சில ஸ்பெஷல் சலுகைகள் உண்டாம். உதாரணமாக, எந்த பெட்ரோல் பங்கிலும் எப்போதும் செல்லுபடியாகக்கூடிய ஸ்பெஷல் கிரெடிட் கார்டு வசதி செய்து தரப் போகிறார்களாம். வாகன வரி செலுத்துதல், இன்சூரன்ஸ் புதுப்பித்தல் போன்ற சேவைகளை மெட்ரோநாக்ஸ் ஏற்கும்.

தென்னிந்தியா முழுக்க பிராஞ்சைஸ் முறையில் மெட்ரோ-நாக்ஸ் அலுவலகங்கள் திறக்கப் போகிறார்கள்.

அதாவது, கொருக்குப்பேட்டையில் கார் எடுத்துக் கொண்டு, கோயமுத்தூரில் விட்டு விடலாம். (நடுரோட்ல இல்லீங்க; அவங்க ஆபீஸ்லதான்!)

உங்களுக்கு ஓட்டத் தெரியாவிட்டால், டிரைவரும் அவர்களே ஏற்பாடு செய்து தருவார்கள்!

பல நிறுவனங்கள் கார்கள் வாங்குவதை விட்டு விட்டு இப்போது மெட்ரோ-நேக்ஸில் உறுப்பினராகியிருக்கின்றன.

"எல்லாம் சரி; இதெல்லாம் பசையுள்ளவர்களுக்குத்தானே சாத்தியம்? பின்னே பல்லவன் அன்பர்கள் கவனத்துக்குன்னு ஏன்யா ஆரம்பிச்சே?" என்று சீறிப் புறப்படுபவர்களுக்கு :

"ஸ்கூட்டர், மோட்டார் பைக் கூட இந்த மாதிரி வாடகைக்குக் கொடுக்கும் திட்டம் விரைவில் செயலாக்க வருமாம்! ஒருவேளை அது உங்களுக்குக் கட்டி வரலாம் இல்லியா?

ஹி... ஹி...

— சித்தார்த்

ஸ்ரீராமின் மதிப்பு மிக்க

7,50,000 பேரை ஒன்று சேர்க்கும் தனிச்சிறப்பு என்ன தெரியுமா? ஸ்ரீராம் சிட்ஸ்-உடன் அவர்களுக்குள்ள தொடர்புதான். ஸ்ரீராம் சிட்ஸ் — ஆண்டு வணிகம் ரூ.400 கோடி என்கிற சாதனை படைத்துள்ள நிறுவனம். ஒவ்வொரு நாளும் ஏலத்தொகையாக ரூ. 1 கோடி வரை வினியோகிக்கும் ஒரே நிறுவனம். ஸ்ரீராம் சிட்ஸ் ரூ.650 கோடி மதிப்புள்ள ஸ்ரீராம் நிறுவனங்களின் ஓர் அங்கம். இந்நிறுவனங்கள் 1995-ல் அடையத் திட்டமிட்டுள்ள மதிப்பு ரூ.1000 கோடி.

இப்போது ஸ்ரீராம் சிட்ஸ் ஒவ்வொரு சந்தாதாரரையும் கௌரவிக்கப் போகிறது. அதன் மூலம் அவர்கள் அடையவிருப்பது — சிறப்புரிமை, அந்தஸ்து, பெருமிதம். அதன் பலனாக அவர்களுடைய தொடர்பு புதிய வலுப்பெற்றுத் தொடர்ந்து நீடிக்கப் போகிறது.

தனிச் சிறப்பு வாய்ந்த இக்கௌரவம் ஸ்ரீராம் சிட்ஸ் சந்தாதாரர்களுக்கு மட்டும்தான்.

உங்கள் வாயிற்கதவின் மறுபுறம் ஒரு வாய்ப்பு உங்களுக்காகக் காத்திருக்கப்போகிறது. அது என்னவென்று உங்களால் ஊகிக்க முடிகிறதா? உங்களைக் கௌரவிக்கும் வகையில் ஒரு சிறப்புச் சலுகை... அதன் பலனாக நீங்கள் பெறப்போகும் பல்வேறு மகிழ்ச்சி தரும் பயன்கள் — தெரிந்து கொள்ள வேண்டுமா?

முதல் தட்டுக்கே வாயிற்கதவைத் திறந்து விடுங்கள்.

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ் பி. லிமிடெட்

நிர்வாக அலுவலகம்: "சுப்பிரமணியம் பில்டிங்",
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002.
போன்: 8520700/8523932/8522651/
8525536/8520797

ஸ்ரீராம் சிட்ஸ் — உங்கள் வளமைக்குப் பாதை

சந்தாதாரர்களே!



விரைவிலேயே ஒரு

மகிழ்ச்சியான செய்தி

உங்களைத்

தேடி வரப்போகிறது.

ஆனால்,

அதைக் கொண்டு

வருகிறவர் தபால்காரர் அல்ல.

ADWWE/SCI/4744 TAM A

கதாநாயகி இல்லாமல் காசெட் ரிலீஸ்!



• ஆப்ஸெண்ட் கதாநாயகி

கமல் - பாலுமகேந்திரா காம்பினேஷனில் உருவாகி வரும் ஒரு படத்தில், இரு தார மணம் கதைக் கருவாகவுள்ளதாம். 'சின்னவீடு', 'இரட்டைவால் குருவி', 'மறுபடியும்', 'பாமா ருக்மணி' போன்ற பல படங்களில் ஏற்கனவே பார்த்து விட்ட சங்கதிதான் மீண்டும் உருவாகிறது.

மணமான பிறகு சிக்கென்ற இளம் பெண் ஒருத்தியையும் காதலிப்பதால் ரமேஷ் அரவிந்துக்கு நேரும் குளறுபடிதான் கதை. 'வீரா' போல் இரு தார மணத்தை ஆதரிக்காமல் இருந்தால் சரி!

“**த**ப்புதான்...தப்புதான்...நான் செய்திருக்கக் கூடாது...மீண்டும் அந்தத் தப்பை செய்ய மாட்டேன். நூறு சதவிகிதம் காரண்டி தருகிறேன். என்னை நம்புங்கள்...” என்று பலமுறை கேட்டுக் கொண்டார் இயக்குநர் பவித்ரன்.

'ஐ லவ் இந்தியா'வின் வீழ்ச்சிக்குப் பின் இளமை துள்ளும் படமாக எடுக்க நினைத்தேன். ஆனால் இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம் என்று கவர்ச்சி கூடிக் கொண்டே போய் எல்லை மீறி விட்டது. சென்சார் அதிகாரிகளிடமும், என் வீட்டுப் பெண்களிடமும் கூட நான் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்.



• பழைய சங்கதியே மீண்டும்.

அதனால் 'மூக்குத்தி காசி'யில் ஒரு சின்ன வெட்டு கூட விழாத வகையில் படமாக்க வேண்டும் என்று நான், சரத், கவிஞர் வாலி மூவருமாகப் பேசி வைத்திருக்கிறோம்"- என்றார் பவித்ரன்.

'மூக்குத்தி காசியில் சென்டிமென்ட்டும், ஆக்ஷனும் மட்டுமே இருக்குமாம். பவித்ரன் சீரியஸாகத்தான் பேசுகிறாரா...?

'ஹீரோ' படத்தின் காசட் வெளியீட்டு விழா மாலை ஏழு மணிக்கு என்று அழைப்பிதழில் கண்டிருந்தது...ஆனால் இரண்டு வி.ஐ.பி.அமைச்சர் பெருமக்களும் வந்து சேர ஒரு மணி நேரம் தாமதமாகவே, சிறப்பு விருந்தாளியாக வந்த கௌதமிக்கு இடைப்பட்ட நேரத்தில் கேக் வெட்டி ஹாப்பி பர்த்டே பாடி கொஞ்சம் நேரத்தைப்



போக்கினார்கள். காசட் வெளியிட்ட மாண்புமிகுக்கள்- இருவரும் திரையிடப்பட்ட 'ஹீரோ'- படத்தின் பாடல் காட்சிகளைக் கண்டுகளித்து விட்டே சென்றனர். படத்தில் நடிக்காத கஸ்தூரி, கௌதமி போன்றவர்கள் எல்லாம் வந்திருந்த போது, கதாநாயகி சுகன்யா மட்டும் வரவே இல்லை!

-ஹர்ஷராஜ்

கல்யாணப் பத்திரிகை பிரிண்ட் ஆகி விட்டது. பத்திரிகை பண்டிலைப் பார்த்தவுடன் சொல்ல முடியாத சந்தோஷம் ஏற்பட்டது. பாதிக் கல்யாணம் முடிந்து விட்ட மாதிரி ஒரு நிறைவு. எவ்வளவு நாள்! புடைவை கடை நோட்டீஸ் மாதிரி "ஏதாவது வரன் இருந்தா சொல்லுங்கோ" என்று உஷா ஜாதகத்தைக் கண்ணில் தென்படுகிறவர் எல்லாரிடமும் கொடுத்துக் கொடுத்து விரல்கள் மஞ்சள் காய்த்து விட்டன. கடைசியாக நல்ல வரன் அமைந்தது வழக்கமான பகவத் கிருபையால்தான். இதே பகவான் மேல் பாரத்தைப் போட்டுப் போட்டு, பொதி சுமக்கும் கழுதையாக்கி, பாதி காரியத்தை சாதித்தாயிற்று. 'அவன் பார்த்துப்பான்' என்று சொல்லி, கண்ணை மூடிக் கொண்டு களத்தில் குதிக்க வரும் குண்டு தைரியம் அளவிட முடியாது. இதில் ஒரு வசதி இருக்கிறது.

பண்டிலைச் சுமந்து கொண்டு வீட்டை நோக்கி நடந்தேன்.

வீட்டில் நுழைந்ததும் ஆர்வம் தாங்காமல் கல்யாணப் பொண்ணு உஷா பத்திரிகை பண்டிலை வாங்கிக் கொண்டாள். ஒரு வித நாணம் கலந்த பூரிப்பு கண்களில் பனிச்சிட ஒரு பத்திரிகையை எடுத்தாள். கண்களில் ஒற்றிக் கொண்டாள். "என்னடி இது பிரசாதமா? கண்ல ஒத்திண்டிருக்க?" இரண்டாவது பெண் கீதா.

"இதுல அவ ஆத்துக்காரர் இருக்கார். எல்லாம் ஒரு மரியாதைதான். அப்புறம் கொஞ்சுண்டு ஜொள்ளு!" மூன்றாவது பெண் ரம்யா.

"அதில்ல, புல்லானாலும் புருஷன். 'பிரிண்டேட்' ஆனாலும் பெட்டர் ஹாஃப்!" நாலாவது பெண் மாலதி.

"சீ.. போங்கடி கலாட்டா பண்ணாதீங்க" உஷா செல்லமாகச் சிணுங்கி கல்யாணப் பெண் சிரிப்பு சிரித்தாள். மற்றதெல்லாம் வெறும் சாதாரண சிரிப்புதான்.

குழந்தைகள் சாப்பிட்டு,

நியூஜெர்ஸி மாமியும் அத்வைதமும்

"என்னடா நீ பாட்டுக்கு பாரத்தைப் போட்டுண்டே இருக்க, தர்ம நியாயமே கிடையாதா?" என்று கேட்காது. வாயில்லா ஜீவன். நம்மளை மாதிரி திரிசமன் கிடையாது. அது பாட்டுக்குத் தன் கடமையைச் செய்யும்; பலனை எதிர்பார்க்காது. பயனை வேறு கொடுக்கும். பிரதி உபகாரமாக 'ஸ்ரீமத் பகவான் கிருபையால்' என்று பத்திரிகையில் போட்டு குஷிபடுத்துவது நம் கடமை. மீதி காரியத்திற்கு பரமாச்சாரியாள் அனுக்கிரகம் இருக்கிறது.

பரமாச்சாரியாளை நினைத்தவுடன் மனத்தில் பக்தி கரந்தது. வீட்டில் நடக்கும் முதல் கல்யாணம். முதல் பத்திரிகையைக் கொடுத்து ஆசிர்வாதம் வாங்க வேண்டும். அப்புறம்தான் மற்ற காரியங்கள். பத்திரிகை

படுக்கப் போகும் வரை லூட்டி ஓயவில்லை. உஷா தெரியாத்தனமாக ரெண்டு தலைகாணி வைத்துக் கொண்டு படுக்கையைப் போட்டு விட்டாள். அவ்வளவுதான்! காத்துக் கொண்டிருந்து பிலுபிலுவென்று உலுக்கி எடுத்து விட்டார்கள் உடன் பிறப்புக்கள். கல்யாணப் பொண்ணாக இருப்பது ஒரு அவஸ்தைதான். உள்ளுக்குள் ஒரு சுகமான அவஸ்தை. வெளியில் இந்த மாதிரி உட்கார்ந்தால் கேலி. நின்றால் கலாட்டா. ரெண்டு தலைகாணிகள் வைத்துக் கொண்டால் கேட்கவே வேண்டாம்! நானும் ரசித்துக் கொண்டுதான் இருந்

கே. ரவிசங்கர்

தேன்.

“கமலா, மொதல் பத்திரிகையை மஞ்சள் தடவி பரமாச்சாரியார் படத்துக்கு முன்னாடி வை. முதல் காரியம் காஞ்சிபுரம் போய் அவர தரிசனம் பண்ணனும். இந்த வாரத்துக்குள்ள போகணும். அப்புறம் நாளே கெடைக்காது.”

“கரெக்ட்டுன்னா. அடுத்த மாசம் அவருக்கு நூறு வயசாகப் போறது. பெரிசா கொண்டாடப் போறாளாம். பிரைம் மினிஸ்டரெல்லாம் வரப் போறாராம். இப்பவே போயிட்டு வந்துடுவோம். புடைவையும் எடுத்துண்டு அப்படியே பரமாச்சாரியாளையும் தரிசனம் பண்ணிடலாம்.”

“அட ராமா! தப்பு. பரமாச்சாரியாள பாத்துண்டு அப்படியே பொடவை எடுக்கணும்னு சொல்லு. சுருக்னு படறது.





அலட்சியமா பேசக் கூடாது.”

வியாழக்கிழமை காஞ்சிபுரம் கிளம்பினோம். நான், கமலா, உஷா, சுந்தர். வெயில் கொளுத்தியது. முதலில் எல்லா கோவில்களையும் திவ்யமாக தரிசனம் செய்தோம். “அம்மா பசிக்கறது” என்று சுந்தர் தொணதொணக்க ஆரம்பித்தான். ஸ்ரீதர் கபேயில் டிபன் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தோம். பலமாகச் சாப்பிட்டு விட்டு சினிமாவுக்குப் போகிற மாதிரி பரமாச்சாரியாளைப் பார்க்கப் போவது என்னவோ போல் இருந்தது. குழந்தைகள் பசி தாங்காது. பரமாச்சாரியாள் மன்னிப்பார் என்று நானே என்னை மன்னித்துக் கொண்டேன். குற்ற உணர்ச்சி சின்னச் சின்னதாகக் குத்த ஆரம்பித்தது.

“ஏன்னா! வெயில் கொளுத்தறது. பொடவ கடை இங்கேயே இருக்கு. திருப்பி மடத்திலேர்ந்து இன்னொரு வாட்டி நடக்க வேண்டாம். முதல்ல பொடவைய எடுத்துண்டு அப்புறம் மடத்துக்குப் போகலாம்.”

சட்டென்று கோபம் வந்ததாலும் யோசித்துப் பார்த்ததில் கமலா சொல்வது நியாயமாகப்பட்டது. கமலாவுக்கு வாய்ஸ் ஜாஸ்தி என்றும் சொல்ல முடியாது. நல்ல வேளை இப்போது என் தாயார் இல்லை! மேலும் புடைவைக்குப் பிறகுதான் பரமாச்சாரியாள் என்று விதி இருந்தால் நான் என்ன செய்ய முடியும். மறுபடியும் ஏதோ உறுத்த ஆரம்பித்தது. “சரி” என்றேன்.

எல்லாம் முடிந்து மடத்திற்குப் போனோம். கூட்டம் ரொம்ப ஜாஸ்தியாக இருந்தது. ஒரு மணி நேரத்தில் பார்க்க முடியுமா? மனம் அடித்துக் கொண்டது. கியூ நகருவதாகத் தெரியவில்லை. வெயில் வேறு சுட்டுப் பொசுக்கியது.

“நன்னா மூக்க பிடிக்க சாப்பிட்டுட்டு பஞ்சகச்சம், மடிசார் கட்டிக்காம பார்க்க வந்துட்டோம். கொஞ்சம் கூட சிரத்தையே இல்ல.” மறுபடியும் குற்ற உணர்ச்சி தலை தூக்கியது. சே! துளசி மாலை, உலர்ந்த திராட்சை கூட வாங்க மறந்து போய் விட்டேனே! என்ன ஜன்மம் நான். என்னாயிற்று எனக்கு? நிலை கொள்ளாமல் தவித்தேன். கமலாவைப் பார்த்தேன். கண்ணை மூடிக்

கொண்டு சௌந்தர்ய லஹரி சொல்லிக் கொண்டிருந்தாள். உடனே நானும் பஜ கோவிந்தம் ஸ்லோகத்தை முணு முணுக்க ஆரம்பித்தேன்.

மனசு கொஞ்சம் லேசாயிற்று. முக்கால் மணி நேரம் ஓடியது. மூன்றாவது ஆளாக நின்று கொண்டிருந்தேன். அந்தப் பக்கமாக இரண்டு அயல் நாட்டுக்காரர்கள் உள்ளே நுழைந்து நமஸ்காரம் செய்தார்கள். அவர்கள் பத்து நிமிடம் இருந்து விட்டுப் போனார்கள். இன்னும் ஐந்து நிமிடத்தில் அவருடைய அனுக்கிரகம். மனம் பரவசமாகியது. பக்தி சுரக்க ஆரம்பித்தது. மகான் தெரிகிறாரா என்று எட்டிப் பார்த்தேன். நிறையபேர் மறைத்துக் கொண்டிருந்ததால் ஒன்றும் தெரியவில்லை. தரிசனம் கிடைக்குமா?

என் முறை வந்தது. அப்போது அந்த வழியாக, பணக்காரச் செழிப்புடன் ஒரு மாமாவும் மாமியும் உள்ளே போனார்கள். மாமியின் முகத்தில் சொல்ல முடியாத சோகம் குடி கொண்டிருந்தது. கண்களில் நீர் முட்டிக் கொண்டு ஒருவித கலக்கத்துடன் உள்ளே போனார்கள். ரொம்பப் பாவமாக இருந்தது. மடத்தைச் சேர்ந்த ஒருவரிடம் 'யார் இவர்கள்?' என்று கேட்டேன்.

"அமெரிக்கால இருக்கிற நியூஜெர்சி லேர்ந்து வந்துருக்கா. கடைசி பொண்ணுக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்கா. நாலு வருஷமா தட்டிப் போய் இப்போதான் செட்டில் ஆயிருக்கு. முதல் ரெண்டு பொண்ணோட ஹஸ்பெண்ட்கள் கல்யாணமான ஆறாவது மாசத்துல பிளேன் ஆக்ஸிடெண்ட்ல தவறிப் போயிட்டா. அதிலேர்ந்து மனசு உடைஞ்சுபோய் ஒரு மாறி ஆயிட்டா. எல்லாரும் இப்போ நியூஜெர்சிலதான் இருக்கா. அதான் ரொம்ப விசனப்பட்டுப் போய் பரமாச்சாரியாளப் பார்த்து ஆசீர்வாதம் வாங்க வந்துருக்கா."

அவர்கள் தரிசனம் முடிந்ததும் பெரியவாளை உள்ளே அழைத்துப் போய் விட்டார்கள். எல்லோர் முகத்திலும் ஏமாற்றம் சட்டென்று அப்பியது. நான் நொந்து போனேன். இனிமேல் அடுத்தநாள்தான் தரிசனம். உடம்பு வேறு அவருக்கு சுகவீனம். கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று அவர் உட்கார்ந்திருந்த திசையைப் பார்த்து பாதிப்பேர் நமஸ்காரம் செய்துவிட்டுப் போனார்கள். நானும் அதையேதான் செய்தேன். எங்கேயாவது இண்டு இடுக்கில் அவர் துளியாவது தெரிகிறாரா என்று எட்டி எட்டிப் பார்த்தேன். ஒன்றும் தெரியவில்லை. மனசு ஒடிந்து போனேன். வீட்டில் முதல் கல்யாணம். தரிசிக்க முடியவில்லையே என்று அடிமனது சங்கடப்பட்டுக் கொண்டே இருந்தது. அதுவும் என் முறை வந்து, தரிசிக்க முடியாமல் போனது ரொம்ப கலக்கமாக இருந்தது. மனசு கிடந்து தவித்தது. எல்லாம் நியூஜெர்ஸி மாமியின் சதி. பத்து நிமிஷம் முழுதாகச் சாப்பிட்டு விட்டாள்.

"ரொம்ப சாரின்னா. முதல்ல பரமாச்சாரியாளைப் பாத்துட்டுப் பொடவை எடுத்துருக்கலாம். என்னால எல்லாம் கெட்டுப் போச்சு" கமலா வருத்தத்தோடு சொன்னாள்.

"பரவால்ல விடு. அவரோட சன்னதில நின்னாலே போதும். ஒரு கோடி அனுக்கிரகம்."

பேசிக் கொண்டே வெளியே வந்தோம். என் பையன் சுந்தரைக் காணவில்லை. தேடினோம். திடீரென்று எங்கிருந்தோ ஓடி வந்து சேர்ந்து கொண்டான். வாயெல்லாம் பல்லாக முகம் பிரகாசமாக இருந்தது.


"எங்கடா போயிட்ட? பசிறு ஆயிடுத்து. ஏற்கெனவே மனசு சங்கடமா இருந்துண்டிருக்கு." கமலா கோபமாகக் கேட்டாள்.

"அம்மா! பரமாச்சாரியாளை தரிசனம் பண்ணிட்டேன்" என்றான் பிரகாசமான கண்களுடன்.

"எப்படிடா?"

"அந்த நியூஜெர்சி மாமாவும், மாமியும் உள்ளே போனப்ப அவா பின்னாடியே நானும் போயிட்டேன். அவா பெரியவா முன்னாடி சம்மணம் போட்டுண்டு உட்கார்ந்துண்டா. நானும் உடனே சட்டையக் கழட்டிட்டு அவா பின்னாடி உட்கார்ந்துண்டேன்.

"ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்க



"பீச்"லே காதலிச்சு கல்யாணம் பண்ணிக் கிட்டதுக்கு நினைவா உங்களுக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு "கண்டல் நாயகி"ன்னு பேர் வச்சது நல்லாவா இருக்கு...!?"

- சுவிட் ரவி

ரா"ன்னு சொல்லிண்டே பெரியவாளைப் பாத்தேன். செக்க செவேல்னு பழம் மாதிரி இருந்தார் அவர். நெத்தில கை வைச்சுண்டு என்னையே பாக்கற மாதிரி இருந்தது! நியூ ஜெர்சி மாமி அழுதுண்டே இருந்தா. தரிசனம் முடிஞ்சப்புறம் கல்கண்டும் துளசியும் கொடுத்தா" - சொல்லிவிட்டு, பாக்கெட்டிலிருந்து இரண்டையும் கொடுத்தான்.

கமலாவும் உஷாவும் ரொம்ப நெகிழ்ந்து போய் அவனைக் கட்டிக் கொண்டார்கள். எனக்குச் சொல்ல முடியாத பூரிப்பு ஏற்பட்டது. அவன் முகத்தில் தேஜஸ் வழிகிற மாதிரி இருந்தது. பரமாச்சாரியாள் அனுக்கிரகம் அவன் முகத்தில் பட்டு பிரகாசித்து எங்கள் முகத்தில் தெறிக்கிற மாதிரி பரவசம் ஏற்பட்டது. என் மனம் சாந்தமானது. "நன்னா நடக்கும். விசனப்படாம போயிட்டு வான்னு" சொல்கிற மாதிரி கூட இருந்தது. நானே அவரை நேரில் தரிசித்தது போல மகிழ்ந்தேன். அப்போது என் பின்னால் வரிசையில் நின்று தரிசனம் கிடைக்காமல் ஏமாந்த இரண்டு பேர் நியூஜெர்சி மாமியைத் திட்டிக் கொண்டே வந்தார்கள். நான் மட்டும் என்ன?

நானும் என் மகனைப் பார்க்காத வரையில் தரிசனம் கிடைக்கவில்லையே என்று இவர்களைப் போல்தான் விசனப்பட்டுக் கொண்டிருந்தேன். மகன் முகத்தைப் பார்த்ததும் தரிசனம் கிடைத்த மாதிரி பரவசம் அடைந்தேன். நான் வேறு, என் பையன் வேறுதான். ஆனாலும் மகிழ்ச்சி.. எப்படி சாத்தியம்? ஏன் அந்த நியூஜெர்சி மாமியின் மலர்ந்த முகத்தைப் பார்த்த போது இந்த தரிசனம் கிடைத்த திருப்தி ஏற்படவில்லை? எனக்கு அன்னியமாக உள்ளவர்கள் ஆயிற்றே!

எந்தப் பொருளும் நமக்கு அன்னியமாக உள்ளவர்களுக்குக் கிடைத்து நமக்குக் கிடைக்காது போனால் இந்த பொறாமை, துவேஷம், கோபம் வருகிறது. கிடைத்தவரை போதும் என்ற பரந்த மனப்பான்மை வந்து விட்டால் இந்த உலகில் சண்டை, சச்சரவு, அழிவு துன்பம் ஏது? பொறிதட்டியது போல் ஆதி சங்கரரின் அத்வைத சித்தாந்தம் நினைவில் வந்தது. "இரண்டு இல்லை எல்லாம் ஒன்றுதான்" என்பது அத்வைதம். நமக்கு அன்னியமாக இன்னொரு வஸ்து உள்ள போதுதான் அதன் மீது ஆசை, கோபம் துவேஷம் உண்டாகிறது. காண்பெதல்லாமே நாம் என்ற உணர்வு பெற்று விட்டால் போதும், அப்புறம் ஒரு அவஸ்தை கிடையாது. மோக்ஷம்தான். எவ்வளவு பெரிய தத்துவம்! நினைத்தவுடன் மனத்தில் ஒரு பக்குவம் வந்த மாதிரி இருந்தது.

ஆனால் சொந்த சுகம் அத்வைதம் ஆகிவிடுமா? கொச்சைப்படுத்துகிறேனா? பக்குவம் வருவது என்பது எவ்வளவு பெரிய தவம்! இதைத்தானே கொஞ்ச கொஞ்சமாக பிராக்டீஸ் செய்யச் சொல்லுகிறார் இந்த மகான்!


இங்கே வந்து தரிசனம் கிடைக்காது போனதில் ஏதோ செய்தி இருக்கிறார் போல் பட்டது. இதை ஏனோ தானோவாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. ஏதோ கற்றுக் கொள்ள ஆரம்பிக்கிறேன் என்று மனசாட்சி சொல்லிற்று! நினைக்க நினைக்க மனசுக்குள் புரண்டு புரண்டு பிரளயம் மாதிரி ஏதோ ஓடிக் கொண்டிருந்தது.

"என்ன ரொம்ப சீரியஸ்ஸா யோசனை பண்ணிண்டு வரேள். கல்யாண காரியங்கள் பத்திக் கேட்டுண்டே வரேன். ஒண்ணுமே பேசாம அப்படி என்ன யோசனை?" கமலா கேட்டாள்.

"முதல்ல பொடவ எடுத்துண்டு மொன்ன என்ன பாக்க வந்தா போறும். அப்பதான் அத்வைதம் பத்தித் தெரிஞ்சுக்க முடியும்னு பெரியவா சொல்ற மாதிரி தோணித்து."

மனைவி கமலா ஒன்றும் புரியாமல் விழித்தாள். நான் சிரித்துக் கொண்டேன்.

பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தேன். என் மடியில் இருந்த பட்டுப் புடவை பார்சலைப் பார்த்தேன். உள்ளே கூரைப் புடவை. அது பட்டுப் பூச்சிகளைச் சாகடித்து நெய்த கூரைப் புடவை. இதைக் கட்டிக் கொண்டு தான் தாலி கட்டிக் கொள்ளப் போகிறாள் உஷா. இதற்கு ஸ்ரீமத் பகவான் கிருபையும், ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரியார் அனுக்கிரகமும் உண்டு. இந்த இரண்டு பேரையும் கேட்காமல் கொள்ளாமல் பத்திரிகையில் இப்படித் தான் போடும் வழக்கம்.



"ஒரு சின்ன ஆபரேஷனுக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்தியா...? பகல் கொள்ளையா இருக்கே. ஆமா, யார் அந்த டாக்டர்?"

"தெரியலை! முகமூடி போட்டுட்டு இருந்தார்!"

- சோம. முத்துக்குமார்

கதை : ஏனைய விஜயகாந்த் படங்களைப் பாருங்கள்.

இசை : ஏனைய தேவா பாடல்களைக் கேளுங்கள்.

சண்டை : எத்தனையோ ஆங்கிலப் படங்களில் பார்த்திருப்பீர்கள்.

வசனம் : டீ.வி. நாடகங்களில் கேட்டிருப்பீர்கள்.

பாடல்கள் : மாமண்டூர் பஸ் ஸ்டாண்டில் நடுராத்திரி ஒலிக்கும் ரகம்.

நடனம் : மேற்படி பாடல்களோடு போட்டி போடும் ரகம்.

ஹீரோ : செலுலாய்ட் பொம்மை.



ஹீரோயின் : பெயின்ட் அடித்த செலுலாய்ட் பொம்மை

கிளைமாக்ஸ் : நல்ல நகைச்சுவை

வில்லன் (மோகன் நடராஜன்) : தான். ரசிக்கும்படியான ஒரே கேரக்டர் - படத்தில்.

இயக்குநர் : உதயசங்கர் - புதுசு. D.F.T. ஆகவே அனுதாபத்தோடு திருத்திக் கொள்வோம்!

- ஆர்.பி.ஆர்.

ஈ-மெயில்- மோசடிக்கும் உதவும் நவீன வசதி!



அமெரிக்காவில் இருக்கும் உறவினருக்கு முக்கியமான, அவசரத் தகவல் அனுப்ப வேண்டும். முக்கிய விவரங்கள் எல்லாம் சீக்கிரமாய், குறைந்த செலவில் போய்ச் சேர இப்போது வழி இருக்கிறது: ஈ-மெயில். அதாவது எலக்ட்ரானிக் மெயில். ('மின் அனுவியல் தபால்' என்று தமிழ்ப்படுத்திக் கொண்டு சிரமப்படலாம்.)

விவரங்களைக் கடிதமாக எழுதி எடுத்துக் கொண்டு ஈ-மெயில் அனுப்பும் அலுவலகத்துக்குப் போக வேண்டும். (சென்னை ஜெமினி பார்சன் காம்ப்ளெக்ஸில் அத்தகைய அலுவலகம் ஒன்று இயங்குகிறது. பெயர் : ஈ-மெயில் எக்ஸ்பிரஸ் அன்ட் குனோப் கிராஃபிக்ஸ்.) அங்கு இருக்கும் சிப்பந்தியிடம் கடிதத்தைக் கொடுத்தால், அவரே அழகாக 'எடிட்' செய்து அனாவசிய வார்த்தைகளை நீக்கி, தமது அலுவலக கம்ப்யூட்டரில் உங்கள் கடிதத்தைப் பதிவு செய்வார்.

அமெரிக்காவில் எந்த இடத்தில் யாருடைய கம்ப்யூட்டருக்குச் செய்தி போக வேண்டும் என்பதையும் உத்தரவாகக் கொடுத்துவிட, சென்னையில் பதிவான கடிதம் சாடிலைட் தொடர்பு மூலம் டெலிபோன் இணைப்புகள் வழியாக சில நிமிடங்களுக்குள் உங்கள் உறவினரின் கம்ப்யூட்டரை அடைந்துவிடும். அன்னார் அவ்விடம் இல்லாவிட்டாலும் அவரது கம்ப்யூட்டரில் விவரம் பதிவாகி விடும். வீட்டுக்குத் திரும்பி வந்ததும் அவர் தம் கம்ப்யூட்டரில் ஈ-மெயில் ஏதும் பதிவாகியுள்ளதா என்று பட்டன் தட்டிப் பார்ப்பார். உங்கள் கடிதத்தைத் திரையில் கண்டு முகம் மலர்வார். அதன் பிரதி தரச் சொல்லி கம்ப்யூட்டருடன் இணைந்துள்ள பிரின்டரிலிருந்து பெற்றுக் கொள்வார்.

உங்கள் கடிதம் ஒரு ஃபுல்ஸ்கேப் தாள் நீளத்துக்கு இருந்தால் சுமார் என்பது முதல் நூறு ரூபாய் செலவில் அனுப்பி விடலாம். இதையே எஸ்டிடியில் இரண்டரை - மூன்று நிமிடங்கள் பேசினால் முந்நூறு ரூபாய் வரை செலவாகிவிடும்!

அப்படியென்றால் டெலிபோன் கருவிக்கும் தபால் துறைக்கும் வேலை குறைந்து விடுமா என்றால், விடை : ஆமாம், ஆமாம்! மேலை நாடுகளில் ஏற்கெனவே குறைந்து விட்டது! டெலிபோன் நம்பர் மாதிரி

தலைக் ... பல ஈ-மெயில் நம்பர் வைத்துக் கொண்டு ...கிறார்கள். உள்நாட்டுத் தொடர்புகளுக்கும் வெளிநாட்டுத் தொடர்புகளுக்கும் பயன்படுத்துகிறார்கள்.

இங்கேயும் உள்நாட்டு ஈ-மெயில் தொடர்புகள் வழங்கும் வர்த்தகத்தில் பல நிறுவனங்கள் லைசென்ஸ் பெற்று நுழைந்துள்ளன. ஆனால் செலவு கூட என்பதால் தனியார் அதிகமாக இந்த வசதியை நாடுவதில்லை.

இப்போதைக்கு இந்தியாவிலிருந்து வெளிநாட்டுக்கு ஈ-மெயில் அனுப்பும் உரிமை விதேஷ் சஞ்சார் நிகம் லிமிடெட் என்ற அரசாங்க அமைப்பிடம் மட்டுமே உள்ளது. இவர்களுக்குக் கப்பம் கட்டித் தான் தனியார் இணைப்பு பெறலாம்.


எல்லா விஞ்ஞான அற்புதங்களையும் போலவே ஈ-மெயில் வசதிக்கு ஒரு 'மறுபக்கம்' இருக்கிறது. அதாவது, நேர்மையற்ற காரியங்களுக்கும் அதைப் பயன்படுத்த முடியும். சமீபத்திய சம்பவம் ஒன்று உதாரணம்.

சென்னையைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் தமது க்ரியா பதிப்பகத்தின் மூலம் ஓர் அருமையான அகராதி வெளியிட்டார். இந்தத் தமிழ் - தமிழ் - ஆங்கில அகராதியை ஒரு ஜெர்மானியப் பல்கலைக் கழகம் அப்பட்டமாகக் காப்பி அடித்து தமிழ்-ஜெர்மன் அகராதி வெளியிட்டிருக்கிறதாம். இந்த அகராதியைத் தனது ஈ-மெயில் நெட்வொர்க் மூலம் உலகெங்கும் கிடைக்கச் செய்து வருகிறது. இப் ப.க. கழகம். இந்த பல்கலைக் கழகத்துடன் சென்னை ஐ.ஐ.டி. மற்றும் ஸ்பிக் ஸயன்ஸ் ஃபவுண்டேஷன் நிறுவனங்களில் இந்த அகராதி உபயோகத்துக்கு வர, விஷயம் தெரிய வந்து, காப்பிரைட் உரிமை மீறலுக்காக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார் ராமகிருஷ்ணன்.

இன்னும் கமலாம்பாள் சரித்திரம் தொடங்கி கல்கி, அகிலன், ஜெயகாந்தன் நாவல்கள் வரை ஈ-மெயில் நெட்வொர்க் மூலம் கிடைக்கச் செய்யப் போவதாகச் சவால் விடுகிறதாம் அந்த ஜெர்மன் பல்கலைக் கழகத்தின் இன்ஸ்டிடியூட். ஆஃப் இண்டாலஜி அண்ட் டமில் ஸ்டடீஸ்!

இப்படி உபயோகித்தால் ஈ-மெயில் என்ற பெயரை 'மோசடி' மெயில் என்று மாற்ற வேண்டியதுதான்!

- எஸ்.வி.என்.



We accept Fixed Deposits at the rate of 24% with incentives.

வாடகை தொல்லை இனி இல்லை!

நீங்களும் சொந்த வீடு வாங்கலாம்
காசி பில்டர்ஸ் நிறுவனம் வழங்கும்
பரிசு மழை!

காசி குரூப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீமின் வெற்றிகரமான 14-வது குலுக்கல் 30.10.94 அன்று காசி திரையரங்கு வளாகத்தில் பிரபல திரைப்பட நட்சத்திரங்களின் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இத் திட்டத்தில் புதிதாக வழங்கப்பட்ட GIFT CARD குலுக்கல் மூலம் உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து கவர்ச்சிகரமான சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இத் திட்டத்தில் ரூ. 1,250/- முதல் ரூ. 5,000/- வரை மாதத் தவணைகளாகச் செலுத்தி குலுக்கல் மூலம் 277 முதல் 1111 சதுர அடிகள் வரை உள்ள வீடுகளைத் தேர்ந்தெடுத்து சொந்த வீடாக்கிக் கொள்ளலாம். மீதித் தொகையை சொந்த வீட்டிலிருந்து கொண்டே வாடகை போல செலுத்தலாம். இத் திட்டத்தில் சேருபவர்கள் அனைவருக்கும் ரூ. 300/- முதல் ரூ. 1,000/- வரை ஒவ்வொரு கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படும்.

சுபமங்களா திட்டம் :

இத் திட்டத்தில் உடன் குடிபுகத் தயாரான நிலையில் உள்ள வீடுகளின் மொத்த விலையில் ரூ. 10,000/- மட்டுமே செலுத்தி உடனே சொந்த வீட்டில் குடியேறலாம். மீதித் தொகைக்கு நாங்கள் கடன் உதவி ஏற்பாடு செய்து தருகிறோம். இத் திட்டத்தில் வீடு பதிவு செய்பவர்கள் அனைவருக்கும் ரூ. 1,000/- மதிப்புள்ள கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படும்.

வீடு கிடைக்கும் இடங்கள் :

சென்னை கே. கே. நகர் மேற்கு, விருகம்பாக்கம், வளசரவாக்கம், சாலிகிராமம், வடபழனி, குமரன் காலனி, கில் நகர் போன்ற இடங்களில் வீடுகள் கட்டித் தருகிறோம்.

ஒரு சதுர அடியின் விலை ரூ. 450/-மட்டுமே!

FIXED DEPOSITS :

நீங்கள் முதலீடு செய்யும் வைப்பு நிதித் தொகைக்கு 24% வட்டியுடன் ஊக்கப் பரிசுகளும் வழங்கப்படுகிறது. மேலும் கூட்டு வட்டி வைப்பு நிதியில் நீங்கள் முதலீடு செய்யும் தொகை 3½ ஆண்டுகளில் இரட்டிப்பாகிறது.

மேலும் விவரங்களுக்கு :

காசி ஹவுசிங் &
டெவலப்மென்ட் லிமிடெட்

மற்றும்

காசி பில்டர்ஸ்

காசி தியேட்டர் காம்ப்ளக்ஸ்,
91, 92 ஜவாஹர்லால் நேரு சாலை, அசோக் நகர், சென்னை - 600 095.
போன் : 4821969, 4822206 ஞாயிறு முழு நேரம் அலுவலகம் உண்டு.
FAX : 044-4821897

ரா. குருராஜன்

காலை ஒன்பதரை மணி அவசரம்.

"கண்மணி! கண்மணி! தேவகி.. கண்மணி எங்கே!"

தேவகி சமையலறையிலிருந்து வந்தாள். "என்ன வேணும்? கண்மணியையா கேட்க றேள்? அவள் எதிர் பிளாட் போயிருப்பா. நரசிம்மன் சாருக்கு இப்ப மாத்திரை சாப்பிடற நேரம். பில்ஸ் எடுத்துக் குடுத்துட்டு கதை பேசிண்டிருப்பா."

எதிர் பிளாட்டில் நரசிம்மன், அவர் மகன், மருமகள் மூன்று பேர்தான். மகனும் மருமகளும் வேலைக்குப் போக, நரசிம்மன் தான் வீட்டுக்குக் காவல்.

போன மாதம் பாத்ரூமில் வழுக்கி விழுந்த தில் நரசிம்மனுக்கு இடுப்பு எலும்பில் விரிசல். 21 மணி நேர வைத்தியம். முரண்டு பிடிக்கும், மூஞ்சி காட்டும், வேலைக்குப் போகும் மரு மகள். எனவே 'கொஞ்சம் பார்த்துக்கணும்' என்ற பெரியவரின் கெஞ்சலை தேவகி ஏற்றுக் கொண்டாள். அம்மாளை விட மகளே நரசிம் மனை கவனித்துக் கொண்டாள். நாலரை வயதுக் கண்மணி!

படுக்கையை விட்டு எழ முடியாத நர சிம்மனுக்கு பில்ஸ் எடுத்துத் தருவது, டிபன் கேரியர் எடுத்துத் தருவது, தாகத்திற்கு தண் ணீர் மாதிரி குட்டிக் குட்டி வேலை கள்.

உள்ளே நுழைந்தேன்.

"வாங்க!" - நரசிம்மன் வேதனையாக வரவேற்றார்.

"என்ன சொல்றா உங்க பிரெண்டு கண் மணி?"


"கம்மா சொல்லக் கூடாது. இந்தச் சின்ன வயசிலே இவ்வளவு பாசமா, இவ்வளவு அக் கறையா எனக்கு மருந்து குடுக்கணும்னு இவ ளுக்கு எப்படி சார் தோணறது? சொந்த மரு மகளே என்னை வெறுத்து, விரோதியா மதிக் கறா...

"எனக்கு கண்மணி எவ்வளவு உதவி பண்றா! அவ சொல்றபடியெல்லாம்தான் நடக்கறேன். ஆனால் நான் சொன்னதைத் தான் அவள் கேட்கறதில்லை."

"என்ன சொல்றீங்க?"

"ஒரு பிஸ்கட் பாக்கெட் குடுத்தா, வாங்க மாட்டேங்கறா சார்! 'போங்க தாத்தா! உங்க ளுக்குத்தான் உடம்பு சரியில்லே. நீங்கதான் பழம், பிஸ்கட் எல்லாம் சாப்பிடணும். நான் தான் நல்லாயிருக்கேனே! எனக்கெதுக்கு பழம், பிஸ்கட்' அப்படீங்கறா."

"சின்னவங்களுக்கு பெரியவங்க ஆசீர் வாதம் மட்டும் போதும்னு அம்மா சொல்லி



லஞ்சம்

வீட்டிற்கு வந்தோம். சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன். இமைகள் மூடின.

கண் விழித்த போது -

பக்கத்து பிளாட் பெண்மணியின் வெண் கலக் குரல்.

"என்னடி தேவகி, என்னடி ஆச்சு உன் பெண்ணுக்கு? ஆள் ஒரேயடியா மாறிட்டா?"

"என்ன சொல்றேன்?"

"எங்க வீட்டிலே காப்பிப் பொடி இல்லே, உங்கம்மா கிட்டே போயி ஒரு கரண்டி காப்பிப் பொடி வாங்கிண்டு வாடின்னு சொன்னா, எனக்கு ஒரு காட்பரீஸ் குடுங்க, இல்லாட்டா போக மாட்டேங்கறாள்! குழந்தை விளையாட்டுக்குக் கேட்கறான்னு முதல்லே நினைச்சேன். அப்புறம் பார்த்தா நிஜமாவே கேட்கறா! எங்க வீட்டிலே காட்பரீஸ் இல்லே. அதனாலே நானே வந்துட்டேன். ஒரு கரண்டி காப்பிப் பொடி தா. நாளைக்குத் தர்றேன்."

தேவகி சுவரோரம் நின்ற கண்மணியை நெருங்கினாள்.

"மாமி சொல்றது நிஜம்தானா? காப்பிப் பொடிக்கு காட்பரீஸ் லஞ்சம் கேட்டியா?"

தேவகியின் கேள்வியில் கோபம் இருந்தது. ஒரு தப்பும் இருந்தது. லஞ்சம். சின்னக் குழந்தையிடம் இப்படியா கேட்பது? குழந்தைக்கு லஞ்சம் என்றால் புரியுமா?

"ஆமா. கேட்டேன். என்ன தப்பு?" கண்மணியின் குரலில் இருந்த உறுதியில் திடுக்கிட்டேன்.

"மாமிக்குக் காப்பிப் பொடி வேணும்னா, எனக்கு காட்பரீஸ் குடுத்துத்தான் தீரணும்."

தேவகியின் கை ஓங்கியது. தடுத்தேன்.

"அவளை அடிக்காதே தேவகி! நம்ம குழந்தையை, பள்ளிக்கூடத்திலே சேர்க்கறதுக்கு முன்னயே இன்னிக்கு நாம அவளுக்குக் கத்துக் கொடுத்த முதல் பாடம் - லஞ்சம்..."

அவளுக்குப் புரியவில்லை. புரியாது. புரிய வேண்டாம்.

யிருக்கா" - கண்மணி சட்டென்று பதில் சொல்ல, ஊமையானோம்.

"மே மாசம் வர்றதே. குழந்தையை எந்தப் பள்ளிக்கூடத்திலே சேர்க்கப் போறீர்?" பெரியவர் கேட்டதும், காலை மனைவி சொன்னது ஞாபகம் வந்தது.

"நம்ம எம்.எல்.ஏ. மெட்ராஸிலிருந்து வந்திருக்காராம். அவரைப் போய்ப் பாருங்களேன். அவர் மச்சினன்தானே க்வீன்ஸ் ஸ்கூலை நடத்தறவர்? அட்மிஷன் கிடைக்கறதே கஷ்டம். எம்.எல்.ஏ. சொன்னா உண்டாம்!"

இதையே நரசிம்மனிடம் சொல்லி விட்டுக் கிளம்பினேன்.

கூடவே கண்மணி.

எம்.எல்.ஏ. வீட்டு வாசலில் எக்கச்சக்க கும்பல். தடியால் அடித்து வரிசையில் உட்கார வைக்காத குறை.

என் முறை வந்த போது மணி பன்னிரண்டு.

"என்ன வேணும்?" - கம்பீரமாகக் கேட்டார் எம்.எல்.ஏ.

"ஒரு அட்மிஷன். ஒண்ணாம் கிளாஸ். நம்ம க்வீன்ஸ் ஸ்கூல்லே..."

"உலகத்திலே என்ஜினியரிங், மெடிகல் கூட வாங்கிடலாம். ஒண்ணாம் கிளாஸ் சீட் தான் கஷ்டம்..." என்று சிரித்தார்.

"இதுதான் பாப்பாவா? நீங்க என்ன பண்றீங்க?"

"இங்கதான் பி.டபிள்யூ.டி.லே கிளார்க்."

"சரி. பக்கத்து ரூம் போங்க. பி.ஏ. இருப்பாரு."

பக்கத்து அறையில் பி.ஏ. கைநாட்டு போட்ட மனுக்களை அடுக்கிக் கொண்டிருந்தார்.

"வாங்க சார். என்ன வேணும்?"

"ஐயாவைப் பார்த்தேன். க்வீன் ஸ்கூல் அட்மிஷன்..."

அதுக்கென்ன, செய்துடலாம். நம்ம ஐயா, நம்ம தொகுதி வளர்ச்சிக்கான திட்டங்கள் நிறைய வச்சிருக்காரு. நிதிதான் ரொம்பக் குறைவா இருக்கு. அதுக்கு நீங்களும் உங்களால ஆன அன்பளிப்பு ஏதாவது..."

"எவ்வளவு?"

"எவ்வளவுன்னு எப்படிச் சொல்றது! இநூறோ, ஆயிரமோ உங்க சௌகர்யப்படி..."

"அவ்வளவு என்னாலே முடியாது. நான் ஒரு சாதாரண கிளார்க்."

"இருக்கட்டுமே. அதனாலென்ன! அட்மிஷன் வேணுமில்லை?" என்று சிரித்தார்.

சட்டென்று ஐந்து நூறுகளை எடுத்து மேசையின் மீதிருந்த கவரில் செருகினேன்.




• கடிவாளம் தளருமா?



• மறக்க முடியுமா?

● கந்தர் அழுகேசன், திருச்சுழி

சீவலப்பேரி பாண்டி போன்ற படங்கள் சமுதாயத்தில் வேண்டாத விளைவுகளை உண்டாக்கும் என்று கருதுகிறேன்; நீங்கள்?

எந்த சப்ஜெக்ட்டும் அது கையாளப்படுகிற முறையிலேதான் நன்மை அல்லது தீமை விளைவிக்கும். உதாரணமாக ராபின் ஹூட் ஒரு வழிப்பறிக் கொள்ளைக்காரன்தான் - பச்சையாகச் சொல்வதென்றால். ஆனால் கதை, பலமுறை பலரால் பல்வேறு கோணங்களில் படமாக்கப்பட்டு, உன்னதமான உணர்வுகளை ஊட்டி, மக்களை ஊக்குவித்திருக்கிறது.

● எஸ்.எஸ்.டி.ராஜன், சிறுதையூர்.

பாண்டி முன்னாள் தி.மு.க. முதல்வர் ராமச்சந்திரன் அ.தி.மு.க.வில் சேர்ந்ததைப் பற்றி?

அ.தி.மு.க. கசந்தால் தி.மு.க: தி.மு.க. கசந்தால் அ.தி.மு.க. என்பது ஒரு புறமிருக்க, பாண்டியன், கே.கே.எஸ்.எஸ்.ஆர். போலக் காணாமல் போவாரா, அல்லது காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்ப்பதில் கைவரிசை காட்டுவாரா என்பது அம்மையார் எவ்வளவு தூரம் கடிவாளத்தைத் தளர்த்துகிறார் என்பதைப் பொறுத்தது.

● வல்லி பாலகிருஷ்ணன், மதுரை.

டெலிஃபோன் சேவை வரி விதிக்கப்பட்டுள்ளதே?



• திறமை இல்லையா?

சேவை முன்னேறுகிறதோ இல்லையோ, வரி தொடரும்; கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கவும் செய்யும்.

● இரவிச்சந்திரன், கடலூர்.

இட ஒதுக்கீட்டில் தீவிரம் காட்டுகிறாரே நமது முதல்வர்?

உச்ச நீதி மன்றத்துக்கு மன்னிப்பு எழுதிக் கொடுத்த விவகாரம் மக்களுக்குத் தெரியாது என்று எண்ணுகிறார். "நீதி மன்ற ஆணையை மதிக்கிறோம். ஆனால் ஏற்றுக் கொள்ளவில்லை" என்கிறார். ஆனால் காவிரி நதி நீர் பங்கீடு பிரச்னையில் 'உச்ச நீதிமன்ற ஆணையை கர்நாடக அரசு மதிக்கவில்லை, அமுல் படுத்தவில்லை' என்று குதித்ததும் இவர்தான்! மாமியார் உடைத்தால் பொன் குடம் கதைதான்!

● கே.ஆர்.உபேந்திரன், தஞ்சாவூர்.

பிரச்னை வரும் என்று ஒதுங்காமல் மழுப்பாமல் நேரடியாகக் கூறுங்கள். உங்கள் ஆதரவு 50க்கா? 69க்கா?

என் ஆதரவு ஐம்பது சதம் ஒதுக்கீடுக்குத்தான். இறுதி லட்சியம் இதுவாக இருப்பின், அதாவது எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓர் நிறை என்பதாயின், இன்று 69 என்ன 75 சதம் வேணுமானாலும் ஒதுக்கட்டும். ஆனால் ஒரு கால வரம்பு நிர்ணயித்து படிப்படியாகக் குறைத்து வர வேண்டும். அதற்கு முன் பிற்படுத்தப்பட்டவர்களை முன்னேற்ற, சகல முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டும். 47 ஆண்டுகளில் இதைச் செய்யாத குற்றம் நமது தலைவர்களுடையதே. அரசியல் ஆதாயத்தையே எதிலும் பார்க்கும் இவர்கள், நாட்டுக்கும் மக்களுக்கும் எது ஆதாயம் என்பதை என்றுதான் பார்க்கப் போகிறார்களோ!

அப்ப 'ஜெ'க்குத் திறமை இல்லேன்றீங்களா?

● சு.சுடர்க் கொடி, காட்டுக்காணூர்.

மறைந்த கவிஞர் கா.மு.ஷெரீஃப் உங்களைக் கவர்ந்தது எப்படி?

'ஏரிக்கரையின்மேலே போறவனே, பெண் மயிலே!' ஒன்று போதுமே அவர் மறையவில்லை என்பதை உணர்த்த? அல்லது, 'வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும்' பாடலைத்தான் மறக்க முடியுமா!

● அன்புகதிரேசன், கீழ்கட்டளை.

'கடந்த ஓர் ஆண்டில் நான் பல சோதனைகளை அனுபவித்து விட்டேன்' என்கிறாரே சென்னா ரெட்டி?

ஆளுனர் இப்படிச் சொன்னார் என்று கேள்விப் பட்டதும் போயஸ் தோட்டத்தில்

ஸ்வீட் பரிமாறிக் கொள்ளப் பட்டிருக்குமே!

● **சி.மணி, புத்தனாம்பட்டி.**
சஞ்சய்தத்துக்கு பம்பாய் திரைப்படக் கலைஞர்கள் முழு ஆதரவு தெரிவித்திருப்பது குறித்து?
ஏ.கே.-47 துப்பாக்கிகளையும் வெடி குண்டுகளையும் வீட்டில் வைத்திருந்ததாகக் கண்டு பிடிக்கப் பட்டும், நீதிமன்றம் ஒரு முறைக்கு இரு முறையாக யோசித்து தீர்ப்பு வழங்கிய பிறகும் சஞ்சய்க்கு தார்மீக ஆதரவு தருவது எப்படி-புரியலீங்க.


● **பி.வேலுமணி, ஈரோடு.**
அப்ப, ஜெ.க்கு திறமை இல்லேன்றீங்களா?
புத்தி, புத்தி! அப்படி சொல்வேனுங்களா? அந்தத் திறமை எப்படி பயன்படுத்தப்படறதுங்கறதுலதாங்க கருத்து வேற்றுமை.

● **ஏ.சுகுமார், காட்டுக்கானூர்.**
ஜோதிபாசு பதினேழு வருஷம் தொடர்ந்து முதல்வராக இருக்கும் சாதனை பற்றி நமது முதல்வர் என்ன நினைத்துக் கொள்வார்?
'நிரந்தர' முதல்வருக்குப் பதினேழு வருஷமெல்லாம் ஒரு பெரிய விஷயமாகவா தோன்றப் போகிறது!

● **டி.முருகேசன், பவித்திரமாணிக்கம்.**
கால்பந்தாட்டக்காரர் எஸ்கோபாரை சுட்டுக் கொன்றது நியாயமாகுமா?
ஸேம் ஸைட் கோல் போட்டார்; வாஸ்தவம் தான், அவமானம்தான்; அதுக்காக அவரைச் சுட்டுக் கொன்று விடும் அளவுக்கா ஆட்ட வெறி ஆட்கொள்ள அனுமதிப்பது? சே! இது அதை விடவும் பெரிய தலைகுனிவு அல்லவா கொலம்பியா நாட்டுக்கு!

● **அ.ராமச்சந்திரன், பெஸண்ட் நகர்.**
வைக்கம் முகம்மது பஷீரின் படைப்புகள்...?
நாவல்கள், சிறுகதைகள், பயண அனுபவங்கள் அனைத்திலும் எளிய நடையைக் கையாண்டார். மெலிதான நகைச்சுவை அவர் எழுத்தின் ஜீவன். இவை தாம் அவரை உலக இலக்கியத் தரத்துக்கு உயர்த்தியது. சிறை சென்ற இந்த சுதந்திரப் போராட்ட வீரர், எடுபிடி ஆளாக இருந்து மாபெரும் எழுத்தாளராக உயர்ந்தது வரை தமது அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதியதால் தான் அவர் படைப்புக்களில் மனித நேயம் சுடர் விட்டது. (படத்தில் பார்க்கும் பஷீரின் உருவத்தை வரைந்தவர், மறைந்த இயக்குநர் அரவிந்தன்.)

• தார்மீக ஆதரவு?



• 74வது பிறந்தநாள்...





• பதினேழு வருஷம்...

❑ ரூ.25 பரிசு பெறுபவர்:
தேனம்மாள் ராமசாமி
61, பெருமாள்பட்டி நார்த்
மேல்த்தெரு,
ஸ்ரீவில்லிபுத்தூர் 626 125.

● **டி.ஆர்.வி.ஸ்டாலின், சிதம்பரம்.**
பிரதமரின் 74வது பிறந்தநாள் கொண்டாட்டம் எப்படி?
அதை அடக்கி வாசித்து மூன்றாண்டுச் சாதனை விழாவை தில்லியில் திமிலோகப் படுத்துகிறார்கள். எக்கச் சக்க செலவு. அதற்கேற்ற ஆடம்பரம்; விளம்பரம்! மழை பலமாகக் கொட்டினால் இந்த ஆபாசம் கரைந்து போகுமே என்ற அச்சம் வேறு நிலவுகிறது!'

● **தேனம்மாள் ராமசாமி, ஸ்ரீவில்லிபுத்தூர்.**❑
உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கு இந்தியா தகுதி பெறவில்லையே? பிறகு ஏன் பத்திரிகைகள் அதற்கு முக்கியத்துவம் தந்து பரிசுகள் தருகின்றன?
இந்தியா தகுதி பெறவில்லை என்பதால் உலக நாடுகள் ஆட்டத்தை நாம் ரசிக்கக் கூடாது என்பதல்ல. ஆனால் ரசனை என்ற பெயரில் கால்பந்தாட்டத்தையும் குதிரைப் பந்தயம் போல் ஒரு சூதாட்டக் களன் ஆக்குவதுதான் இடிக்கிறது..!

• உலகத்தரத்துக்கு...



● **என்.பாலு, திருச்சி.**
நரசிம்மராவ் மைனாரிட்டியை எப்படி மூன்று ஆண்டுகளில் மெஜாரிட்டி ஆக்கினார் என்பது அரசியல் அசிங்கம். நீங்களோ ஜெ.யை ஒப்பிட்டு ராவைப் பாராட்டுகிறீர்களே?
தப்புத்தான். ஆனால் அரசியலே ஒட்டு மொத்த அசிங்கமாய் இருக்கும்போது அசிங்கத்துக்குள் தான் சாதனைகளை அளவிட வேண்டியதாய் உள்ளது. இப்போ டி.ராமச்சந்திரனை ஜெ.இழுத்திருக்கிறாரே, அது அசிங்கமில்லையா? அதற்குமுன் பாண்டியன், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.... எட்ஸட்ரா?



பாதுகாப்பான வழியில் எந்த நிறுவனம் தன் நிதிகளை முதலீடு


உங்கள் பணத்தை ஒரு நிதி நிறுவனத்தில் டெபாசிட் செய்யும் போது நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? அதன் மூலம் ஒரு நிலையான வருமானத்தைப் பெற வேண்டும். பொருளாதார மாற்றங்கள் அந்த வருமானத்தைப் பாதிக்கக் கூடாது... என்பதுதானே! அந்த வகையில், நீங்கள் டெபாசிட் செய்ய மிகவும் ஏற்ற நிறுவனம் ஸ்ரீராம்தான். காரணம்—

ஸ்ரீராம் லாரிகளுக்கு நிதியுதவி அளிக்கிறது. லாரிப் போக்குவரத்து ரொக்க அடிப்படையில் நடைபெறும் தொழில். உரிமையாளருக்கு நிமிடந்தோறும் லாரிகள் வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதால், லாரி உரிமையாளரால் தவணைத் தொகையை சிரமமின்றி ஒழுங்காகச் செலுத்திவிட முடிகிறது. அப்படி அவரால் செலுத்த முடியவில்லையென்றால், அந்த லாரியைக் கையகப்படுத்தி விற்பனை செய்து கடனை எளிதில் வசூலித்து விட முடியும்.

லீசிங் எனப்படும் குத்தகை ஒப்பந்த முறையில் கருவிகளுக்குக் கடனுதவி அளிப்பதில் இதே அளவு பாதுகாப்பு இருக்கிறதா?

குத்தகை ஒப்பந்த முறையில் ஒருசில தொழில்கள், பொருள்கள், இடங்கள் ஆகியவற்றிற்கு மட்டுமே கடனுதவி அளிக்க முடியும். இவ்வாறு செய்யும்போது பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கடன் பெறுவோர் திருப்பித் தர தவறும்போது, அவருடைய சொத்துக்களை கையகப்படுத்தி உடனடியாக விற்பனை செய்வது எளிதல்ல. எனவே, எளிதில் விற்று பணம்பெறக்கூடிய லாரிகளுக்குக் கடனுதவி அளிப்பது மிகவும் பாதுகாப்பைப் பெறுவதாகும்.

பணத்தின் அருமை தெரிந்தவர்கள் நாங்கள். அதைவிட,



செய்கிறதோ, அதுவே.

ஸ்ரீராம் — லாரிகளுக்கு நிதியுதவி அளிப்பதில் முன்னணி நிறுவனம்

ஸ்ரீராமின் பின்பலமாக இருப்பவை — ரூ.700 கோடி மதிப்புள்ள ஸ்ரீராம் நிறுவனங்கள். ரூ.170 கோடிக்கும் கூடுதலான டெபாசிட் ஆதாரம். உங்களுக்குச் சேவைபுரிய நாடு முழுவதும் 65 அலுவலகங்கள். முழு ஈடுபாட்டுடன் உங்கள் தேவைகளை நிறைவேற்றும் ஸ்ரீராமின் பண்பாடு.

இன்று 1,50,000 டெபாசிட்தாரர்கள் ஸ்ரீராமைத் தங்கள் சொந்த நம்பிக்கைக்குரிய நிதி நிறுவனமாக எண்ணுகிறார்கள். அது உங்கள் நிறுவனமாகவும் இருக்க வேண்டாமா?

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிடெட்
ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
ஸ்ரீராம் சிடி யூனியன் ஃபைனான்ஸ் லிமிடெட்

இப்போது டெல்கோ, அசோக் லேலண்ட், சிடி யூனியன் வங்கி ஆகிய நிறுவனங்களின் சக்திமிகு பங்கேற்புடன்.

நிர்வாக அலுவலகம்: மூகாம்பிகா காம்ப்ளெக்ஸ், 4 லேடி தேசிகா ரோடு, மயிலாப்பூர், சென்னை 600 004. போன்: 4991363, 4990960, 4993968.

டெபாசிட்டுகள் திரட்டும் கேம்பெய்ன் இப்போது

For statutory details refer to our advt. in The Hindu dated 9/7/93

ங்கள் அக்கறைகளையும் உணர்ந்தவர்கள்.

HeraldVision SIL 12693 TAM

ராமன் பிரலாபித்துக் கொண்டிருந்த சமயம், விபீஷணன் கதாபாணியாக வந்து சேர்ந்தான். கன்னங்கரேலென்று பிரகாசித்த விபீஷணனுடைய பெரும் வடிவத்தைக் கண்டு வானரர்கள் இந்திரஜித்தே வந்து விட்டான் என்று பயந்து சிதறிப் போக ஆரம்பித்தார்கள். பிறகு விபீஷணன் என்று கண்டு கொண்டு அமைதியடைந்தார்கள்.

திகிலடைந்த வானரர்கள் விபீஷணனைக் கண்டதும் இவன் இந்திரஜித்தே என்று எண்ணி விழுந்து ஓடிய போது, "இதென்ன வானரர்கள் இப்படிச் சிதறி ஓடுகிறார்கள்? காரணம் என்ன?" என்று சுக்ரீவன் கேட்டான்.

"ராமலக்ஷ்மணர்கள் காயப்பட்டு வீழ்ந்திருப்பது நீ அறியாயா?" என்றான் அங்கதன்.

"அப்படியல்ல, இவர்கள் கலைந்து ஓடுவதைப் பார். வேறு காரணம் இருக்க வேண்டும்" என்றான் சுக்ரீவன்.

பிறகு விபீஷணனைக் கண்டு யார் என்று அறிந்து கொள்ளாமல் இந்திரஜித்தின் மாயையால் ஹிம்சிக்கப்பட்ட வானரர்கள் இப்படிப் பயந்து ஓடுகிறார்கள் என்பதை அறிந்தான்.

ஜாம்பவான் மூலம் வானரர்களுக்கு விஷயம் தெரியப்படுத்தி அவர்களை ஓடாமல் தடுத்து நிறுத்தி, அமைதியை ஏற்படுத்தினான்.

விபீஷணன் ராமலக்ஷ்மணர்களைப் பார்த்தான். அவர்கள் காயப்பட்டு உடல் நிறைய அம்புகள் பாய்ந்து அசையாமல் கிடப்பதைப் பார்த்து அழ ஆரம்பித்தான்.

'காரியம் எல்லாம் கெட்டுவிட்டதே! இனி என்ன செய்வது!' என்று விபீஷணன் பிரலாபிப்பதைப் பார்த்து சுக்ரீவன் அவனுக்குத் தைரியம் சொன்னான். தன் மாமன் சுஷேணனைப் பார்த்து, "நீர் ராமலக்ஷ்மணர்களை எடுத்துக் கொண்டு கிஷ்கிந்தைக்குப் போவீர். நான் இந்த ராவணனைத் தொலைத்து விட்டு, சீதையை மீட்டுக் கொண்டு வருவேன்" என்றான்.

சுஷேணன், "இந்த ராஜகுமாரர்களின் காயங்களைச் சொஸ்தப்படுத்தும் மருந்துகள் உண்டு. அந்த மூலிகைகள் இருக்கும் இடம் நம்மில் சிலருக்குத் தெரியும். இதோ இருக்கிறாரே ஹனுமான். இவரை அனுப்பினால், அந்த மருந்துகளைக் கொண்டு வருவார்" என்றான்.

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருந்த சமயம் காற்றும் கடலும் கலங்கிற்று. பார்க்கையில் மிகப் பெரிய பறவை - கருடன் - வருவதைக் கண்டார்கள்.

கருடன் வந்ததும் ராம லக்ஷ்மணர்கள் உடல்களில் பாய்ந்திருந்த பாணங்கள் அவ்வளவும் மாயமாய் ஓடி மறைந்தன. அவை யாவும் விஷ நாகங்கள், இந்திரஜித்தின் மந்திர பலத்தால் அம்புகளாக வடிவம் கொண்டு அவன் மாயையால் ராம லக்ஷ்மணர்கள் உடலில் பாய்ந்திருந்தன. தங்களுடைய யமனாகிய கருடன் வந்ததும் ராம லக்ஷ்மணர்களின் தேகங்களை விட்டு ஓடி விட்டன.

பிறகு கருடன் ராமலக்ஷ்மணர்களைத் தடவிக் கொடுத்து அவர்களுக்குச் சகல சக்தியும் மறுபடி உண்டாக்கி விட்டான். காயங்கள் எல்லாம் உடனே போய் முன்னைவிட பலமும் தேஜஸும் பெற்று எழுந்தார்கள்.

"எங்களுக்கு இந்த உபகாரம் செய்த நீ யார்?" என்று ராமன் கேட்டதற்கு கருடன், "நான் உனக்குப் பரம சிநேகிதன், தோழன், உனக்கு மங்களம். நான் போய் வருகிறேன். யுத்தத்தில் வெற்றி பெறுவாய், பிறகு நான் யார், நீ யார் என்பதைப் பேசிக் கொள்ளலாம்" என்று ஹரிவாகனன் சொல்லிச் சென்று விட்டான்.





ராம லக்ஷ்மணர்கள் மறுபடி பூரண பலத்துடன் ஆரோக்கிய மடைந்து நின்றதும் வானரர்கள் மிக மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைந்து, ராவணனுடைய கோட்டையைத் தாக்கினார்கள்.

87. "நாளை வா!"

அரமனைக்குள்ளிருந்த ராவணன், வானரர்களுடைய கோஷங்களையும் ஆரவாரத்தையும் கேட்டு ஆச்சரியப்பட்டான். பக்கத்திலிருந்த அரக்கர்களுக்குச் சொன்னான் : "இதுவென்ன வியப்பாக இருக்கிறது! என்ன காரணம் இந்த வானரர்கள் இப்படிச் சந்தோஷப்படுவதற்கு? ராமலக்ஷ்மணர்கள் காயப்பட்டு, பிரக்ஞையற்றுக் கிடக்க, இவர்கள் கவலைப் பட்டுக் கலவரப்பட வேண்டிய சமயத்தில் இப்படி உற்சாகமாகக் கூச்சலிடுவதின் காரணம் என்ன? ஏதோ விசேஷம் நடந்திருக்கிறது என்பது நிச்சயம். பார்த்து வாருங்கள்!" என்றான்.

சில ராக்ஷசர்கள் மதிலின் மேல் ஏறிப் பார்த்து ராவணனிடம் திரும்பி வந்து, பயந்து பயந்து சொன்னார்கள் : "அரசனே! சுக்ரீவன் தலைமையில் வானர சேனை மிக உற்சாகமாகக் கோட்டையைத் தாக்குகிறார்கள். ராம லக்ஷ்மணர்கள் உயிருடன் இருக்கிறார்கள். கட்டப்பட்ட யானைகள் கயிற்றை அறுத்துக் கொண்டு வெளியேறிய மாதிரி ராம லக்ஷ்மணர்கள் தங்களைக் கட்டிய நாகபாசங்களையெல்லாம் அறுத்து விட்டுச் சேனையுடன் வந்திருக்கிறார்கள். இளஞ் சிங்கங்களைப் போல் திரிகிறார்கள். இந்திரஜித்து அவர்களைக் கட்டிய பாசங்கள் வீணாயின" என்றார்கள்.

ராவணனுடைய முகம் வாடிற்று. கவலை கொண்டான். "இதுவரையில் எவனும் இந்த பாணங்களினின்று தப்பினது

இடையாது. நீங்கள் சொல்லுவது வியப்பாக இருக்கிறது. இந்த பாணங்களே வீணாயிற்று என்றால் ஆபத்துத்தான்" என்றான்.

பிறகு ரோஷம் மேலிட்டு, "ஏய், தூம்ராக்ஷனே! நீ இருக்க நான் ஏன் கவலைப்பட வேண்டும்? வேண்டிய ஆட்களைக் கூட்டிக் கொண்டு உடனே போய் இவர்களை வதம் செய்துவிட்டுத் திரும்புவாய்" என்றான்.

தூம்ராக்ஷன் மகிழ்ச்சியடைந்தான். தனக்கு இந்தக் கவுரவம் அரசன் தந்தானே என்று பெருமைப் பட்டுச் சேனையை கூட்டிக் கொண்டு புறப்பட்டான். கோட்டைக்கு வெளியே சென்று வானரர்களுடன் யுத்தம் செய்தான்.

ஹனுமான் தலைமையில் மேற்கு வாயிலைத் தாக்கிக் கொண்டிருந்த வானரர்களை எதிர்த்தான். அவ்விடம் நடந்த பெரும் யுத்தத்தில் இரு பக்கத்திலும் ஏராளமான உயிர்ச்சேதம் நேர்ந்தது. முடிவில் தூம்ராக்ஷன் மாருதியால் கொல்லப்பட்டான். அரக்கர்களில் சிதறியோடிக் கோட்டைக்குள் புகுந்து தப்பினவர்கள் தவிர, பெருந் தொகையினர் மாண்டார்கள்.

இந்தத் தோல்வியை அறிந்து இராவணனுக்கு அடங்காக் கோபம் மேலிட்டது. வாய் பதற வஜ்ரதம்ஷ்ட்ரனை நோக்கி, "வீர சிகாமணியே, உடனே போ! இனி தாமதம் செய்வதற்கில்லை, இந்தத் துஷ்டர்களை நிர்மூலம் செய்து விட்டு மறுவேலை பார்ப்பாய்!" என்று உத்தரவிட்டான்.

வஜ்ரதம்ஷ்ட்ரனும் அரசனை பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்து, பெருஞ் சேனையைக் கூட்டிக் கொண்டு தெற்குக் கோட்டை வாசல் வழியாகப் புறப்பட்டான். அங்கே அங்கதனை எதிர்த்தான்.

வஜ்ரதம்ஷ்ட்ரனுடைய தலைமையில் ராக்ஷசர்கள் கோரமான யுத்தம் செய்தார்கள். எண்ணற்ற வானரர்கள் மாண்டனர். ஆயினும் வானர சேனை பின்வாங்கவில்லை. பாறைகளையும் மரங்களையும் பிடுங்கியெடுத்து வீசி எண்ணற்ற அரக்கர்களைக் கொன்றார்கள். இரு தரப்பிலும் தீவிர முறையில் யுத்தம் நடந்தது. முடிவில் அங்கதனுக்கும் அரக்கத் தலைவனுக்கும் கோர யுத்தம் நெடு நேரம் நடந்தது. வஜ்ரதம்ஷ்ட்ரன் கொல்லப்பட்டான். அரக்கர் சேனை சிதறி ஓடிற்று. அங்கதனைச் சூழ்ந்து கொண்டு வானரர்கள் வீர கர்ஜனை செய்தார்கள்.

"யுத்தத்தில் நிபுணனாகிய அகம்பனன் பயங்கர ராக்ஷசர்களைப் பொறுக்கி அழைத்துச் சென்று, இந்த வானரப் படையையும் ராமனையும் சுக்ரீவனையும் வதம் செய்து வரச் சொல்வாய். அகம்பனனுடைய வீரமும் சாமர்த்தியமும் வீண் போகாது" என்றான் ராவணன்.

பிரஹஸ்தன் ராவணனுடைய உத்தரவுப்படி அகம்பனன் தலைமையில் சேனையை அனுப்பினான். அகம்பனன் தன் பெயருக்குத் தகுந்தபடியே அசைக்க முடியாத யுத்த சாமர்த்தியம் பெற்றவன். ஆயுதங்கள் எடுத்துப் பெரும் படையுடன் சென்றான். கெட்ட நிமித்தங்கள் தோன்றின. அதை அவனாவது அவன் படையாவது கொஞ்சம்கூட லட்சியம் செய்யவில்லை. அரக்கர்கள் செய்த சிம்மநாதம் கடலைக் கலக்கிற்று.

பெரும் போர் நடந்தது. ரத்த வெள்ளம் ஓடிற்று. ஆகாயம் அளாவச் செந்தூள் கிளம்பிற்று. இருள் மூடிக் கொண்டது. இரு கட்சியிலும் கணக்கற்றவர்கள் மாண்டார்கள். வானர வீரர்களாகிய குமுதன், நளன், மயிந்தன், துவிவிதன் இவர்கள் அகம்பனனை எதிர்த்தார்கள். அகம்பனனும் மகா வீரத்துடன் அவர்களை எதிர்த்தான்.

வானர வீரர்கள் பலமாகத் தாக்கப் பட்டு ஓட ஆரம்பித்தார்கள். அப்போது ஹனுமான் வந்து சேர்ந்தான். அகம்பனன் சரமாரி பொழிந்தான். ஹனுமான் அதை லட்சியம் செய்யாமல் ஒரு பெரும் பாறையை எடுத்துக் கரகரவென்று சுழற்றி, அகம்பனன் மேல் விட்டெறிந்தான். அரக்கன் தன் பாணங்களால் அதைத் தடுத்துப் பொடி செய்து விட்டான். ஹனுமான் தன் தேகத்தை வளர்த்துக் கொண்டு சூரியனைப் போல் கண் கூசும்படியாகப் பிரகாசித்தான். ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கி, வீசி எறிந்து அரக்கனைக் கொன்று விட்டான். ராக்ஷச சேனை பூகம்பத்தில் மரங்கள் அசைவது போல் நடுங்கி ஓடினார்கள். ஓடும் போது பின்னால் பார்த்துக் கொண்டே ஓடினார்கள். அரக்கர்களில் மாண்டவர்கள் போக எஞ்சியவர்கள் கோட்டைக்குள் புகுந்து கொண்டு தப்பினார்கள். ஹனுமானை வானரர்கள் எல்லாரும் கொண்டாடி ஆரவாரித்தார்கள்.

(தொடரும்)


இவர்கள் ஒன்று சேர்ந்தால் – போட்டி முடிவு

ரூ. 250/- பரிசு பெறும் உரையாடல் :

கலைஞர் : கோழி மிதித்துக் குஞ்சு சாகுமா? வானி முகந்து கிணறு வற்றுமா? போனி தின்று வயிறு வலிக்குமா? பிரிந்து போன எனது தம்பி இதோ, மீண்டும் என்னிடம்! தம்பி உடையான் படைக்கு அஞ்சான்; மகன் உடையான் மன சாட்சிக்கு அஞ்சான். தம்பி வா! தலைமை ஏற்க அல்ல என்று கூறி அழைக்கிறேன்!

வை.கோ. : சகுனிகள் செய்த சதி! மதி வந்தது. மதி உள்ள முகவுடன் மதிமுகவை இணைக்கிறேன். தவறு பொறுத்து தாயுள்ளத்தோடு ஏற்றுக் கொண்ட தந்தையுள்ளமே! டீ.வி.யும் தடங்கலும் போல பல்லவனும் பிரேக்டவுனும் போல நம்மை யாரும் பிரிக்க முடியாது! வாழ்க நீ!

- எம்.ஆர். ஜெகந்நாதன்,
1, பிள்ளையார் கோவில் வீதி,
கோபி - 638 452.
(பெரியார் மா.வ.)



இரு ஆறுதல் பரிசுகள் :
தலா ரூ. 25/-

1. கலைஞர்: தமிழா கேள்! தம்பி கேள்! கழகத்தை விட்டுப் பிரிந்து சென்று தனிக் கட்சி தொடங்கிய தம்பி வைகோ. அக்கட்சிக்கு ம.தி.மு.க. என்று பெயர் வைக்கும் போதே எனக்குத் தெரியும். இது மறுமலர்ச்சி தி.மு.க. அல்ல! மறுபடியும் தி.மு.க. என்று.

எனது உறைக்குத் திரும்பும் எனது போர்வாளை வாழ்த்தி அழைக்கிறேன்.

வை.கோ. : வாள் இல்லாத வெற்று உறையுடன் இருக்கும் தலைவரை வா(ள)ழ வைக்கவே, இந்தப் போர்வாள் உறைக்குத் திரும்பியது. தலைவர் கூறியது போல் ம.தி.மு.க. என்று பெயர் வைத்ததே "மறுபடியும் தி.மு.க." என்றுதான். தலைவர் என்னை இணைத்துக் கொண்டதால் இன்றுதான் நாடு மறுமலர்ச்சி தி.மு.க.வைக் காண்கிறது.

- எஸ். நரசிம்மன்,
1760, E.W.S. (வசந்த) காலனி,
அண்ணாநகர் மேற்கு, சென்னை - 600 040.

2. வைகோ.: பால் ஊட்டி வளர்த்த தாயைக் கால் நீட்டி உதைத்தது இந்தக் குழந்தை என்பதற்காக கோபாலபுரத்தார், கோபால்சாமியைக் கோபப்படுவாரா? அவர் கருணை நிதி! இனி அவரே கதி!

கலைஞர் : தம்பி! நீ கட்சியில் இல்லாத நாட்களை முன்பொருமுறை எனக்குத் தெரியாமல் ஈழத்திற்குச் சென்று வந்ததைப் போல் எண்ணிக் கொள்கிறேன். ம.தி.மு.க. என்பது மறுபடியும் தி.மு.க. என்று எனக்கு அப்போதே தெரியும்.

- எஸ். ராஜகோபாலன்,
'காவியம்', 5, நேதாஜி தெரு,
சீனிவாசநகர் - 600 063.

கப்ஸா கலக்காத கனவு



பரிசு ரூ. 250/-

உறக்கத்தில் கனவு வருவது உடம்புக்கு நல்லது என்று டாக்டர்கள் சொல்கிறார்கள்.

உங்களுக்கு வந்த, மறக்கமுடியாத கனவைச் சுருக்கமாக (10 வரிகளுக்குள்) எழுதி யனுப்புங்கள். சிறந்த கனவுக்குப் பரிசு.

தயவு செய்து கப்ஸா வேண்டாம். (டூப்ளிகேட் கனவுகளைச் சுலபமாகக் கண்டுபிடித்து விட ஒரு கருவி வைத்திருக்கிறோம்!)

ஆசிரியர் தீர்ப்பே இறுதி. முடிவு தேதி 30.7.94. உறையின் மேல் 'கப்ஸா கலக்காத கனவு' எனக் குறிப்பிட்டு, தனித்தாளில் எழுதி, கூப்பனை ஒட்டி அனுப்புங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ரஜனீஷ் பாலிடிக்ஸ்!

பகவான் ரஜனீஷ், 1990 ஜனவரியில் மறைந்ததும், அவரது 'ஓஷோ கம்யூன்' சீடர்களுக்குள் வாரிசு உரிமைப் போர் தொடங்கி விட்டது. ரஜனீஷ், தமக்குப் பின் ஆசிரமத்தை நிர்வகிக்க 21 பேர் கொண்ட ஒரு குழுவை நியமித்ததாகச் சொல்கிறார்கள். இன்றளவும் ஆசிரமத்தை நிர்வகித்து வரும் இக்குழுவுக்கு எதிராக இரண்டு சாமியார்கள் தலைமையில் ஒரு புதிய கோஷ்டி இப்போது கிளம்பி இருக்கிறது. இந்த எதிர்ப்பாளர்கள், ஆசிரமத்தை விட்டு வெளியேறி, புது அமைப்பைத் தொடங்கப் போகிறார்களாம்!

பம்பாயிலுள்ள தாராவி குடிசைப் பகுதியினருக்கு, லேவாதேவிக்காரர்கள்தான் பிரதான வில்லன்கள். அவசரத்துக்கு அவர்களிடம் கடன் வாங்கி விட்டு, இவர்கள் படும் சிரமம் சொல்லி மாளாது. 1979ல் அம்சா என்ற பெண்மணி, ஒரு லே. தே. காரரிடம் 10,000 வாங்கிவிட்டு மாதாமாதம் 1,500 வட்டி கொடுத்து வந்திருக்கிறார். சமீபத்தில் இவர் கடன் தொகையை அடைத்த போது, வட்டி மட்டுமே ரூபாய் இரண்டரை லட்சத்திற்கு மேல் தந்திருப்பது தெரிய வந்தது. 'ஏமாளி' என்பதை விட ஒஸ்தி வார்த்தை ஏதும் இருக்கிறதா அகராதியில்?

நம்மவர்களைப் போலவே மகாராஷ்டிராவில் லாட்டரி மோகம் வெகு அதிகம். மாநில அரசின் பரிசுச் சீட்டுகளைவிட, மகாராஷ்டிராவில் மற்ற மாநில - தனியார் பரிசுச் சீட்டுகள் இன்று அதிகம் விற்கத் தொடங்கியிருப்பது, எதிர்க்கட்சிகளின் ஏகோபித்த கண்டனத்தைப் பெற்றுள்ளது. காரணம், மொத்த விற்பனையைக் கணக்கில் கொண்டால் மாநில அரசுக்கு லாபம் பெரிதாக ஒன்றும் இல்லை என்பதே. தநா. போலவே, தனியார் லாட்டரிகளுக்கு இங்கும் விரைவில் தடை வரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

திரையுலகப் பிரச்னை, பம்பாயையும் விட்டுவைக்கவில்லை. கடந்த மே மாதம் முதல் புதிய படங்கள் ஏதும் இங்கே தொடங்கப்படவில்லை. தயாரிப்பாளர் - வினியோகஸ்தர் இடையே கடும் மோதல். டஜன் கணக்கில் தயாரான படங்கள் முடங்கிப் போக, விபரீதம் உணர்ந்து பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள். முடிவாக, படம் ரிலீஸ் ஆகி, இரண்டு வாரம் வரை வீடியோ கேஸட் வரக்கூடாது என்றும் ஆறு மாதங்கள் வரை கேபிள் டீவிக்குத் தரக்கூடாது என்றும் தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.



• ரஜனீஷ்

இவ்வாண்டு கோடை வெப்பம், தில்லியை ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. தோதாக பயங்கர பவர்கட் பிரச்னை வேறு. மந்திரிகள் வாழும் பகுதிகள் தவிர மற்ற இடங்களில் எப்போதும் மின்வெட்டு! தில்லி முதல்வர் குரானா, மின்சார சிக்கனம் பற்றி மேடைகளில் முழங்கினாலும், அரசு அலுவலகங்களிலும் தெருக்களிலும் விளக்குகள் அநாவசியத்துக்கு எரிந்து மின்சாரம் வீணா படிதான் இருக்கிறது. மக்களுக்கு மட்டும் தீராத கஷ்டம். எப்போதும் மின்வெட்டு.

பின் தங்கிய மற்றும் முஸ்லிம் சமூகத்தினருக்காக 'ஹம்தர்த் ஸ்டடி சர்க்கிள்' என்ற ஒரு பயிற்சிப் பள்ளி, தில்லியில் அரசு உதவியுடன் நடத்தப்படுகிறது. இவ்வாண்டு சிவில் சர்வீஸ் தேர்வுகளில் தேறிய 22 முஸ்லிம்களில் 13 பேர் இங்கிருந்து வந்தவர்கள்தான். ஹாஸ்டல், லைப்ரரி வசதிகள் தவிர, திறமை வாய்ந்த ப்ரொபஸர்கள் இப்பள்ளியின் பக்கபலம். சாப்பாட்டுச் செலவுக்கு ரூ. 550 வாங்குகிறார்கள். ஏழைகளுக்கு அது கூட இல்லை! இதற்குப் பெயர்தான் சேவை.

கேரள அரசின் நான்காம் வகுப்பு பாடப் புத்தகத்தில், நமது தேசியக் கொடி சிவப்பு, வெள்ளை, பச்சை நிறங்களைக் கொண்டது என்று வெளியாகியுள்ளது. தேசியக் கொடியின் நிறம் மாற்ற ஏதும் முயற்சி நடந்ததா என்ன, சமீபத்தில்?

பம்பாயிலிருந்து :
வித்யா சிவகுமார்
தில்லியிலிருந்து : **ராஜீவி நரசிம்மன்**
திருவனந்தபுரத்திலிருந்து :
எஸ். எஸ். மணி

கலக்குது பார் கல்கி ஸ்டைலே...!

♦ புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைமைச் செயலாளர் ஹரிபாஸ்கரைப் பற்றி சர்ச்சைக்கிடமான தகவல்களை மட்டுமே ஏனைய பத்திரிகைகள் எழுதியிருக்கும்போது, நீங்கள் மட்டும் அவரின் மற்றொரு பக்கத்தை எழுதி எங்களின் பாராட்டைப் பெறுகிறீர்கள்.

மொரட்டுப்பாளையம், க.நா. இராஜேஸ்வரன்.

♦ அரசின் சாதனைப் பட்டியல் கண்கட்டு வித்தை என்பது ஏற்கெனவே அறிந்த விஷயம் தான். ஆனால், இந்த விளம்பர கலாட்டா அதிகப்பிரசிங்கமே. எடுத்துக்காட்டியவிதம் சிறப்பு.

ஏத்தாப்பூர், செவேகா.

♦ நூற்றியொரு தடவை - ஆயிரத்தியொரு தடவை - ஏன் இலட்சத்து ஒரு தடவை கூட இந்த விளம்பரத்தில் வீணாகும் செலவினங்களைப் பற்றி 'எல்லாம் நம் வரிப் பணமய்யா வரிப்பணம்' என்று தலையங்கத்தில் தலை தலையாய் அடித்து விட்டீர்கள். யார் கேட்கப் போகிறார்கள். செவிடன் காதில் ஊதின சங்குதான்!

கோவை - 16, கா. க. வே. ரோஹிணி.

♦ அன்னை தெரசா முதல் பகுத்தறிவுப் பாசறை தந்தை பெரியாரின் சீடர் வீரமணி வரை தினந் தோறும் தமிழக முதல்வரின் சேவையைப் பாராட்டி வாழ்த்துகிறார்கள். ஆனால் கல்கிக்கோ கசக்கிறது. சகோதர தினசரிகளுக்கு அரசு தயவில் கணிசமான வருவாய் என ஆறுதல், தனக்குக் கிடைக்கவில்லை என்ற வயிற்றெரிச்சல்.

சென்னை - 89, எஸ்.நீலமேகம்.
ஒன்றியத் தலைவர் அ.இ.அ.தி.மு.க.
மேற்கு வில்லிவாக்கம்.

♦ 'ஜ பேஃபோன்ட் நோ' ஸ்பெஷல் கோ ஆப்டெக்ஸ் எம்.டி.யின் பேட்டி ரசிக்கும்படி இருந்தது. 'ஸ்பெஷல் டிசைன்'ப்போல!

சென்னை-91, ஜயாறு வாசுதேவன்.

♦ திரையுலக மார்க்கண்டேயர் கோபாலசந்தர் கல்கியில் அனுபவத் தொடர் எழுதப் போவது கண்டு மிக்க மகிழ்ச்சி. தொடரோடு ஒன்றிவிட, ஒரு மாதம் காத்திருக்க வேண்டுமே என்பதுதான் கவலை.

பெருஞ்சேரி, என். முருகேஷ்.

♦ இன்றைய பிரபலங்களின் தற்போதைய முகங்களே எங்களுக்குச் சரியாகத் தெரியவில்லை; இந்த நேரத்தில் நீர் பிரபலங்களின் பால்ய காலத்துப் படங்களைத் தந்து, போட்டி வைத்து, இந்த வெயில் காலத்தில் எங்களைத் தலையைப் பிய்த்துக் கொள்ள வைத்துள்ளீரே!

பவித்ரமாணிக்கம், ஆர்.பி. அஜய்சிங்.

♦ மல்லி மணம் கொண்ட எல்வி.பிரசாத் அவர்களது சாதனைகள் இமயம் போல் இருந்தாலும் சுருக்கமாக எழுதி விளங்க வைத்து விட்டீர். ரஜினியும் பிரசாத் சாரும் சேர்ந்துள்ள படம் செய்திக்கு மேலும் மெருகூட்டியது.

ஏத்தாப்பூர், காம்ஸிப்ரியன்.

♦ ரயில் டிரைவரோடு ஒரு பயணம், கல்கி நிருபர் மட்டுமா சென்றார்? எங்களையும் அல்லவா என்ஜினுக்குள் அழைத்துச் சென்று விட்டார்!

தோழகிரிப்பட்டி, ஆர். முத்துக்குமரன்.

♦ என்ஜின்டிரைவர்களின்கடினஉழைப்பு பற்றிய கட்டுரை வித்தியாசமாக இருந்தது. அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசு பரிகாரம் தேட வேண்டும்.

சென்னை-78, வி. சீனிவாசன்.

♦ சிக்கு புக்கு சிக்கு புக்கு ரயிலே.. கலக்குது பாரு கல்கி ஸ்டைலே..

கர்னால், சி.மகேஷ்.

♦ யோகியின் 'குழந்தை' சிறுகதைகுடிகாரக் கணவர்களால் குடும்பங்களுக்கு ஏற்படும் சீர்கேட்டை விளக்கியிருந்தது. இரு தாய்களின் கோணத்தில் சொல்லப்பட்டிருந்த விதம் சிறப்பு.

திருவெண்ணெய்நல்லூர், வைத்யா.


வட்டமேஜை

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

உங்கள் மழலைச் செல்வம் அவனது மென்மையான மிருதுவான உலகம்.





லேபிளில் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகளை கவனமாய் பின்பற்றுங்கள்.

அவனுக்கு நீங்கள் கொடுக்கும் முதல் திட உணவும் அவனைப் போலவே மிருதுவாக இருக்கட்டும்.

உங்கள் குழந்தைக்கு இப்பொழுது 4 மாதங்களாகிறது. இச்சமயம் அவனுக்கு தாய்ப்பால் மட்டுமல்லாமல் வேறு வகை உணவும் தேவை. ஏதாவது ஒரு திட உணவு. அதே சமயம் நீங்கள் அவனுக்கு தரும் திட உணவு மிருதுவானதாகவும் போஷாக்கு நிறைந்ததாகவும் இருந்திடல் அவசியம்.

ஆம், நெஸ்டம் தரும் போஷாக்கு போல - இது எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம். அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் நெஸ்டம், உங்கள் மழலைச் செல்வத்தின் மிகச் சரியான முதல் திட உணவாக அமைகிறது.

பாலுடன் நெஸ்டம் சேர்த்து உங்கள் குழந்தைக்கு ஸ்பூனால் ஊட்டுங்கள். இந்த ஆகாரத்தின் மூலம் அவன் வேகமாய் வளர்வதற்கு வேண்டிய எல்லா போஷாக்கு சக்திகளும் கிடைக்கின்றன.

உங்கள் செல்வ மகன் வளர வளர, நீங்கள் அவனுக்கு படிப்படியாய் புதிய ருசியுள்ள உணவு வகைகளை அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வகை ருசியை நீங்கள் எளிதில் மிருதுவாய் ஆரம்பிக்க நெஸ்டம் உங்களுக்கு உதவுகிறது. நெஸ்டம், பால் சேர்க்காத ஒரே குழந்தை ஆகாரமாய் இருப்பதால், இதை மிகச் சுலபமாய் மற்ற உணவு வகைகளுடன் கலந்திட முடியும். உதாரணமாய், குழைய வைத்த வாழைப்பழம் காய்கறிகள் மற்றும் தயிருடன் உங்கள் குழந்தைக்கு நெஸ்டம் கொடுங்கள். நெஸ்டம் தரும் எல்லா வித மிருதுவான தனிச் சிறப்பான போஷாக்குகளுடன் அவன் வளருவதைப் பாருங்கள்.

நெஸ்டம்

எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம்.

இலவசம்
நெஸ்டம் செய்முறை
புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25.
புதுடில்லி-110016

TS McCann/NESTUM/1492 TM

முக்கிய அறிவிப்பு : உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால்தான் மிகவும் சிறந்தது. உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதில் இருந்து தாய்ப்பாலுடன் குழந்தைத் தானிய உணவும் கொடுங்கள்